# 1

அவனைக் கண்டுபிடிப்பது அவர்களுக்குச் சுலபமாக இருக்கவில்லை. அந்த வேலை மூன்று திறமை வாய்ந்த துப்பறியும் நிறுவனங்களிடம் சரியாக ஐம்பத்தியோரு நாட்களுக்கு முன் தரப்பட்டிருந்தது. நேற்றிரவு பத்தரை மணிக்குத் தான் அவன் இருக்கும் இடத்தை ஒரு துப்பறியும் நிறுவனம் கண்டுபிடித்துத் தெரிவித்தது. அரை மணி நேரத்தில் அவசர அவசரமாக அவர்கள் பத்து பேர் சென்னையிலிருந்து மூன்று கார்களில் கிளம்பி அதிவேகத்தில் வந்தும் இந்த ஊர் வந்து சேர, காலை ஒன்பது மணி ஆகி விட்டது. அவர்கள் அவன் வசிக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்த போது தான்

அவன் வீட்டைப் பூட்டி விட்டு வெளியே வந்து கொண்டிருந் தான். அவனுடைய அலுவலகம் ஊழியர்களுக்காக ஏற்பாடு செய்திருந்த டாக்சி வெளியே நின்று கொண்டிருந்தது. அந்த டாக்சியில் ஏற்கெனவே இரண்டு ஊழியர்கள் அமர்ந்திருந் தார்கள். வீதியில் ஆள்நடமாட்டமும் அதிகமிருந்தது. அதி கமாக யார் கவனத்தையும் கவராமல் அவனைப் பிடித்து அழைத்து வரும்படி அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக் கப்பட்டிருந்ததால் அந்த நேரத்தில் அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை. அவர்களுடைய மூன்று கார்களையும் வேறு வேறு இடங்களில் தூரத்திலேயே நிறுத்தி விட்டார்கள். அவன் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டே அந்த டாக்சியில் ஏறிக் கொள்ள டாக்சி அங்கிருந்து கிளம்பியது.

வந்திருந்த பத்து பேர்களின் தலைவன் ஒரு காரில் உள்ள வர்களுக்குச் சைகை காட்ட அந்தக் கார் சிறிது இடைவெளி விட்டு அந்த டாக்சியைத் தொடர ஆரம்பித்தது. அவர்கள் பின் தொடர்வதை அவன் அறிவதை அவர்கள் விரும்ப வில்லை. அதனால் மிக நெருங்கி விடாமல் அதே நேரத்தில் அதிகம் பின் தங்கி விடாமல் தொடர்ந்த அந்தக் காரில் உள்ளவர்கள் அவன் எந்த நேரமும் டாக்சியை நிறுத்தி இறங்கி ஓடித் தப்பிக்க வாய்ப்பு இருப்பதாகவே எண்ணி னார்கள். அவர்கள் பிடிக்க வந்த அந்த ஆள் சாதாரண மனி தன் அல்ல. ஜகதலப்பிரதாபன். எப்போது என்ன செய்வான்

என்று யாராலும் சொல்ல முடியாது. அவனைத் தப்பிக்க விட்டால் அவர்கள் நிலைமை பரிதாபமாகி விடும். அதனால் கவனத்தை வேறெங்கும் சிதறாமல் சர்வ ஜாக்கிரதையுடன் அவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

அவன் ஒரு தடவை கூடப் பின்னால் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் தன் சகாக்களுடன் சுவாரசியமாக என்னவோ பேசிக் கொண்டிருந்தான். வழியில் வேறிரண்டு ஊழியர்களை ஏற்றிக் கொண்டு ஆறு கிலோமீட்டர் பயணித்த பின் அவன் வேலை செய்யும் நிறுவனம் முன்பு டாக்சி நின்றது. தொடர்ந்து காரில் வந்தவர்கள் சற்று தூரத்திலேயே தங்கள் காரை நிறுத்திக் கொண்டார்கள்.

அவனும் அவன் சகாக்களும் இறங்கிப் பேசிக் கொண்டே நிறுவனத்தின் பெரிய கேட்டைத் தாண்டி உள்ளே சென்றார்கள். காரில் இருந்தவர்கள் அவன் மீது வைத்த கண்களை எடுக்கவில்லை. அவன் உள்ளே போன பிறகு காரில் இருந்தவர்களில் ஒருவன் தங்கள் தலைவனுக்குப் போன் செய்தான். ”இறங்கி உள்ளே போயிட்டான்”

தலைவன் சொன்னான். “சரி வாசலையே கண்காணிச்சுட்டு இருங்கள். நாங்களும் வந்துடறோம்....”

ஒரு காரையும், மூன்று ஆட்களையும் அந்த வீட்டருகே காவலுக்கு நிறுத்தி விட்டு அவன் தன் காரில் இருந்த சகாக் களுடன் கிளம்பி அந்த நிறுவனத்திற்கு முன்னால் போய்ச் சேர்ந்தான். உள்ளே போகின்றவர், வருகின்றவர்களை மிக வும் கவனமாக அவர்கள் கண்காணித்துக் கொண்டிருந்த னர். அவன் வெளியே வரவில்லை. அந்த நிறுவனத்திற்குள் ஊழியர்கள் உள்ளே போன பின்பு அதிகமாக மற்ற ஆட் கள் உள்ளே போகவில்லை. இரண்டு குரியர் ஆட்களும், ஒன்பது வேறு ஆட்களும் மட்டும் தான் உள்ளே போய் வந்தார்கள். நிறுவனத்தின் முகப்புச் சுவரில் ஜன்னல்கள் ஏதும் இல்லை. பக்கவாட்டுச் சுவர்களில் தான் ஜன்னல்கள் இருந்தன. அந்த ஜன்னல்கள் வழியாக எங்கிருந்து பார்த்தா லும் தெரியாதபடி தான் எச்சரிக்கையுடன் அவர்கள் காரு டன் நின்றிருந்தார்கள். அவன் ஜன்னல் வழியாகப் பார்த்துத் தெரிந்து கொள்ள வழியில்லை.

பெரும்பாலும் அவன் வேலை விட்டு வெளியே வருவதற்கு இரவு எட்டு மணி ஆகி விடும் என்று அந்தத் துப்பறியும் நிறுவனம் கண்டுபிடித்துச் சொல்லி இருந்தது. இடைப்பட்ட நேரத்தில் அவன் வெளியே வருவதில்லை எனவும், நிறுவ னத்தின் உள்ளேயே கேண்டீன் இருக்கிறது என்றும் அங் கேயே காலை, மதிய, இரவு சாப்பாட்டை முடித்துக் கொண்டு தான் கிளம்புவான் என்றும் கூடத் தெரிவித்திருந்தது.

ஆனாலும் அவனை நம்ப முடியாது. அவர்கள் வந்திருப்பது தெரிந்தால் எப்படியாவது தப்பிச் செல்ல முயற்சி செய்வான்... செய்யக்கூடியவன் தான்.

இரவு ஏழரை மணியானவுடன் அவர்களில் தலைவன் காலையில் இன்னொரு காரில் முதலில் பின் தொடர்ந்த வர்களிடம் சொன்னான். "நீங்கள் போய் அவன் வீட்டைத் தாண்டி தெருக்கோடியில் காத்திருங்கள். காலையில் ஒரு வேளை உங்கள் காரை அவன் கவனித்திருந்து திரும்பவும் அவன் கண்ணில் பட்டால் உஷாராகி விடுவான்."

அந்தக் கார் அங்கிருந்து போய் பத்து நிமிடங்கள் கழித்து நிறுவன ஊழியர்களை அழைத்துப் போகும் டாக்சி வந்து சேர்ந்தது. அப்போது தான் காலையிலிருந்து அந்த வீட் டைக் கண்காணித்து வந்தவர்களில் ஒருவன் போன் செய் தான். "அந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக் காரன் வீட்டைக் காலி செய்கிறான் போல இருக்கு. ஒரு டிரான்ஸ்போர்ட் லாரி வந்து நின்னிருக்கு. நாலு கூலி ஆள்களும் வந்திருக் காங்க..."

அவர்களில் தலைவன் பெருமூச்சு விட்டான். அவர்கள் திட் டம் அவர்கள் தேடி வந்த ஆள் வீடு போய்ச் சேர்ந்த

வுடன் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கோழியை அமுக்குவது போல அமுக்கிக் காரில் போட்டுக் கொண்டு போக வேண்டும் என்பதாய் இருந்தது. தெருவில் ஆட்கள் நடமாட்டம் இல்லாமல் இருந்தால் அவன் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே போவதற்குள் அதைச் செய்து முடிக்க நினைத்திருந்தார்கள். ஒருவேளை தெருவில் ஆட் கள் இருந்தால் பத்து மணி ஆகும் வரை காத்திருக்க எண்ணியிருந்தார்கள். அந்தத் தெரு பத்து மணிக்கு மேல் வெறிச்சோடிக் கிடக்கும் என்றும் பின் ஏதாவது ஒன்றிரண்டு வாகனங்கள் மட்டும் வந்து போய்க் கொண்டிருக்கும் என் றும் கூட அந்தத் துப்பறியும் தெரிவித்திருந்தது.

இப்போது பக்கத்து வீடு காலியாகிறது என்றால் சாமான் களை எல்லாம் லாரியில் ஏற்றிமுடிக்க எவ்வளவு நேரமா குமோ தெரியவில்லை. அவர்கள் இன்னும் கூடுதல் நேரம் காத்திருக்க வேண்டி வரலாம்....

தலைவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அந்த நிறுவன ஊழியர்கள் ஒவ்வொருவராக வெளியே வர ஆரம் பித்தார்கள். இரண்டு பைக்குகள் முதலில் வெளியேறின. அவர்கள் யாருடனாவது அவன் பைக்கில் ஏறிப் போய் விடவும் வாய்ப்பிருக்கிறது என்பதால் தலைவனும் அவன் ஆட்களும் சற்று பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்

கள். ஏனென்றால் ஹெல்மெட் போட்டுக் கொண்டு வந்தால் அடையாளம் கண்டுபிடிப்பது சுலபமல்ல. அவர்கள் வந்திருக்கலாம் என்ற சிறிய சந்தேகம் அவனுக்கு வந்திருந்தாலும் அவன் அப்படித் தப்பிப்பது தான் புத்திசாலித்தனமாய் இருக்கும்... நல்ல வேளையாக அப்படி எதுவும் ஆகாமல் அவனும் அவன் சகாக்களும் வெளியே வந்தார்கள். அப்போது மணி 8.07. சற்று பின்னால் காரை நிறுத்தி உள்ளே தயாராக அமர்ந்திருந்த அவர்கள் பக்கம் இப்போதும் அவன் திரும்பிப் பார்க்கவில்லை. டாக்சி டிரைவரைப் பார்த்து எதோ சொல்லிக் கொண்டு வந்தவன் டாக்சியின் முன்பக்கம் ஏறி அமர்ந்து கொண்டான். மற்ற ஊழியர்களும் ஏறிக் கொள்ள டாக்சி கிளம்பியது. அவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

காலை வந்த வழியே டாக்சி போனது. ஏறிய இடத்திலேயே ஊழியர்கள் இறங்கினார்கள். இறங்கும் ஆள் 'அவன்' அல்லவே என்று அவர்கள் கூர்மையாகக் கவனித்துத் திருப்தி அடைந்த பிறகே அவர்கள் அந்த இடங்களைக் கடந்தார்கள். அவன் அவர்கள் பின் தொடர்வதைச் சந்தேகிக்காதபடியே நல்ல இடைவெளி விட்டுத் தான் அவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

அவன் வீட்டை நெருங்கிய போது பக்கத்து வீட்டின் பெரிய பீரோவை எடுத்துக் கொண்டு கூலிகள் தெருவை மறித்தபடி வந்து கொண்டிருந்தார்கள். டாக்சி அதனால் சற்று முன்பே நின்றது. அவன் இறங்குவது தெரிந்தது. வீடு தாண்டி சிறிது தூரத்தில் அவர்களுடைய ஒரு காரும், தெருக்கோடியில் ஒரு காரும் ஆட்களுடன் நின்று கொண்டிருந்தாலும் கூட தலைவன் மெல்ல பதற்றத்தை உணர்ந்தான்.

# 2

டாக்சியில் இருந்து இறங்கியவன் லாரிக்கு அருகே நின்று கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரரிடம் கேட்டான். “ஏதாவது உதவி வேண்டுமா?”

அவர் புன்னகையுடன் சொன்னார். “வேண்டாம் சார். ஆள் கள் இருக்காங்க. காண்ட்ராக்ட் பேசிட்டேன். எல்லாம் அவங்க பண்ணிக்குவாங்க. தேங்க்ஸ்”

அவன் தலையசைத்து விட்டு அங்கேயே நின்றான். போகு மளவு இடம் கிடைத்தவுடன் டாக்சி போய் விட்டது. கூலி கள் அந்தப் பீரோவை லாரிக்குள் ஏற்றுவதை அவன் சாவ காசமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் திரும்பிப் பார்த்தால் தெரிந்து விடக்கூடாது என்று கவனமாக விளக்

குகளை அணைத்து விட்டுக் காரை இருட்டில் நிறுத்தி வைத்திருந்தது தேவையில்லாத எச்சரிக்கை உணர்வாக இருந்தது. ஏனென்றால் அவன் திரும்பிப் பார்க்கவில்லை. அவன் சாவகாசமாக நின்று பார்த்துக் கொண்டிருப்பதே அவர்களுக்கு ஓரளவு நிம்மதியைத் தந்தது. அவர்கள் வந் திருப்பது தெரிந்திருந்தால் அவன் அப்படிச் சாவகாசமாக நின்று கொண்டிருக்க மாட்டான்.

லாரிக்குள் அந்தப் பீரோ ஏற்றப்பட்டவுடன் அவன் ஏதோ சில வார்த்தைகள் அந்தப் பக்கத்து வீட்டுக்காரரிடம் பேசி விட்டு தன் வீட்டுக்குப் போனான். அவன் கதவைத் திறந்து உள்ளே போய் மீண்டும் கதவைச் சாத்திக் கொள்வதைப் பார்த்தார்கள். தலைவன் தன் காரை அந்த இருட்டி லேயே நிறுத்தி வைத்திருந்தான். அந்த வீட்டையும் லாரியில் ஏற்றப்படும் சாமான்களையும் இரண்டு பக்கங்களில் இருந் தும் இரண்டு கார்களில் இருந்தும் உன்னிப்பாகப் பார்த் துக் கொண்டிருந்தார்கள். வீட்டுக்குள் போனவன் வெளியே ஒருவேளை திடீரென்று வருகிறானா என்றும் பார்க்க வேண்டி இருந்தது. அவன் வீடு தள்ளி நிறுத்தப்பட்டிருந்த காரில் இருந்தவர்களில் இருவர் பார்வை அவன் வீட்டுக் கதவிலேயே பதிந்திருந்தது. அவன் வெளியே வரவில்லை.

அவன் வீட்டுக்குள் போனவுடன் போடப்பட்ட விளக்குக ளில் ஹால் மற்றும் வரவேற்பறை விளக்குகள் ஐந்து நிமி டங்களில் அணைக்கப்பட்டு விட்டது.பின் அவன் படுக்கை யறை விளக்கு ஐந்து நிமிடம் கூடுதலாக எரிந்து பின் அது வும் அணைந்தது. இந்த சத்தத்திலும் எப்படித் தான் உறங் குகிறானோ என்று தலைவன் நினைத்துக் கொண்டான். தொடர்ந்து பத்து மணி நேரத்திற்கு மேல் வேலை செய்வ தால் களைத்துப் போயிருக்க வேண்டும் என்று தோன்றியது. அவர்களிடம் அகப்பட்ட பின் அவனிடமிருந்து பெற வேண் டிய தகவல்களை எல்லாம் பெற்று விட்டு நிரந்தரமாகவே தூங்க ஏற்பாடு செய்து விடுவார்கள். அது வரை நிம்மதியாக உறங்கட்டும் என்று தலைவன் எண்ணிக் கொண்டான்.

பக்கத்து வீட்டில் மேலும் இரண்டு பீரோ, கட்டில், ஃபிரிட்ஜ், மற்ற பாத்திர பண்ட மூட்டைகள் என்று எல்லா சாமான்க ளையும் ஏற்றி முடித்து லாரி கிளம்பும் போது மணி 11.35. அடுத்த கால் மணி நேரத்தில் அந்தப் பக்கத்து வீட்டு ஆட்க ளும் வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்து வெளியே நிறுத்தப்பட்டிருந்த அவர்கள் காரில் ஏறிக் கொண்டு போனார்கள். வீதி மௌனமாகியது.

தலைவன் அந்தத் தெருவின் இரண்டு கோடிகளிலும் இரண்டு கார்களையும் அவற்றில் இரண்டிரண்டு ஆட்க

ளையும் இருத்தி விட்டு மீதமுள்ளவர்களை வீட்டு வாச லுக்கு வரச் சொன்னான். அது கூட அவசியமில்லை. இருந்தாலும் அந்த ஜகதலப்பிரதாபன் ஏதாவது தந்திரம் செய்து அவர்களிடமிருந்து தப்பிக்க முயன்றால் எந்தப் பக் கம் சென்றாலும் அவர்கள் ஆட்கள் அவனுக்காகக் காத்துக் கொண்டு இருப்பார்கள். இந்தத்திருப்தியுடன் அவன் தன் காரை அந்த வீட்டு வாசலின் முன் சத்தமில்லாமல் நிறுத்தி னான்.

கதவைச் சத்தமில்லாமல் உடைத்து உள்ளே போக அவர்க ளில் இரண்டு பேர் கைகளில் நவீன உபகரணங்கள் இருந் தன. அவர்களுக்குக் கதவை உடைக்க அதிகபட்சமாய் மூன்று நிமிடங்கள் தான் தேவைப்படும். சத்தமில்லாமல் வெளி கேட்டைத் திறந்து கொண்டு ஆறு பேரும் உள்ளே போனார்கள். தலைவன் மூன்று பேரை வீட்டின் பின்புறம் போகச் சைகை செய்தான். அவர்கள் போன பிறகு கதவை உடைக்கும் நவீன உபகரணங்கள் வைத்திருந்தவர்களைப் பார்த்துத் தலைவன் தலையசைத்து விலகி நின்றான். அவர்கள் தங்கள் வேலையை ஆரம்பித்த போது பின்னால் போயிருந்தவர்களில் ஒருவன் ஓடி வந்தான்.

"பின்னால் கதவை வெறுமனே சாத்தி தான் வெச்சிருக் கான். மெல்ல அதைத் தள்ளினால் கதவு திறந்துகிச்சு...."

தலைவன் யோசித்தான். பின் கதவை உள்ளே தாள் போட மறந்து விட்டானா, இல்லை வேறு எதாவது காரணமா? வேறு காரணங்களை யோசிக்க யோசிக்க மனம் பதறியது. முன்னால் இரண்டு பேரை மட்டும் நிற்க வைத்து விட்டு அவனும் பின்பக்கம் விரைந்தான்.

பின் கதவு திறந்திருந்தது. உள்ளே இருள் நிறைந்திருந்தது. வெளியே இருந்தபடியே டார்ச் விளக்கால் உள்ளே பார்த் தார்கள். அவன் அகப்படவில்லை. அவன் ஒளிந்திருக்கவும் கூடும். உள்ளே நுழைந்தால் தாக்கத் தயாராக இருக்கவும் கூடும். அதுவும் இல்லையென்றால் மீதியை யோசிக்கவே அவனுக்குப் பயமாய் இருந்தது. வெளியே இரண்டு பேரை நிறுத்தி விட்டு அவனும் இன்னொருவனும் துப்பாக்கியோடு உள்ளே எச்சரிக்கையுடன் நுழைந்தார்கள். மெல்ல படிப்ப டியாக முன்னேறினார்கள். வீட்டில் அவன் இருக்கவில்லை. அதுமட்டுமல்ல, வீடே காலியாக இருந்தது. அவன் படுக் கையறையில் மட்டும் ஒரு பாய், தலையணை, போர்வை, தண்ணீர் உள்ள மண்பானை இருந்தன. பாத்ரூம் கம் டாய் லெட்டில் ஒரு பிளாஸ்டிக் பக்கெட், ஒரு மக் மட்டும் இருந் தன. வேறு எதுவும் இல்லை.

அவர்கள் இருவர் முகத்திலும் ஈயாடவில்லை. இருவர் முகத்திலும் அதிர்ச்சியும், பயமும் மெல்லத் தெரிய ஆரம்

பித்தன. முன் கதவையும் திறந்து விட முன்னால் இருந்த இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அந்தச் சத்தம் கேட்டு பின்னால் இருந்த இருவரும் கூட உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் முகத்திலும் திகைப்பு பரவியது. அவன் எப்போது எப்படிப் போனான் என்ற கேள்வியே அவர்கள் அனைவர் மனதிலும் பிரதானமாய் எழுந்தது.

ஒருவன் அதற்குப் பதிலை யூகித்தவனாய் சொன்னான். "நான் என்ன நினைக்கிறேன்னா அவன் வெளியே வந்து சுவர் ஏறிக் குதிச்சு பக்கத்து வீட்டுக்குப் போய் எதாவது பீரோவுக்குள்ளார புகுந்திருக்கலாம். அவன் வீட்டுக்குள் ளார போன பிறகு ரெண்டு பீரோவை லாரியில் ஏத்தி னாங்க..."

"நிறைய மூட்டைகளையும் ஏத்தினாங்க. அதில் ஒன்னுல பாத்திரத்துக்குப் பதிலா அவன் இருந்திருக்கலாம்" மெல்ல இன்னொருவன் சொன்னான்.

தலைவன் யோசனையுடன் சொன்னான். "அப்படி நடந்தி ருந்துச்சுன்னு சொன்னா பக்கத்து வீட்டு ஆள் இவனுக்கு உதவியிருக்கான்னு அர்த்தம். ஆனா அதுக்கு இவன் உதவி கேட்டிருக்கணும். அந்த அளவுக்கு அவன் அதி

கம் நின்னு அந்த ஆள் கிட்ட பேசலயே. நாம பாத்துகிட்டே தானே இருந்தோம்..."

"வீட்டுக்குள்ளார போனதுக்கு அப்புறம் அவன் மொபைல்ல பேசியிருக்கலாம்" என்றான் ஒருவன்,

இன்னொருவன் சொன்னான். "இந்த வீட்டு பாத்திர பண் டங்களையும் மூட்டை கட்டி அவங்க பொருள்களோட ஏத் தியிருக்கானோ என்னவோ? ஏன்னா இங்கே ஒரு ஸ்டவ் கூட இல்லை. கட்டில் கூட இல்லை...."

தலைவனுக்குத் தலை சுற்றியது. அவன் ஒன்றும் சொல்லா மல் யோசனை செய்தபடியே வீட்டின் வெளியே காம்புவுண் டுக்குள் ஒரு முறை சுற்றிப் பார்த்தான். பக்கவாட்டுச் சுவர் ஐந்தடி உயரம் இருந்தது. பின்பக்க சுவர் ஆறடி உயரம் இருந்தது. பக்கவாட்டுச் சுவர் ஏறி குதித்தும் போய் இவர் கள் சொன்னது போலச் செய்திருக்கலாம். அல்லது பின்பு றச் சுவர் ஏறிக் குதித்தும் போயிருக்கலாம். யோசனையுடன் பின்புறச் சுவரைப் பிடித்து எம்பி எட்டிப் பார்த்தான். அந்த வீடு தாண்டி பின்புறத் தெரு இருந்தது. ஆனால் நிறைய சாமான்களையும், எடை அதிகமுள்ள பொருள்களையும் அந்தப் பக்கம் ஏற்றி விடுவது சுலபமல்ல...

தலைவனுக்குத் தலை பாரமாக இருப்பது போல் தோன்ற ஆரம்பித்தது. அவன் எப்படித் தப்பினான் என்பதை உறுதி யாகச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் அவன் தப்பித்து விட்டான் என்பது மட்டும் நிச்சயம் தான். அதை எப்படி முத லாளிக்குச் சொல்வது என்று நினைக்கையிலேயே பீதியாக இருந்தது.

# 3

அவர்கள் அன்றிரவு ஒரு லாட்ஜில் தங்கினார்கள். மற்றவர்கள் சரக்கடித்து விட்டுத் தூங்கி விட, தலைவனுக்கோ தூக்கம் வர மறுத்தது. அவர்கள் வந்திருப்பதை அந்த ஜகதலப்பிரதாபன் எப்போது கண்டுபிடித்திருப்பான் என்று தெரியவில்லை. காலையிலேயே கண்டுபிடித்திருந்தால் அவன் ஹெல்மெட் போட்டு ஒரு ரெயின் கோட்டும் போட்டுக் கொண்டு சகாக்களின் பைக்குகள் ஏதாவது ஒன்றின் மூலமாகத் தப்பித்துச் சென்றிருக்கலாம். அப்படிப் போயிருந்தால் அவர்களுக்கு அவன் போவதைக் கண்டுபிடிக்கக் கஷ்டமாய் இருந்திருக்கும். அதுவும் இருட்டிய பின் போயிருந்தால் தெரிந்திருக்க வாய்ப்பு அதிகம் இல்லை. ஆனால் அப்படி

அவன் போகவில்லை. இரவு வரை வேலை பார்த்து வழக்க மான நேரத்தில் வழக்கமான முறையிலேயே வெளியே வந் திருக்கிறான். அதை யோசிக்கும் போது அவன் அதற்குப் பிறகு வீட்டுக்கு வருகையில் அவர்கள் வந்திருப்பதை எப் படியாவது மோப்பம் பிடித்திருக்க வேண்டும் என்று தோன் றியது. இத்தனைக்கும் இரண்டு வாகனமாவது இடையில் இருக்கும்படி தான் தலைவன் காரை ஓட்டியிருக்கிறான். வீட்டருகே அவன் இறங்கும் போதும் காலையிலிருந்தே அவன் வீட்டைக் கண்காணித்துக் கொண்டிருந்த கார் கூட நாலைந்து வீடுகள் தள்ளி இருட்டான இடத்தில் தான் நின்று கொண்டு இருந்தது. அப்படி இருக்கையில் அவன் எப்படித் தெரிந்து கொண்டான் என்பது தெரியவில்லை...

சற்று முன் தான் தலைவனின் முதலாளி அலைபேசியில் பேசினான். ஆள் தப்பித்து விட்டான் என்று தெரிந்தவுடன் ஆங்கிலத்திலும் தமிழிலுமாய் கலந்து அவனறிந்த கெட்ட வார்த்தைகளில் கால் மணி நேரம் தொடர்ந்து திட்டினான். தலைவன் அலைபேசியை படுக்கையில் வைத்து விட்டு அந்த ஓட்டல் அறையை ஆராய்ந்து கொண்டிருந்தான். பின் சத்தம் நின்றவுடன் தான் அலைபேசியைக் கையிலெடுத் தான். முதலாளி கோபத்தோடு அடுத்துப் பேசிய பத்து நிமி டங்களின் சாராம்சம் 'அவனைக் கண்டுபிடிக்காமல் ஊர் திரும்ப வேண்டாம்' என்பதாக இருந்தது.

மறுநாள் தலைவனும் அவன் ஆட்களில் இருவரும் காலை ஒன்பது மணிக்கு முன்னதாகவே அந்த வீட்டின் அருகே ஒரு காரில் காத்திருந்தார்கள். நேற்றிரவு அங்கிருந்து வரும் முன் வீட்டை முன்பிருந்தது போல் உள்ளே தாளிட்டு பின் கதவைச் சாத்தி விட்டு வந்திருந்த அவர்கள் அவன் போகும் தகவலைத் தன் சகாக்களிடம் தெரிவித்திருக்கி றானா என்று தெரிந்து கொள்ள விரும்பினார்கள்.

முந்தைய நாள் போலவே சரியாக ஒன்பது மணியளவில் டாக்சி அந்த வீட்டின் முன்னால் நின்றது. டிரைவர் இரண்டு முறை ஹாரன் அடித்தான். ஆள் வராமல் போகவே டாக்சி யில் அமர்ந்திருந்த சக ஊழியன் ஒருவன் டாக்சியிலிருந்து இறங்கிப் போய் அந்த வீட்டின் காலிங் பெல்லை அடித்தான். அப்போதும் ஆள் வரவில்லை என்றான பிறகு அவன் தன் அலைபேசியை எடுத்து போனில் அழைப்பது அவர்களுக் குத் தெரிந்தது. தப்பித்துப் போன ஆள் போனிலும் சிக்க வில்லை என்பது சக ஊழியன் குழப்பத்துடன் திரும்பி வந்த விதத்தில் தெரிந்தது. டாக்சி கிளம்பிப் போனது. அப்படியா னால் அவன் தப்பித்துப் போனது அவர்களுக்கும் தெரியாது என்பது உறுதியாகி விட்டது.

அந்த வீட்டின் இடது பக்க வீட்டில் ஒரு பாட்டியம்மாள் மட்டும் தனியாகக் குடியிருந்தாள். சரியாகக் காது கேட்காத

அவளிடம் கத்திப் பேச வேண்டியிருந்தது. அப்படிக் கத்தி விசாரித்த போது அவள் பக்கத்து வீட்டு இளைஞன் நல்ல வன் என்றும் அவன் அங்கே இப்போது இல்லை என்பதே தனக்குத் தெரியாது என்றும் சொன்னாள். பக்கத்தில் எங் காவது வேலை விஷயமாய் அவன் போயிருக்கலாம் என்ற தன் அனுமானத்தைச் சொன்னாள். அதற்கு மேல் விசா ரித்து தொண்டை புண்ணாவதை விரும்பாமல் வெளியே வந்தார்கள். அக்கம் பக்கத்தில் வேறிரண்டு வீடுகளில் விசா ரித்தார்கள். அவர்களுக்கும் அவனைப் பற்றி அதிகமாய் எதுவும் தெரிந்திருக்கவில்லை. ஆனால் காலி செய்த பக் கத்து வீட்டுக்காரர் இப்போது போயிருக்கும் விலாசத்தைச் சொன்னார்கள். அவர் தான் அவனுடன் கொஞ்சம் நெருக் கமாய் இருந்தவர் என்பதும் தெரிய வந்தது.

அடுத்ததாக அந்தப் பக்கத்து வீட்டுக்காரரை அவருடைய புதிய விலாசத்துக்குப் போய் விசாரித்தார்கள். பழைய பக் கத்து வீட்டு இளைஞன் அங்கே இல்லை என்ற தகவலை அவர் நம்ப மறுத்தார். “நேத்து ராத்திரி கூட அவர் கிட்ட பேசினேனே. சாமான் எல்லாம் லோடு பண்ண உதவி வேணுமான்னு என் கிட்டே கேட்டாரே.... என்ன காலிங் பெல் அடிச்சும் திறக்கலியா, அப்படின்னா பக்கத்துல எங்க யாவது போயிருப்பார். அந்த ரோட்டுலயே இருக்கற பரிமளா

மெஸ்ல தான் லீவு நாள்கள்ல சாப்பிடுவார். அங்க பாத்தீங் களா?... அங்கேயும் இல்லையா... ஆச்சரியமா இருக்கே”

தலைவன் அவரைக் கூர்ந்து பார்த்தபடி சொன்னான். “நான் என் ஃப்ரண்டும் உங்க கூடவே வீட்டைக் காலி பண்ணிட்டு வந்துட்டானோன்னு நினைச்சேன்”

அவர் சிரித்தார். “காலி பண்ண அந்த வீட்டுல என்ன இருக் குதுங்க. ஒரு கட்டில் பீரோ ஸ்டவ் கூடக் கிடையாது. கேட் டதுக்கு அடிக்கடி ட்ரான்ஸ்பர் ஆகிற வேலை என்னோடது. அதனால நான் ஒரு சூட்கேஸோட கிளம்பற மாதிரி தான் வச்சுக்குவேன்னார். இங்கே வர்றப்பவும் சூட்கேஸோட தான் வந்தார். பாய், தலகாணி கூட இங்கே வந்து தான் வாங்கினார்னா பார்த்துக்கோங்களேன்.... எதுக்கும் அவங்க கம்பெனில வேலை விஷயமா எங்கயாவது அவரை அனுப் பிச்சிருக்கலாம். அவர் அதிகாலைலயே எழுந்து போயிருக் கலாம். அவங்க கம்பெனில போய் விசாரிங்களேன்...”

சந்தேகப்பட்டது போல அவர் அவனைத் தப்பிக்க வைக் கவில்லை என்பது அந்த மனிதரின் வெளிப்படையான பேச்சிலிருந்து தெரிந்தது. அவன் எந்த நேரமும் ஓரிடத்தி லிருந்து உடனடியாகக் கிளம்பக்கூடிய தயார்நிலையிலேயே

இருந்திருக்கிறான் என்பதும் புரிந்தது. போய்ப் பயனில்லை என்று தெரிந்தும் அந்த நிறுவனத்திலும் போய் விசாரித்தார் கள். “அவர் இன்னைக்கு வரலை. போனும் ஸ்விட்ச் ஆஃப் ஆயிருக்கு. என்ன ஆச்சுன்னே தெரியலை” என்றார்கள்.

அவன் கடைசியாகப் பயன்படுத்திய அலைபேசி எண்ணை அந்தத் துப்பறியும் நிறுவனம் தந்திருந்தது. அந்த எண் ணைத் தான் வேலை பார்க்கும் நிறுவனத்திலும் அவன் தந் திருந்தான். அவன் அந்தப் போன் மூலமாக யாரிடம் எல்லாம் பேசியிருக்கிறான் என்பதையும் கடைசியாக யாரிடம் பேசி யிருக்கிறான் என்பதையும் தெரிந்து கொள்ள தலைவன் ஒரு நல்ல தொகை செலவு செய்தான். உடனடியாக அவன் யாருக்கெல்லாம் போன் செய்து பேசியிருக்கிறான் என்ற பட்டியல் கிடைத்தது.

இந்த ஊருக்கு வருவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாகத் தான் அந்த எண்ணை அவன் வாங்கியிருந்தான். அவன் பேசிய எண்கள் யாருடையது என்று ஒவ்வொன்றாகப் பார்க் கையில் எல்லாமே அவனுடைய புதிய வேலை விஷயமா கவும், சக ஊழியர்களிடம் பேசியதாகவும் இருந்தன. ஒரு போன்கால் கூட அவன் பழைய வாழ்க்கையோடு எந்த வகையிலாவது சம்பந்தப்பட்டிருக்கக் கூடியவர்களுடைய

தாக இருக்கவில்லை. ஆரம்பத்தில் இருந்தே அவன் அதி ஜாக்கிரதையாக இருந்திருக்கிறான்...

ஏமாற்றத்துடன் யோசிக்கையில் ஒன்று மட்டும் தெளிவா கப் புரிந்தது. நேற்றிரவு வீட்டுக்கு வரும் போது எப்படியோ அவன் ஆபத்தை உணர்ந்திருக்கிறான். உள்ளே நுழைந்த வுடன் சூட்கேஸைப் பேக் செய்து உடனடியாகப் பின் வாசல் வழியே போய் பின் சுவர் ஏறி எட்டிக் குதித்துப் பின் தெருவை அடைந்து தப்பித்திருக்கிறான்.

அடுத்தபடியாக அந்தப் பகுதி ஆட்டோரிக்ஷாக்காரர்களி டம் அவன் புகைப்படத்தைக் காட்டி விசாரித்தார்கள். யாரும் அவனை ஏற்றிச் சென்றதாய் சொல்லவில்லை. பின் தெருவிலேயே வெளியூர் பஸ்கள் நிற்கும் நிறுத்தம் ஒன்று இருந்தது. இரண்டு நிமிடத்திற்கு ஒரு முறை ஏதாவது பஸ் அங்கே வந்து நிற்பதை அவர்கள் பார்த்தார்கள். விசாரித்த தில் இரவு பத்து மணி வரை அந்த இடைவெளியில் வெளி யூர் பஸ்கள் வரும் என்றும் அதற்கு மேல் ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை பஸ்கள் அங்கு வந்து நிற்கும் என்று சொன் னார்கள். அதனால் ஆறு கிலோமீட்டர் தள்ளி உள்ள பெரிய பேருந்து நிலையத்திற்குக் கூட அவன் போக வேண்டிய அவசியமிருக்கவில்லை என்றும் அருகிலிருந்த அந்த நிறுத் தத்தில் நின்ற பஸ் எதிலாவது ஒன்றில் ஏறி அவன் போயி

ருக்க வேண்டும் என்பது புரிந்தது. முன்பே இதை எல்லாம் யோசித்து வைத்திருப்பானோ?

ஊம் அந்த அதிர்ஷ்டக்காரனுக்கு ஆயுள் கெட்டி. சிக்கியிருந்தால் சித்திரவதைப்பட்டு சிறிது சிறிதாக உயிரை விட்டிருப்பான்... இப்போது எங்கிருக்கிறானோ?

# 4

அவர்களிடமிருந்து தப்பித்த வசந்த் அவனுடைய எதிரியின் அடியாள்களின் தலைவன் அனுமானித்தபடியே பின் சுவர் ஏறிக் குதித்து பின்தெருவிற்கு வந்து கிடைத்த முதல் பஸ்ஸில் ஏறித் தப்பித்திருந்தான். அதன் பின் இரண்டு பஸ் மாறி இப்போது மூன்றாவதாக ஒரு பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் இப்போது ஒரு தாடியும், கண்ணாடியும் சேர்ந்திருந்தன. அவனை அறிந்திருக்கும் ஆட்களும் இப்போதைய அவன் தோற்றத்தை வைத்து அவனை அடையாளம் கண்டுபிடிப்பது கஷ்டம் தான்.

வசந்த் அவர்களைக் காலையிலேயே கண்டுபிடித்திருந் தான். வீட்டின் கதவைப் பூட்டி விட்டுத் திரும்பும் போது வரிசையாக வந்து கொண்டிருந்த மூன்று கார்களை அவன் பார்த்திருந்தான். கருப்பு, சாம்பல், வெள்ளைக் கார்களில் ஆட்கள் நிறைந்திருந்ததும் ஒரு நொடியில் அவன் மூளை யில் பதிவாகி விட்டது. அதற்குப் பின் அவன் அந்தப்பக் கம் திரும்பவில்லை. ஆனால் மூன்று கார்களும் அவன் வீட்டைக் கடக்காமல் ஓரம் கட்டி சற்றுத் தொலைவிலேயே நின்றதை ஓரக்கண்ணால் பார்த்தவுடன் எதிரியின் ஆட்கள் தான் வந்திருப்பவர்கள் என்பது அவனுக்கு உறுதியாகியது. ஆனால் பதற்றம் அடையாமல் டாக்சியில் ஏறிக் கொண் டான். திரும்பிப் பார்க்கா விட்டாலும் மூன்று கார்களில் முதல் காரான கருப்புக் கார் இடைவெளி விட்டு வருவது டாக்சி யின் பக்கவாட்டுக் கண்ணாடியில் ஒரு தடவை தெரிந்தது. வந்திருப்பவர்கள் எதிரிகள் என்பது இரட்டிப்பு உறுதியாகி யது.

முடிந்த வரை அதிகமான ஆட்கள் பார்க்கும்படியாக அவர் கள் அவனைப் பிடித்துப் போக முற்பட மாட்டார்கள் என் பதை அவன் அறிவான். அவனுக்கு அலுவலகத்திலிருந்து தப்பித்துப் போக வாய்ப்புகள் அதிகம் இருந்தது. ஆனால் வீட்டில் சூட்கேஸில் அவன் உடைகளுடன் சில முக்கியப் பொருள்களும் இருந்தன. அதையெல்லாம் விட்டு விட்டு

அவனால் போக முடியாது. அவை அவன் எதிரி கையில் சிக்கக்கூடாதவை. அலுவலகத்தை விட்டு அவர்கள் அறி யாமல் ஏதாவது ஒரு நண்பனின் பைக்கில் அவன் தப்பித் தாலும் வீட்டுக்குப் போனால் அங்கே கண்டிப்பாக அவர்கள் இருப்பார்கள் என்பதையும், அவர்களிடம் மாட்டிக் கொள்ள நேரிடும் என்பதையும் புரிந்து வைத்திருந்ததால் அவன் அதற்கு முயற்சிக்கவில்லை. அந்த ஆபத்தான சூழ்நி லையை வெளியே காட்டிக் கொள்ளாமல் எப்போதும் போல வேலை செய்தான்.

திரும்பி வரும் போதும் வெள்ளை நிறக் கார் பின் தொடர்வது டாக்சியின் பக்கவாட்டுக் கண்ணாடி மூலம் வசந்துக்குத் தெரிந்தது. ஆனால் நல்ல வேளையாக அவன் வீடு வந்து சேரும் போது பக்கத்து வீட்டின் முன் ஆட்கள் நிறைய பேர் இருந்தார்கள். அந்த வீடு காலியாகும் களேபரம் அவனுக் குப் பேருதவியாக இருந்தது. தன் வீட்டுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டவன் அவசர அவசரமாக தேவையான எல்லாவற்றையும் சூட்கேஸில் அள்ளிப் போட்டுக் கொண்டு பின் வாசல் வழியே தப்பித்து விட்டான்.

ஒவ்வொரு முறை அவன் இக்கட்டான சூழ்நிலையில் சிக் கிக் கொள்ளும் போதும் தப்பிக்க ஏதாவது ஒரு வழி அவ னுக்குக் கிடைக்காமல் இல்லை. அதற்குக் காரணம் அவன்

தந்தை செய்திருக்கும் புண்ணியங்களே என்று வசந்த் நினைத்தான். அவரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவன் மனதில் ஆழமானதொரு குற்றவுணர்ச்சி ஏற்படாமல் இருந்ததில்லை...

அவன் தந்தை விநாயகம் ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகியின் ஒரே மகன். தந்தையின் தேசபக்தி அவர் மனமெங்கும் வியாபித்திருந்தது. நல்லதே எண்ணி, நல்லதே பேசி, நன்மைகளையே அடுத்தவர்களுக்குச் செய்து வாழ்பவர் அவர். அதில் ஒரு சின்னக் களங்கம் கூட அவன் கண்டதில்லை. அவன் மட்டுமல்ல மற்றவர்களும் கண்டதில்லை.

ஒரு அரசுப் பள்ளி ஆசிரியரான விநாயகம் சென்ற வருடம் தான் ஓய்வு பெற்றார். அவர் ஓய்வு பெற்ற நாளில் அவருடைய பழைய மாணவர்கள் ஏராளமானவர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் இரண்டு பேர் கலெக்டர்கள், ஒருவர் ஐபிஎஸ் அதிகாரி, ஒருத்தி எம் எல் ஏ, மூன்று பேர் போலீஸ் உயர் அதிகாரிகள், ஒருவர் பிரபல எழுத்தாளர். அந்த வருகை எல்லாம் கூட அவனை ஆச்சரியப்படுத்தவில்லை. சில கூலித் தொழிலாளிகளும், ஒரு அரசியல் ரவுடியும், ஒரு பிரபல கேடியும் கூட அந்த நாளைக் கேள்விப்பட்டு வந்திருந்தது தான் ஆச்சரியப்படுத்தியது.

பள்ளி மைதானம் நிரம்பி வெளியே கூட நிறைய பேர் நின்று கொண்டிருந்தார்கள். அப்படி ஒரு பிரிவுபசார விழாவை அந்த அரசுப் பள்ளி இதுவரை கண்டதில்லை என்று எல் லோருமே சொன்னார்கள். வாழ்க்கையில் வென்று பெரிய பதவிகளை அலங்கரித்தவர்கள் எல்லோருமே கல்வியில் அவர் ஏற்படுத்தி விட்ட ஆர்வத்தையே தங்கள் உயர்வுக் குக் காரணமாக ஆத்மார்த்தமாகச் சொன்னார்கள். அவர் கள் சரியாகப் படிக்க முடியாமல் தன்னம்பிக்கை இழந்த போதெல்லாம். அவர் கூடுதல் நேரம் சொல்லிக் கொடுத்து நம்பிக்கை ஏற்படுத்திக் கொடுத்ததைச் சொன்னார்கள். பிரம்பையோ, சுடு சொல்லையோ பயன்படுத்தாத ஒரே ஆசிரியர் அவராகத் தான் இருக்க முடியும் என்று ஒருவர் சொன்ன போது அத்தனை உள்ளங்களும் அதை ஆமோ தித்துக் கைதட்டியதை அவன் பார்த்தான்.

அவருடைய மாணவராக இருந்த பிரபல எழுத்தாளர் பேசு கையில் சொன்னார். "இது போன்ற பிரிவுபசார விழாக்க ளில் உயர்வு நவிற்சி அணி மிக சகஜம். நல்லதை மட்டுமே எடுத்துச் சொல்வார்கள். நல்லதல்லாததைச் சொல்ல மாட் டார்கள். அது நாகரிகமும் கூட. ஆனால் விநாயகம் சாரைப் பொருத்த வரை உயர்வு நவிற்சிக்கு அவசியமே இல்லை. ஆளே நமக்கு எட்டாத உயர்வு தான். சொல்ல வேண்டாம் என்று தவிர்க்க எந்தக் குறைபாடும் அவரிடம் இல்லை என்

பதே சத்தியம். முதல் முதலில் உண்மையை மட்டுமே, உள்ளதை மட்டுமே சொல்கின்ற ஒரு பிரிவுபசார விழா நடப்பது இதுவாகத் தான் இருக்கும்...”

சில சாதாரண வேலையில் இருப்பவர்களும் அவர் தங்களுக்காகச் செய்த பெரிய உதவிகளை மனமுருகச் சொன்னார்கள். கடைசியில் அரசியல் ரவுடி பேச வந்த போது பலர் தர்மசங்கடத்துடன் நெளிந்தார்கள். சிவபூஜையில் கரடி புகுந்தது போல் உணர்ந்தார்கள். ஆனால் அவன் இப்போது ஆளுங்கட்சியில் செல்வாக்கோடு இருப்பதால் அமைதி காத்தார்கள்.

அவன் சொன்னான். “என்னடா இவனெல்லாம் பேச வந்துட்டான்னு நெரய பேரு நினைப்பீங்க தெரியும். நான் கலெக்டரோ, அதிகாரியோ, சாதிச்சவனோ இல்ல. ஆனா இன்னிக்கு எழுதப் படிக்கத் தெரிஞ்சவனா நான் இருக்கிறதுக்கே சார் தான் காரணம், அதுக்கு கூட என் தலையில சரக்கு இருக்கல. எங்கப்பா நான் உருப்பட மாட்டேன்னு முதல்லயே முடிவு பண்ணிட்டு ஸ்கூலுக்கு அனுப்பறத நிறுத்தப் பாத்தார். எனக்கும் ஸ்கூல் போக இஷ்டம் இருக்கல. ஒரு வாரம் ஸ்கூலுக்கு போகல. அடுத்த வாரம் சார் என் வீட்டுக்கு வந்துட்டார். என் அப்பா கிட்ட என்னை ஸ்கூலுக்கு அனுப்ப சொன்னார். என் அப்பா சொன்னார்.

“அவனுக்கு படிப்பெல்லாம் ஏறாதுன்னு எனக்கும் தெரியும் உங்களுக்கும் தெரியும் சார். அப்படிப்பட்ட அவனை என்னவோ கலெக்டர் ஆகப் போறவனை ஸ்கூலுக்கு அனுப்பாம நிறுத்திட்ட மாதிரி வந்து கூப்டறீங்களே. சும்மா போங்க சார்”. அதுக்கு சார் சொன்னார். “கலெக்டர் ஆகணும்னு சொல்லல. எழுதப்படிக்கவாவது தெரியணும். அது கூட இல்லாட்டி எதிர்காலத்துல பையன் ரொம்ப கஷ்டப்பட்டுடுவான். அதுக்காவது அனுப்பு” எங்கப்பா அதுக்கப்பறம் “அந்த நல்ல மனுசன் மனசுக்காவது கொஞ்சம் படிடா”ன்னு ஸ்கூலுக்கு அனுப்பி வெச்சார். என் வாழ்க்கைல நான் ரொம்ப கஷ்டப்பட்ட டைம் என்னான்னு கேட்டா நான் இந்த ஸ்கூல்ல படிச்ச நாலஞ்சு வருஷத்த தான் சொல்வேன். படிப்பு தலையில ஏறுவெனாங்குது. இவர் அதைவிட அதிகமா கஷ்டப்பட்டு என்னை ஏதெதோ தாஜா பண்ணி படிக்க வெச்சார். இவருக்காகவே படிச்சேன். பெரிய ஆளா கலைன்னாலும் என்னை ஒரு கைநாட்டாவே இருந்துடாம சார் காப்பாத்தினார். என்னை மட்டுமில்லை என்னை மாதிரி எத்தனையோ பேரை காப்பாத்தியிருக்கார். கொஞ்சம் மூளை இருக்கறவனுக்கு சொல்லிக்குடுத்து நெறய சாதிக்க வெக்கறது பெரிசில்ல. மூளையே இல்லாதவனுக்கு கொஞ்சமாவது தலையில ஏத்தறது பெரிய விஷயம். எத்தனையோ தடவ சார் கிட்ட போய் நன்றி சொல்லணும்னு தோணும். ஆனா எதை சாதிச்சோம்னு சொல்லி அவர் கிட்ட நன்றி சொல்லறதுன்னு சும்மா இருந்துடுவேன். இந்த ஒரு

நாள் நானும் சாரால பயன் அடைஞ்சிருக்கேன்னு தெரிவிக்கணும்னு ஆசையா இருந்துது. வந்து பேசிட்டேன்....” சொல்லச் சொல்ல அவன் கண்கள் கலங்கி குரல் உடைந்தது. எல்லோர் மனதும் நெகிழ்ந்தது தெரிந்தது. கரகோஷம் இரண்டு நிமிடங்கள் நீடித்தது. அவன் திரும்பி விநாயகத்தைப் பார்த்துக் கைகூப்பிக் கீழிறங்கினான். அவரும் அன்போடு அவனைப் பார்த்துக் கைகூப்பியதை வசந்த் கவனித்தான்.

இப்படிப்பட்ட மனிதருக்கு ஒரே மகனாக இருக்கக்கூடிய தகுதி அவனுக்கு இல்லை. ஆனாலும் அப்படிச் செய்து விதி அவரைச் சோதித்து விட்டது.

# 5

அந்தப் பிரிவுபசார விழாவில் கடைசியாக நன்றி தெரிவித்துப் பேசும் போது விநாயகம் சொன்னார். “என் மீது நீங்கள் எல்லோரும் காட்டியிருக்கும் பேரன்புக்கு நன்றி. பேசிய எல்லாரும் சொல்வது போல் நான் பெரியதாக எதுவும் உங்களுக்குச் செய்து விட்டதாய் நினைக்கவில்லை. என் மாணவர்கள் எல்லோரும் எனக்குப் பிள்ளைகள் மாதிரி தான். தன் பிள்ளைகள் நன்றாக இருக்க வேண்டும், முன்னுக்கு வர வேண்டும் என்று ஒரு தந்தை நினைப்பது இயல்பான ஒன்று தான்.... எல்லாரும் அவரவர் இருக்கின்ற இடத்தில் இருந்து கொண்டே சமுதாயம் முன்னேற அவர்களால் முடிந்த நல்லதைச் செய்ய வேண்டும் என்று மட்டும் உங்களைக் கரம் கூப்

பிக் கேட்டுக் கொள்கிறேன். தனி மனிதன் தன் உயர்வோடு திருப்தி அடைந்து விடக்கூடாது. தன்னைச் சேர்ந்தவர்களையும் தன்னால் முடிந்த வித்த்தில் மேலே தூக்கி விட வேண்டும். அப்படி ஒவ்வொருவரும் முடிந்ததைச் செய்தாலே இந்த தேசம் வல்லரசாகி விடும்...”

நல்லது சொல்வதில் அவருக்குச் சலிப்பில்லை. ஆனால் அதை இங்கிருக்கும் ஒருவராவது பின்பற்றுவார்களா என்பதில் வசந்துக்குச் சந்தேகமே! எல்லோரும் அவர் மீது பிரியம் வைத்து வந்திருக்கிறார்கள், இது போன்ற ஒரு மனிதரை அவர்கள் பின் எப்போதும் அவர்கள் வாழ்க்கையில் சந்தித்திருக்க மாட்டார்கள். அதுவே அவர் மீது வைத்திருக்கும் மதிப்பை அதிகப்படுத்தி இருக்கும். எத்தனையோ வேலைகளை ஒதுக்கி விட்டு அவர்களில் பலரும் ஒரு கடமை போல் உணர்ந்து வந்திருக்கிறார்கள். ஆனால் அவர் அறிவுரையை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை. யாரும் தங்களை மாற்றிக் கொள்ளவும் போவதில்லை...

அதை வீடு திரும்பும் போது அவரிடம் வசந்த் வெளிப்படையாகவே சொன்னான். அவர் பொறுமையாகச் சொன்னார். “அப்படிச் சொல்லாதே. நான் சொன்னது சில பேர் மனசிலாவது ஒரு மூலையில இருக்கும். ஒரு சந்தர்ப்பம் வர்றப்ப,

சின்னதாய் ஒரு நல்லதைச் செய்யறதில் அவங்களுக்குப் பெரிய சிரமம் எதுவும் இல்லாமலிருக்கறப்ப, அந்தச் சில ராவது அந்த நல்லதைச் செய்வாங்க. எனக்கு நம்பிக்கை இருக்கு. அப்படிச் சின்னச் சின்னதா நல்லது நடக்க ஆரம் பிச்சா போதும் இந்த தேசம் எங்கேயோ போயிடும்..”

அந்த நல்ல மனிதரின் நம்பிக்கையைச் சிதைக்க அவன் விரும்பாமல் அமைதி காத்தான்...

வசந்தின் அம்மா சாகும் போது அவனுக்கு வயது பதினாறு. ஒரே மகனான அவன் மீது அவள் உயிரையே வைத்திருந் தாள். அவன் என்ன செய்தாலும் அதில் அவள் தவறு காண வில்லை. அசாத்திய அறிவும், ஆகாயக் கனவுகளுமாய் இருந்த வசந்துக்குத் தந்தையின் சித்தாந்தங்கள் பிழைக் கத் தெரியாத மனிதரின் சித்தாந்தங்களாகவே தோன்றின. கட்டுப்பாடான வாழ்க்கை ஒரு சிறை போலவே அவன் உணர்ந்தான். எல்லாச் சுகங்களையும் அனுபவிக்க அவன் துடித்தான். மகன் நினைப்பதெல்லாம் சரி தான் என்று அவன் தாயும் அவனுக்கு ஆதரவாக இருந்தாள். ஆனால் அவர் மட்டும் சலிக்காமல் தான் சொல்ல வேண்டிய அறிவு ரைகளைச் சொல்லிக் கொண்டு தான் இருந்தார். சில சம யங்களில் தாயும் மகனும் சேர்ந்து கொண்டு அவரைத் திட்

டுவதுண்டு. பொறுமையாய் முழுவதும் கேட்டு விட்டு மறுபடி தனக்குச் சரியென்று தோன்றுவதையே சொல்வார்.

ஆனால் அவன் வாழ்க்கை வேறு விதமாகவே போனது. பதினாலு வயதில் முதல் சிகரெட் அறிமுகம் ஆனது. அதன் புகை அவனுக்குப் பிடிக்கவில்லை என்பதால் அத்தோடு விட்டு விட்டான். மதுவின் அறிமுகம் அவனுக்குப் பதினாறு வயதில் ஆனது. அம்மா மரணத்துக்கம் அதில் போகிறதா என்று பார்ப்போம் என்று முயன்றான். அது சோகத்தைக் குறைக்கவில்லை என்றாலும் அது பிடித்திருந்தது. எப்போ தாவது ஒரு முறை அளவாகக் குடித்தான். அளவுக்கு அதி கமாகி அவனையே மறந்திருப்பதும், எங்காவது விழுந்து கிடப்பதும் அவனுக்கு உடன்பாடாக இருக்கவில்லை. பதி னெட்டு வயதில் ஒரு பெண்ணின் சுகம் கிடைத்தது. அவன் அழகாகவும், வாட்டசாட்டமாகவும் இருந்ததால் பின் பல வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் தேர்ந்தெடுத்து சில பேரி டம் மட்டும் பழகினான். பத்தொன்பது வயதில் கஞ்சாவை யும் சாப்பிட்டுப் பார்த்தான். அதன் போதை அவனைப் பய முறுத்தியது. அதன்பிறகு அதை அடியோடு தவிர்த்தான்.

தந்தை தவறென்று நினைக்கும் எதைச் செய்து விட்டு வீட் டுக்கு வந்தாலும் அவரைப் பார்க்கும் போதெல்லாம் குற் றவுணர்ச்சி அவனைப் பாடாய் படுத்தியது. அதைத் தாங்க

முடியாமல் இருபது வயதில் தந்தைக்கு ஒரு துண்டுச் சீட்டில் தெரிவித்து விட்டு வீட்டை விட்டு ஓடிப் போனான். போவ தற்கு முன் தன் நண்பன் ஒருவனிடம் தன் தந்தை மீது ஒரு கண் வைத்திருக்கச் சொல்லி விட்டுப் போனான். ஏதாவது அவருக்குப் பிரச்னை என்றால் தெரிவிக்கச் சொல்லி அவ னிடம் மட்டும் போன் நம்பரைத் தந்து விட்டுப் போனான்.

பிறகு எத்தனையோ படித்தான். எத்தனையோ வேலை கள் பார்த்தான். நிறைய சம்பாதித்தான். தாராளமாகச் செலவு செய்தான். ஆடம்பரமாக வாழ்ந்தான். ஊர் சுற் றினான். வெளிநாடுகள் போய் வந்தான். கம்ப்யூட்டரிலும், இண்டர்நெட்டிலும் அவன் அறியாத சூட்சுமங்கள் இல்லை என்று அவன் நண்பர்களும் எதிரிகளும் ஒருமனதாக ஒத் துக் கொண்டார்கள் எல்லாவற்றிலும் ஈடுபட்டாலும் ஓரளவு கட்டுப்பாட்டையும் எப்போதுமே வைத்திருந்த அவனுக்கு ஒன்றே ஒன்று மட்டும் எத்தனை இருந்தாலும் சலிக்கும் என்று தோன்றவில்லை. அது பணம் ஆக இருந்தது. அது பாதாளம் வரை பாய்வதை பல இடங்களில் பார்த்திருந்த அவனுக்கு அதன் மீது வந்த மோகம் என்றுமே குறைய வில்லை.

நான்கு வருடங்களுக்கு முன் அவன் தந்தை டைபாய்டு காய்ச்சல் வந்து படுத்த செய்தி நண்பன் மூலம் கிடைத்தது.

எல்லாவற்றையும் விட்டு விட்டு வந்து ஆஸ்பத்திரியில் சில நாட்களும், வீட்டில் சில நாட்களும் இருந்து அவரைப் பார்த்துக் கொண்டான். அவர் நலமானவுடன் அவரிடம் சொல்லிக் கொண்டே கிளம்பி விட்டான். அவர் மௌனமாகத் தலையசைத்தார். அந்த மௌனமே அவனுக்குக் கஷ்டமாகத் தான் இருந்தது. ஆனால் அவனால் அவனை மாற்றி கொண்டு அவருடன் ஒரு சுரத்தில்லாத வாழ்க்கை வாழ முடியாது.

சென்ற வருடம் அவருடைய பிரிவுபசார விழாவுக்கு அவர் குடும்பம் என்று சொல்ல இருக்கும் ஒரே ஒருவனான அவன் கண்டிப்பாக வர வேண்டும் என்று அந்தப் பள்ளித் தலைமையாசிரியர் போன் செய்தார். அதனால் வந்தான். திரும்பிப் போவதற்கு முன் அவரைத் தன்னுடன் வருகிறீர்களா என்று கேட்டான். அவர் வர மறுத்தார்.

"ரிடையர் தான் ஆயிட்டீங்களே. இனி என்ன இருக்கு இங்கே. சொந்த வீடும் அல்ல. கூட யாரும் இல்லை. இங்கே உக்காந்து என்ன பண்ணப் போறீங்க?" என்று கேட்டான்.

"எத்தனையோ ஏழைக் குழந்தைங்க சுத்தியும் இருக்காங்க. அதுகளுக்குப் படிப்பு சொல்லித் தரலாம். ஒரு குழந்தை மேல வந்துட்டா அதோட குடும்பமே தலை நிமிர்ந்துடும்...."

கடவுள் என்று ஒருவர் இருந்தால் இந்த மாதிரி ஒரு ஆளைப் படைத்ததற்கு நிச்சயம் பெருமைப்பட்டிருப்பார் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால் அவன் அதற்கு மேல் அவரைக் கட்டாயப்படுத்தவில்லை. அவன் இப்போது மிக மிக ஆபத்தான வேலையில் இறங்கியிருக்கிறான். எந்த நேரமும் எதுவும் ஆகலாம். அந்த நல்ல மனிதரைக் கூட வைத்திருப்பது அவனுக்கு ஆபத்து. அவருக்கும் ஆபத்து..

வசந்த் மெல்லக் கேட்டான். "பணம் வேணுமாப்பா?"

"வேண்டாம் வசந்த். இருக்கற காசே செலவாக மாட்டேங்குது. என் ஒருத்தனுக்கு எவ்வளவு வேணும் சொல்லு"

அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவரிடம் நான்கே நான்கு வேஷ்டி, சட்டைகள் தான் இருந்தன. அந்த வீட்டில் ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின் இல்லை. ஒரு டைனிங் டேபிள் இல்லை... அவனுக்கு மனம் என்னவோ செய்தது.

அவர் சொன்னார். "சீக்கிரம் ஒரு நல்ல பொண்ணா பார்த்து கல்யாணம் பண்ணிக்கோ. வயசு இருபத்தியேழு ஆயிடுச்சுல்லையா..."

“சரிப்பா...” என்று சொல்லி விட்டு வசந்த் கிளம்பினான். கிளம்பும் போது அவரை அவன் பார்ப்பது இதுவே கடைசியாக இருக்கலாம் என்று தோன்ற உணர்ச்சி வசப்பட்டவனாய் அவரைப் பாசத்தோடு அணைத்துக் கொண்டு சொன்னான். “உடம்பைப் பார்த்துக்கோங்கப்பா”

அவரும் கண்கலங்கியபடி தலையசைத்தார். அவன் அதற்கு மேல் திரும்பிப் பார்க்காமல் கிளம்பி விட்டான். இப்போது தப்பி உயிர் பிழைத்து ஓடிக் கொண்டிருக்கும் போது அந்தப் பழைய நினைவுகள் வந்து அவனை அலைக்கழித்தன. ’அவர் எப்படி இருக்கிறாரோ?’

# 6

அவன் வாழ்க்கையில் பெரிய திருப்புமுனையாக அமைந்தது நான்கு வருடங்களுக்கு முன் அவன் நண்பன் பாஸ்கர் அவனை அழைத்த நாள்.

“வசந்த் எங்கேடா இருக்கே?”

“லடாக்குக்கு ஒரு டூர்ல வந்திருக்கேன். ஏண்டா?”

“ஒரு முக்கியமான வேலை. அது உன்னால தான் முடியும். ஆனா அது உடனே ஆகணும்....”

“சாரிடா... நான் நாலு நாள் கழிச்சு தான் பெங்களூர் வருவேன்.”

“வேலை சென்னைல. உடனே வந்தா நல்ல காசு கிடைக்கும்”

“என்ன வேலை? எவ்வளவு கிடைக்கும்?”

“இங்கே முக்கியமான ஒரு கம்ப்யூட்டர் சிஸ்டம் கரப்ட் ஆயிடுச்சுடா. அதுல இருக்கற டேட்டாஸ் போயிடுச்சு. நாங்க ரெண்டு மூணு பெரிய ரிகவரி எஞ்சீனியர்ஸை கூப்ட்டுப் பார்த்துட்டோம். அவங்களாலயும் முடியல. ஆனா உன்னால கண்டிப்பா முடியும். சரி செஞ்சு குடுத்தா ரெண்டு லட்சம் ரூபாய் வாங்கித் தர்றேன்”

எப்படிப்பட்ட சிக்கலான வேலையாக இருந்தாலும் இந்த ரக வேலையை முடித்துக் கொடுக்க அவனுக்கு ஒரு நாளைக்கு மேல் வேண்டி வராது. அவன் யோசித்தான். பாஸ்கர் சொன்

னான். "அங்கிருந்து வர்ற ஃப்ளைட் சார்ஜும் குடுத்துட றோம்டா. வாடா ப்ளீஸ்"

உடனே வசந்த் கிளம்பி விட்டான். பாஸ்கர் மத்திய மந்திரி சுந்தரத்தின் மகன் சம்பத்திடம் வேலை பார்க்கிறான். சம் பத் பல கம்பெனிகளை நடத்தி வருகிறான். எல்லாமே பல கோடிகள் முதலீட்டில் இயங்கும் கம்பெனிகள். அத்தனை கம்பெனிகளின் முக்கியத் தகவல்கள் கொண்ட சம்பத்தின் பர்சனல் கம்ப்யூட்டரில் தான் எல்லாமே அழிந்திருந்தன.

சம்பத்திற்கு என்ன தான் பாஸ்கர் வசந்தைப் பற்றி உயர்வா கச் சொல்லி இருந்தாலும் பெரிய நம்பிக்கை அவன் மேல் வந்திருக்கவில்லை. காரணம் இதற்கு முன் வந்து பார்த்தி ருந்த மூன்று பேருமே அந்த வேலையில் ஜாம்பவான்களா கப் பெயர் எடுத்தவர்கள். அவர்களாலேயே முடியாதது இந்த புதிய இளைஞனால் முடியும் என்று அவனுக்குத் தோன் றவில்லை. ஆனால் வந்து வேலையை ஆரம்பித்த வசந்த் எட்டே மணி நேரத்தில் எல்லாவற்றையும் மீட்டுக் கொடுத் தான். சம்பத் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சொன்னபடி இரண்டு லட்சத்தையும், லடாக்கில் இருந்து சென்னை வந்த விமானச் செலவையும் தர வசந்த் கிளம்பத் தயாரான போது தான் சம்பத் அவனிடமே வேலைக்கு வர வசந்துக்கு அழைப்பு விடுத்தான்.

சம்பத்துக்கு வசந்தின் ஆங்கிலப் புலமையும், கம்ப்யூட்டர் திறமையும் மிகவும் பிடித்திருந்தது. இந்தியாவில் கான்வெண்ட்களிலும், வெளிநாட்டில் கல்லூரிகளிலும் படித்துத் தேறியிருந்த சம்பத்துக்கு வசந்த் போன்ற திறமையான ஆள் தன்னிடம் வேலைக்கு இருப்பது நல்லது என்று தோன்றியது.

ஆனால் வசந்த் அவனிடம் வேலைக்குச் சேர ஆர்வம் காட்டவில்லை. சம்பத் பற்றி பத்திரிக்கைகளில் வசந்த் நிறைய படித்திருக்கிறான். மந்திரி மகன், பல கம்பெனிகளின் முதலாளி, பெரும்பணக்காரன் என்ற தலைக்கனம் அவனிடம் அதிகம் என்று பலரும் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறான். அதனால் பவ்யமாக வசந்த் மறுத்து விட்டான். எல்லோருக்கும் ஒரு விலை உண்டு என்பதை ஆரம்பப் பாடமாகப் படித்திருந்த சம்பத் சம்பளத்தை நிறையவே உயர்த்திச் சொல்லவே கடைசியில் வசந்த் சம்மதித்தான்.

பாஸ்கர் அக்கவுண்ட்சில் இருந்தான். இரண்டு கம்பெனிகளின் கணக்குகளை அவன் தான் பார்த்துக் கொண்டிருந்தான். வசந்த் அனைத்துக் கம்பெனிகளின் கம்ப்யூட்டர்களின் பிரச்சினைகளைச் சரி செய்து வந்தான். சில சமயங்களில் அவர்களுக்குத் தேவையான ப்ரோகிராம்களைப் போட்டுத் தந்தான். எந்த வேலையையும் செய்ய

பலரும் எடுத்துக் கொள்ளும் நேரத்தை வசந்த் எடுத்துக் கொள்வதில்லை என்பதைக் கவனித்த சம்பத்துக்கு அவன் மேல் ஒரு தனி மரியாதை ஏற்பட்டது. சிறிது காலம் அவன் வசந்தை கண்காணிப்பு கேமிராக்கள் மூலம் இரகசியமாகவும் கவனித்து வந்தான். சொன்ன வேலையை வசந்த் செய்து வந்தானேயொழிய வேறெந்த அதிகபிரசங்கித் தனமோ, உளவு வேலையோ பார்க்கவில்லை என்பது அவனுக்கு உறுதியானது. 'எனக்கு நல்ல அதிக சம்பளம் வேண்டும். அது எனக்கு வந்து விட்டால் மற்றதைப் பற்றி எனக்குக் கவலையில்லை' என்கிற வகையில் அவன் நடவடிக்கை இருந்தது.

சம்பத்தின் தந்தை சுந்தரம் பணம் கொழிக்கும் ஒரு முக்கிய இலாகாவில் மத்திய மந்திரியாக இருந்ததால் சம்பத்தின் காட்டில் தினமும் பண மழை தான். முக்கியமான கையெழுத்துகளை அவர் போடுவதற்கு முன் மகனிடம் போய் பேசி வரச் சொல்வார். காரியம் ஆக வேண்டி இருப்பவர்கள் சம்பத்திடம் வந்து பேசுவார்கள். ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் நான்கு பேரங்களாவது நடக்கும். ஒவ்வொரு பேரத்திலும் பத்திலிருந்து நூறு கோடிகளாவது சம்பத்துக்குக் கிடைக்கும். அதைப் போலியான ஒரு கணக்கின் பரிவர்த்தனையாகக் காட்டி அன்னியச் செலாவணியாக மாற்றி சம்பத் வெளிநாட்டில் நிறைய சொத்துக்களை பினாமி பெயரில்

வாங்கிப் போட்டு விடுவான். சில சமயங்களில் அந்தக் கருப்புப் பணம் வெள்ளைப் பணமாக ஒரு பரிவர்த்தனை மூலம் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படும்.

சம்பத்தின் அறைச் சுவரில் ஒரு உலகவரைபடம் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும். அதில் நிறைய நாடுகளில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பச்சைப் புள்ளிகள் போடப்பட்டிருக்கும். அந்தந்த நாட்டில் அத்தனை சொத்துகள் இருக்கின்றன என்பது அதற்கு அர்த்தம். கிட்டத்தட்ட நாற்பது புள்ளிகள் அதில் இருந்தாலும் புள்ளிகள் இல்லாத நாடுகள் சம்பத்தின் உறக்கத்தைக் கெடுத்தன. அவனுடைய மேஜையின் மேலுள்ள குறிப்பேட்டில் அடுத்த நாடு அடுத்த சொத்து எப்போதுமே எழுதப்பட்டிருக்கும். ஆட்களிடம் பேரம் பேசும் போது அவன் அடிக்கடி அந்தக் குறிப்பேட்டைப் பார்த்துக் கொண்டே தான் பேசுவான். அந்த நாட்டில் நல்ல சொத்து ஒன்று வாங்கும் அளவு தொகை சேர்ந்ததும் அதை வாங்கி விடுவான். பின் அந்த உலக வரைபடத்தில் ஒரு பச்சைக்குறி கூடும். அவன் குறிப்பேட்டில் அடுத்த நாடு அடுத்த சொத்து எழுதப்படும்.

எதிர்க்கட்சிகள் அவ்வப்போது குற்றம் சாட்டுவார்கள். சும்மா பேசுபவர்களை அவனும் அவன் தந்தையும் கண்டு கொள்ள மாட்டார்கள். ஆதாரபூர்வமாக யாராவது பேசி

னாலோ எழுதினாலோ முடிந்த அளவு தாராளமாக பணத் தால் கவனிக்கப்படுவார்கள். அந்த எதிர்ப்புக்குரல் தானா கத் தணிந்து விடும். ஆனால் எந்தக் குற்றச்சாட்டுக்கும் சம் பத் அசந்தது கிடையாது. ஆட்சி அவர்கள் கையில். எதிர்க் கட்சியினரும் உத்தமர்கள் அல்ல. அவர்களுக்கு அவனு டைய வாய்ப்பு கிடைக்காததால் பொறாமைத் தீயில் வேகி றார்கள். அவர்களுக்கு அவனுடைய புத்திசாலித்தனமும் போதாது. அதற்கு அவன் என்ன செய்ய முடியும்?

ஒரு முறை அவனிடம் பேட்டி எடுக்க வந்த ஒரு பத்திரிக்கை நிருபர் அந்த உலக வரைபடத்தில் உள்ள பச்சைப்புள்ளிக ளைக் காட்டி விளக்கம் கேட்டாள்.

“நான் அந்த நாடுகளுக்கு அத்தனை தடவை போயிருக் கிறேன்” என்று சம்பத் புன்னகையுடன் சொன்னான். அது பகுதி உண்மையே. சொத்து வாங்கும் முன் அங்கே அவன் போக வேண்டியிருந்திருக்கிறது. அவனுக்கு உலகநாடுக ளுக்குச் சுற்றுப்பயணம் செல்வதில் உள்ள ஆர்வத்தை அவன் சொன்னான். அதுவும் உண்மையே. ஆனால் அப்ப டிப் போகும் போது தான் எங்கே என்ன சொத்து வாங்கு வது என்பதை அவன் மனம் ஆசைப்பட்டுச் சொல்லும். அது அவன் குறிப்பேட்டில் ஏறும். பின் அந்த வரைபடத்தில் பச் சைப் புள்ளியாய் மாறும்.

வசந்த் மீது நம்பிக்கை அவனுக்குப் பரிபூரணமாய் வந்த பிறகு அவன் வசந்தையும் தன் வெளிநாட்டுச் சுற்றுப்பய ணங்களில் அழைத்துப் போக ஆரம்பித்தான்.

சம்பத் வசந்த் வரும் முன் எத்தனையோ சொத்துக்கள் வாங்கியிருக்கிறான். ஆனால் அதிலெல்லாம் கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றி டாக்குமெண்ட்களைப் பார்க்க வேண்டியிருந்தது. அவனுடைய வக்கீல்கள் எத்தனையோ தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்தங்களைச் சொல்லி அதன்படி பல மாறுதல்கள் ஆகியிருக்கின்றன. ஆனால் வசந்த் வந்த பின்பு அவன் வக்கீல்களும், ஆடிட்டர்களும் ஒரு முறை கூட ஒரு தவறும் கண்டுபிடிக்க முடிந்ததில்லை. காரணம், வக்கீல்களிடமும், ஆடிட்டர்களிடமும் முன்னா லேயே எல்லாவற்றையும் தெளிவாகக் கேட்டுக் கொள்ளா மல் வசந்த் எந்த வேலையையும் ஆரம்பிக்கவே மாட்டான். ஒரு முறை சரியாகப் புரிந்து கொண்ட பின் அவன் தவறு செய்ததே இல்லை.

போகும் இடங்களில் இன்னது செய்ய வேண்டும் என்று வசந்திடம் சொல்லி விட்டு, எல்லாப் பொறுப்புகளையும் அவனிடம் தந்து விட்டு, சம்பத் மசாஜ் செண்டர்களுக்கோ, கேளிக்கை விடுதிகளுக்கோ போய் சொர்க்கத்தில் இருந்து விட்டு வருவான். அவன் வருகையில் எல்லா வேலைக

ளையும் வசந்த் கச்சிதமாய் செய்து வைத்திருப்பான். அவன் கையெழுத்து மட்டும் போட வேண்டியிருக்கும். அல்லது பினாமிகள் பெயரில் வாங்கியிருந்தால் அந்த டாக்குமெண் டுகளை ஒருமுறை சரிபார்த்து அந்தப் பினாமிகளிடம் கமி ஷன் தொகையைத் தந்து அவர்களிடமிருந்து என்னேர மும் சொத்துக்களை மாற்றிக் கொள்ளும் பத்திரங்களில் கையெழுத்து மட்டும் வாங்க வேண்டியிருக்கும்.

வசந்தின் கூர்மையான அறிவு, எதையும் கச்சிதமாகச் செய் யும் விதம், தவறுகளோ அலட்சியங்களோ அவன் செய்த வேலைகளில் இல்லாதது இதெல்லாம் சம்பத்துக்கு அத்தி யாவசியமான ஆளாய் வசந்தை மாற்றி விட்டது.

# 7

அதிர்ஷ்டம் எல்லா சமயங்களிலும் ஒரேயிடத்தில் தங்குவதில்லை. அது திடீர் திடீரென்று இடம் மாறக்கூடியது. சம்பத் வாழ்க்கையிலும் அது திடீரென்று விடைபெற்றுக் கொண்டது. பொதுத் தேர்தலில் அவன் தந்தையின் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. எதிர்க்கட்சி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது.

சம்பத் அந்த உலக வரைபடத்தைப் பார்த்த போதெல்லாம் வயிறெரிந்தான். இன்னும் எத்தனையோ இடங்கள் பச்சைப் புள்ளிகள் இல்லாமல் களையிழந்து காணப்பட்டன. இது

வரை சம்பாதித்ததில் இருந்தும் வருமானம் வருமென்றா லும் மாதம் நூறு கோடிகளுக்கும் மேல் எல்லாம் சம்பாத்தி யம் வராதே என்ற வருத்தம் அவனை ஆட்கொண்டது.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போல இப்போ தைய ஆளும்கட்சி அவன் தந்தை சுந்தரத்தின் பழைய தீர்மானங்களுக்கும், அவனுடைய ஏராளமான சொத்துக்க ளுக்கும் ஒரு தொடர்பைக் கண்டுபிடித்து விசாரணைக்கு உத்தரவிட்டது. இன்னமும் பழைய அதிகாரிகளில் சிலர் அவன் தந்தையிடம் விசுவாசமாகவே இருந்தார்கள் என்ப தால் அரசு அவர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி அவ்வப்போது அவர்களுக்குத் தகவல்கள் வந்தன.

சுந்தரம் அவனை அழைத்து எச்சரித்தார். "இந்த தடவை மேற்போக்காக அவர்கள் விட்டு விடுகிற மாதிரி இல்லை. ஆழமாய் போவார்கள் போல் தெரிகிறது. அதனால் உன் கணக்கு காட்டாத சொத்துகளுக்கும் உனக்கும் இப்போது தொடர்பு இல்லாத மாதிரியும், பழைய தொடர்பை அவர்கள் கண்டுபிடித்து விடாத மாதிரியும் பார்த்துக் கொள். வழக்கு விசாரணை தீவிரமாக நிறைய நாட்கள் எடுக்கும். நாமும் அதை வேண்டுமளவு இழுக்கலாம். ஆனால் அதற்கும் ஒரு எல்லை இருக்கிறது. அதனால் சீக்கிரமே எல்லாம் மாற்றி விடு."

சம்பத் தன் வக்கீல்களையும், ஆடிட்டர்களையும் தன் தனி அலுவலகத்திற்கு அழைத்து ஆலோசனை நடத்தினான். அப்போது அவர்கள் பல லெட்டர்பேட் கம்பெனிகளை உரு வாக்கி அவற்றில் பல கம்பெனிகள் சொத்து மாறியிருந் தால் விசாரணை அமைப்புகளுக்குக் கண்டுபிடிக்க மிகவும் கஷ்டம் என்று சொன்னார்கள். முன்பே லெட்டர்பேட் கம் பெனிகளில் தான் சம்பத் முன்னெச்சரிக்கையுடன் பணம் வைத்திருந்தான். விசாரணையைக் குழப்ப இனி பல போலி பரிவர்த்தனைகள் செய்வது என்றால் அது பெரிய வேலை என்று நினைத்தபடி சம்பத் கவலையுடன் சொன்னான். “நமக்கு நேரம் அதிகம் இல்லை. எப்போது வேண்டுமானா லும் சோதனை போட அவர்கள் வீட்டுக்கும் ஆபிசுக்கும் வர லாம்”

மூத்த ஆடிட்டர் சொன்னார். ””வசந்த் கிட்ட பொறுப்பை விடுங்கள். அவன் கச்சிதமாய், சீக்கிரமாய் வேலையை முடிப்பான்”

வக்கீல் ஒருவரும் அதை ஆமோதித்தார். சமீபத்திய எல்லா பரிவர்த்தனைகளும் அவன் மேற்பார்வையிலேயே செய்யப் பட்டவை என்பதால் அவனால் சுலபமாகவும், சீக்கிரமாக வும் எல்லாவற்றையும் சரி செய்ய முடியும் என்பது அவரு டைய கருத்தாகவும் இருந்தது. அந்த சமயத்திலேயே ஒரு

அதிகாரியின் ரகசியப் போன்கால் வந்தது. சம்பத் வெளி நாடு செல்வதையும் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக் கப் போகிறது என்று அவர் சொன்னார்.

தேர்தல் அவனுடைய விதியை இப்படி மாற்றி விடும் என்று சம்பத் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுக்கும் இப்போது வசந்த் தான் ஆபத்பாந்தவனாய் தோன்றினான். உடனே அவன் வசந்தை வரவழைத்தான். அன்னியச் செலாவணி, வெளிநாட்டு வர்த்தகங்கள் முதலானவற்றில் வல்லுனர் ஒருவரும் வரவழைக்கப்பட்டார். அவர் எப்படி யெல்லாம் செய்ய வேண்டும் என்று விளக்கினார். அவர் சொன்னதை சம்பத்தும், வசந்தும் கவனமாகக் கேட்டுக் கொண்டார்கள். வசந்த் அவர் சொல்லச் சொல்லக் குறிப் புகள் எடுத்துக் கொண்டான். புத்திசாலித்தனமான சந்தே கங்கள் கேட்டான். அவருக்கும் அவனை மிகவும் பிடித்து விட்டது. அவர் அங்கிருந்து போகும் முன் என்ன சந்தே கம் வந்தாலும் தாராளமாய் அவரைச் சந்தித்துக் கேட்கலாம் என்று அவனிடம் சொல்லி விட்டுப் போனார்.

அடுத்ததாக ஆடிட்டர் எதில் எதில் எவ்வளவு பணம் வரை போடலாம் என்பதை விளக்கினார். அதையும் வசந்த் கவனமாகக் கேட்டுக் கொண்டு குறித்து வைத்துக் கொண்டான். சம்பத்திடம் பல பெயர்களில் சொத்துக்கள்,

அக்கவுண்ட்கள் ஏராளமாய் இருந்தன. எதிலிருந்து எங் கெங்கு போக வேண்டும், அங்கிருந்தெல்லாம் எங்கே போக வேண்டும் என்று சங்கிலித் தொடராகக் கச்சிதமாய் திட் டம் போடப்பட்டது. ஒவ்வொன்றும் குறைந்தபட்சம் ஐந்தாறு பரிவர்த்தனைகள் ஆகி, முடிவில் போகும் இடங்கள் தீர்மா னிக்கப்பட்டன. இந்த முடிவுகள் எடுக்கப்பட்ட போது இரவு மணி இரண்டாகி விட்டது.

சம்பத்துக்கு அந்த அலுவலகத்தின் மாடியிலேயே சகல வச திகளுடன் ஒரு தனியறை இருந்தது. அவன் அன்றிரவு அங் கேயே தங்கினான். மாடியில் இன்னொரு அறையும் இருந் தது. அதிலேயே வசந்தையும் தங்கச் சொன்னான். இரவு நேரத்தில் தொலைவில் இருக்கும் அவன் வீட்டுக்குப் போக விரும்பாத வசந்தும் ஒத்துக் கொண்டு அங்கேயே தங்கி னான். இருவரும் உறங்கப் போனார்கள்.

சம்பத்திற்கு உறக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத் தாலும் ஒரு கால் மணி நேரம் களைப்பில் கண்ணயர்ந்தால் விழிப்பு வந்து பின் முக்கால் மணி நேரம் மனம் பல கவலை களில் ஆழ்ந்தது. ஐந்து மணிக்கு மேல் அவனுக்குப் படுக் கையில் படுக்கவும் முடியவில்லை. அவன் வெளியே வந்த போது பக்கத்து அறையில் வசந்த் இல்லை. அடிவயிற்றில் ஏதோ ஒரு கலவரத்தை உணர்ந்த சம்பத் அவசர அவச

ரமாகக் கீழே வந்த போது வசந்த் ஒரு கம்ப்யூட்டரில் தன் வேலையை ஆரம்பித்திருந்தான். சம்பத்தைப் பார்த்தவுடன் புன்னகையுடன் "குட் மார்னிங்" சொன்னான்.

மனம் நிம்மதியடைந்த சம்பத் அன்புடன் கேட்டான். "என்ன வசந்த். இவ்வளவு சீக்கிரம் எழுந்திருச்சுட்டே."

வசந்த் கம்ப்யூட்டரிலிருந்து கண்களை எடுக்காமல் சொன் னான். "தூக்கம் வரலை. இந்த வேலைகளை எல்லாம் எவ் வளவு சீக்கிரம் செஞ்சு முடிக்கிறோமோ அவ்வளவு நல்லது. அதனால் நாலு மணிக்கு அலாரம் வெச்சு எழுந்திருச்சுட் டேன்"

சம்பத் அவனைத் தட்டிக் கொடுத்தபடி கம்ப்யூட்டரில் அவன் செய்து கொண்டிருக்கும் வேலைகளைப் பார்த்தான். இரவு அவர்கள் பேசிக் கொண்ட வேலைகள் தான் அவை. கச்சிதமாய் நடந்து கொண்டிருக்கும் வேலையில் தொந்தி ரவு செய்ய வேண்டாம் என்று நினைத்தவனாய் எழுந்து போனான்.

அன்று இரவு சாப்பாட்டுக்கு சம்பத் வசந்தைத் தன் வீட் டுக்கு அழைத்தான். அது இது வரை எந்த ஊழியனுக்

கும் கிடைக்காத ஒரு கௌரவம். வசந்த் அந்த அழைப்பை ஏற்று சம்பத்தின் வீட்டுக்குப் போனான். சம்பத் தன் அழகான மனைவியிடமும், எட்டு வயது மகனிடமும் வசந்தைத் தன் நண்பனாக அறிமுகப்படுத்தினான். அவர்களுக்கும் வசந்தை மிகவும் பிடித்து விட்டது.

சம்பத்தின் மனைவி மான்சி ஒரு கலைப்பிரியை. ஓவியங்கள் வரைவதிலும் கைவினைப் பொருள்கள் செய்வதிலும் அவளுக்கு மிக விருப்பம். உலகப் புகழ்பெற்ற ஓவியர்களின் ஓவியங்கள் அவளிடம் நிறைய இருக்கின்றன. அவளும் உலகத் தரத்தில் வரைவதாக விமர்சகர்கள் சொன்னார்கள். ஆனால் அது பணம் கொடுத்து வரவழைத்த விமர்சனமாகச் சொல்பவர்களும் இருந்தார்கள். மான்சி அடிக்கடி ஓவியக் கண்காட்சி வைத்தாள். உலகப் புகழ்பெற்ற ஓவியர்களின் ஓவியங்களை வரைந்தும், தன் சொந்தக் கற்பனையில் வரைந்தும் அவள் கண்காட்சியில் வைத்தாள். அதைப் பலர் நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போனார்கள். அப்படி அதிக விலை தந்து வாங்கிக் கொண்டு போனவர்களும் சம்பத்திடம் காரியமாக வேண்டியிருந்தவர்கள் என்ற பேச்சும் அடிபட்டது.

மான்சியின் செகரட்டரி நிலாவும் அந்த இரவு விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தாள். அவள் வசந்த் சென்று அரை

மணி நேரம் கழித்து வந்தாள். எளிமையாகவும் அழகாகவும் இருந்த நிலாவை மான்சி வசந்துக்கு அறிமுகப்படுத்தினாள். அவள் ஒரு நர்சின் மகள் என்றும், அவளும் மிக நன்றாக வரைவாள் என்றும் சொன்னாள். வசந்துக்கு அவளை முதல் பார்வையிலேயே மிகவும் பிடித்து விட்டது. அந்த விருப்பத் தையே அவன் அவள் முகத்திலும் படித்தான். ஹாய் என்று இருவரும் கைகுலுக்கிக் கொண்டார்கள். அந்த ஸ்பரிசம் இருவருக்கும் இனிமையாக இருந்தது. ஆனால் அதற்கு மேல் அவளை அவன் நேராகப் பார்க்கவில்லை. அவள் பார்வை அடிக்கடி தன் மேல் விழுவதை அவன் உணராமல் இல்லை. பின் அவளும் அவனைப் பார்ப்பதை நிறுத்தி விட் டாள். அவனுடைய அலட்சியம் அவளைப் பாதித்து இருக் கும் என்பது அவனுக்குப் புரிந்தது.

அரசியல், கம்ப்யூட்டர், ஓவியங்கள், என்று அவர்கள் பேச்சு நகர்ந்தது. அதிகம் பேசியது வசந்தும் மான்சியும் தான் என் றாலும் சம்பத்தும், நிலாவும் அவ்வப்போது பேச்சில் கலந்து கொண்டார்கள். நிலா பேசும் போது மட்டும் அவளை வசந்த் பார்த்தான். அவன் பார்க்கும் போதே அவன் அலட்சியத் தையும் மீறி அவளுக்குள் ஒரு ஆனந்தம் எழுந்தது. ஆனால் அவள் பேசி முடித்ததும் அவன் முகத்தைத் தாமதப்ப டுத்தாமல் திருப்பிக் கொண்டான். அது நிலாவைக் கஷ் டப்படுத்தியது. அறிமுகமான சில நிமிடங்களில் ஒருவன்

அவளை இப்படிப் பாதிக்க முடிவது அவளுக்கே அவள் மீது கோபத்தை ஏற்படுத்தியது. அதன்பின் அவளும் அவனைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் அதை அவள் மிகவும் கஷ்டப்பட்டுச் சாதிக்க வேண்டியிருந்தது.

சாப்பிட்டு முடித்து விட்டு சம்பத்தும் வசந்தும் ஒரு சோபா வில் உட்கார்ந்து தங்களுக்கு ஆக வேண்டிய காரியங்க ளைப் பேசிக் கொண்டிருக்க, மான்சியும், நிலாவும் சற்று தள்ளி இருந்த சோபாவில் அடுத்த ஓவியக் கண்காட்சி யைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

திடீரென்று சம்பத் வசந்துக்கு மட்டும் கேட்கும்படியாக மெல்லச் சொன்னான். “அந்தப் பொண்ணு நிலா உனக்கு நல்லா மேட்ச் ஆவான்னு நினைக்கிறேன். அவ நல்லப் பொண்ணும் கூட”

வசந்த் சுவாரசியம் காட்டாமல் சொன்னான். “எனக்கு முறைப்பொண்ணு ஒருத்தி இருக்கா சார்”

# 8

சிறிது நேரத்தில் நிலா கடிகாரத்தைப் பார்த்து விட்டு "நேரமாகி விட்டது" என்று சொன்னபடி எழுந்து நின்றாள். வசந்தும் அப்போது தான் நேரமாகி விட்டது என்பதை உணர்ந்தவன் போல் எழுந்தான்.

மான்சி வசந்திடம் அவன் வீடு எங்கே இருக்கிறது என்று கேட்டாள். அவன் சொன்னான். "நீ போகிற வழியில் தான் இவள் வீடு இருக்கு. இவளை வீட்ல ட்ராப் பண்ண முடியுமா வசந்த். இல்லைன்னா நான் என் காரையும் டிரைவரையும் தான் அனுப்பணும்"

நிலா உடனே சொன்னாள். “அவருக்கெதுக்கு சிரமம். நான் கால் டேக்ஸில போய்க்குவேன்”

வசந்த் சின்ன தயக்கத்திற்குப் பிறகு சொன்னான். “போகிற வழியில் இறக்கி விட சிரமம் என்ன இருக்கு. வாங்க”

நிலாவும் சின்ன தயக்கம் காட்டியே அவன் பின்னால் போனாள். அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டு இருந்த மான்சி சம்பத்திடம் சொன்னாள். “ரெண்டு பேரும் நல்ல ஜோடியா தெரியறாங்க”

சம்பத் சொன்னான். “எனக்கும் அப்படி தான் தோணிச்சு. வசந்த் கிட்ட கூட சொன்னேன். அவனுக்கு யாரோ முறைப் பொண்ணு இருக்காம்... அதுக்கப்பறம் விட்டுட்டேன்...”

மறுநாள் காலை எட்டு மணிக்கே சம்பத் தன் அலுவலகத் திற்குப் போனான். வழக்கமாகப் பதினோரு மணி ஆகாமல் அவன் அலுவலகம் நுழைவதில்லை. அன்று அத்தனை சீக் கிரமாக யாரும் எதிர்பாராத விதமாகப் போன போது அலு வலகத்தில் வசந்த் மட்டுமே வந்திருந்தான். அவன் மும்மு ரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். ”குட்மார்னிங்

சார்” என்ற அவனிடம் சம்பத் கேட்டான். “நீ எத்தனை மணிக்கு வந்தாய்?”

“வீட்டிலிருந்து ஆறு மணிக்குக் கிளம்பிட்டேன். ஏழு மணிக்கு இங்கே வந்தாச்சு. இந்த வேலை எல்லாம் முடிஞ்சா தான் நிம்மதி”

சம்பத் நட்புடன் அவன் தோளைத் தட்டிக் கொடுத்தான். பின் அவன் அருகே உட்கார்ந்து கொண்டு அவன் வேலை யைப் பார்த்துக் கொண்டிருந்தான். வசந்தின் விரல்கள் மிக வேகமாகக் கம்ப்யூட்டர் கீ போர்டில் இயங்கிக் கொண்டிருப் பதைப் பார்ப்பதற்கே நல்ல காட்சியாக இருந்தது. லாவகமா கவும், பதட்டமில்லாமலும், அதே நேரம் உச்சக்கட்ட வேகத் திலும் அந்த விரல்கள் வேலை பார்த்தன. சம்பத் இப்படி யொரு வேகத்தை இது வரை எங்கேயும் பார்க்கவில்லை.

இரண்டு நாட்களில் எல்லா டாக்குமெண்ட் வேலைகளும் முடிந்து வக்கீல்களும், ஆடிட்டர்களும் வந்து பார்வையிட் டார்கள். மூத்த வக்கீல் சம்பத்திடம் தனியாகக் கூப்பிட்டுச் சொன்னார். “இந்த மாதிரி ஆள் கிடைக்க நீங்க ரொம்பவே குடுத்து வச்சிருக்கணும். இத்தனை டாக்குமெண்ட்லயும் ஒரு சின்னத் தப்பு கூட கண்டுபிடிக்க முடியல. இதுவே என்

டைப்பிஸ்ட் கிட்ட குடுத்திருந்தா நாள்களும் இரட்டிப்பா எடுத்துருப்பாள். தப்பும் அதிகமா இருந்திருக்கும்."

ஆடிட்டர் சொன்னார். "சொல்றதை கப்புன்னு புடிச்சுக்க றான். செய்யறதைக் கச்சிதமா செய்யறான். இந்த மாதிரி ஒருத்தன் எனக்குக் கிடைச்சிருந்தா நான் இன்னும் நூறு க்ளையண்ட்ஸைப் பிடிச்சிருப்பேன்..."

சம்பத்துக்குப் பெருமையாய் இருந்தது. வக்கீல் சொன்னார். "டாக்குமெண்ட்ஸ் எல்லாம் ரெடியாயிடுச்சு. இனி தாமதப் படுத்த வேண்டாம். வெளிநாட்டுல போய் செய்யறதை எல் லாம் உடனடியா செஞ்சுடறது நல்லது."

சம்பத்துக்கும் அவர் சொல்வது சரியென்றே தோன்றி யது. இப்போது அவன் வெளிநாடு போனால் இப்போதைய அரசாங்கம் ஏதாவது பிரச்னை செய்தாலும் செய்வார்கள். யோசித்து மறுநாளே வசந்தை வெளிநாட்டுக்கு அனுப்ப முடிவு செய்தான். வசந்துக்குப் போன் செய்த போது எப்போ தும் போல எந்த மறுப்பும் சொல்லாமல் சரியென்றான்.

அவனுடன் யாராவது நம்பிக்கையான ஆள் சென்றால் அவ னுக்கு உதவியாய் இருக்கும் என்று சம்பத்துக்குத் தோன்

றியது. "யாரையாவது கூட கூட்டிகிட்டு போ வசந்த். உனக்குக் கொஞ்சம் உதவியாயிருக்கும். யாரை அனுப்பட்டும் சொல்லு"

வசந்த் சொன்னான். "பாஸ்கர் வரட்டும் சார். அவன்னா நம்பிக்கையானவன்...."

பாஸ்கர் மீது சம்பத்துக்கு உயர்ந்த அபிப்பிராயம் இல்லை. அவனுக்கு அறிவு போதாது என்ற அபிப்பிராயம் தான் பாஸ்கர் மீது சம்பத் வைத்திருந்தான். ஆனால் இது போன்ற விஷயங்களில் அறிவை விட நம்பிக்கைக்குரியதாக இருப்பதே முக்கியம் என்று நினைத்தவனாகச் சொன்னான். "சரி அப்படியே செய். டிக்கெட்ஸ் இப்பவே புக் பண்ணிக்கோ. எல்லா நாடுகளுக்கும் போய் வேலை எல்லாம் முடிச்சுட்டு வந்தா போதும்."

அன்று மாலையில் அமலாக்கத் துறையிலிருந்து பழைய அதிகாரி ஒருவர் போன் செய்து சுந்தரத்திடம் சொன்னார். "நாளைக்கு உங்க மகன் வீட்டுக்கு சோதனையிட வரப் போறாங்க"

அந்தத் தகவலை மகனுக்கு சுந்தரம் உடனடியாகத் தெரி வித்தார். “உன் வீட்டுலயோ, ஆபிஸ்லயோ பிரச்சினை வர்ற மாதிரியான எந்த டாக்குமெண்ட்ஸும் வேண்டாம். கம்ப்யூட் டர்ல கூட சாஃப்ட்காபி இருக்க வேண்டாம்”

சம்பத் வசந்தை அழைத்து விஷயத்தைச் சொன்னான். ”கவலைப்படாதீங்க சார். நாம இப்ப செஞ்சிட்டிருக்கற டாக் குமென்ட்ஸை எல்லாம் என் லேப்டாப்புக்கு மாத்திக்க றேன். இது சம்பந்தமா நீங்க வக்கீலுக்கும், ஆடிட்டருக்கும் அனுப்பின மெயிலை எல்லாம் நீக்கிடுங்க. அவங்க கிட்ட யும் நீக்கிடச் சொல்லுங்க”

சொல்லி விட்டு வசந்த் மின்னல் வேகத்தில் இயங்கினான். சம்பத் வக்கீல்களுக்கும், சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் ஆடிட்டர்களுக்கும் போன் செய்து தகவலைச் சொல்லி விட்டு தன் ஆபிஸ் மெயில்கள், பர்சனல் மெயில்களில் இருந்து வில்லங்கமானதை எல்லாம் வேகமாக நீக்க ஆரம் பித்தான். கணக்கில் காட்டாத மற்ற சில அவசியமானதும், அவசியமில்லாததுமான ஃபைல்களை சம்பத் தன் ஆபிசி லிருந்து எடுத்துத் தன் நம்பிக்கைக்குரிய நண்பன் ஒருவன் வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

எல்லா வேலைகளையும் முடிக்க வசந்துக்கு இரவு பதி னோரு மணியானது. பின் தான் அவன் கிளம்பினான். "சரி சார் நான் கிளம்பறேன். நாளைக்கு காலைல ஏழு மணிக்கு சிங்கப்பூருக்கு விமானம். அங்கே வேலையை முடிச்சுட்டு மலேசியா. அப்புறம் இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி, சுவிட்சர்லாந்த், கனடா வேலைகளை எல்லாம் முடிச்சுட்டு வர பதினெட்டு நாள் ஆயிடும். வர்ற இருவதாம் தேதி காலைல இங்கே இருப்பேன்."

சம்பத் அவனைக் கட்டியணைத்து கைகுலுக்கி வாழ்த்துச் சொல்லி அனுப்பினான். "எதுவா இருந்தாலும் டைரக்டா போன் பண்ண வேண்டாம். என் ஃப்ரண்ட் ஒருத்தன் நம் பரை நோட் பண்ணிக்கோ. அவனுக்குப் பண்ணிச் சொல்லு. நானும் அந்த நம்பர்ல இருந்தே உன்னைக் கூப்டறேன்"

"அதுவும் நல்லது தான் சார்" என்ற வசந்த் அந்த நண்பனின் போன் நம்பரைக் குறித்துக் கொண்டு கிளம்பினான்.

மறுநாள் காலை சரியாக ஆறு மணிக்கு சம்பத்தின் வீடு மற்றும் அலுவலகங்களை அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனையிட வந்தார்கள். அந்த நேரத்தில் வசந்த் விமான நிலையத்தில் பாஸ்கருடன் இருந்தான். அவர்கள் விமானம்

கிளம்பிய போது  அந்தச் செய்தி ஒளிபரப்பாகிக் கொண்டி ருந்தது.

சுந்தரம் நிருபர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். "இந்த அரசாங்கம் என் மகன் என்பதற்காகவே சம்பத்தைக் குறி வைத்துப் பழிவாங்கத் துடிக்கிறது. சம்பத் இந்த நாட்டில் வேகமாக முன்னேறி வருகிற ஒரு இளம் தொழிலதி பர். வெளிநாட்டில் படித்திருந்தாலும் அவர் இந்த தேசத் தின் மேல் வைத்திருக்கும் அன்பின் காரணமாக இங்கி ருந்தே தொழில் செய்து வருகிறார். வருடா வருடம் சரியாகக் கணக்கு காண்பித்து, சரியாக வரி கட்டி வருகிறார். அப்ப டிப்பட்ட அவர் மீது அபாண்டமாய் பழி சுமத்தி வரும் இந்த அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இப்போது சோதனை என்ற பெயரில் அவருக்கு மன உளைச்சலும் தந்து வருகிறது. முடிவில் எதுவும் கிடைக்கப் போவதில்லை. ஏன் என்றால் அவருக்கு மறைக்க எதுவும் இல்லை. அத னால் மறைத்ததும் இல்லை. தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும். தர்மம் மறுபடி வெல்லும் என்ற பாரதியின் தீர்க்க தரிசன வார்த்தைகளை நம்புபவன் நான். எல்லாவற்றிற்கும் காலம் ஒரு நாள் பதில் சொல்லும்...."

பாஸ்கரும் வசந்தும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டார்கள். இருவர் முகத்திலும் புன்னகை மெல்ல விரிந்தது.

பாஸ்கர் ஆச்சரியத்துடன் கேட்டான். “எப்படிடா இப்படியெல்லாம் கூசாம பேச முடியுது?”

வசந்த் சொன்னான். “அது தான் அரசியல். இப்படியெல்லாம் பேச முடிஞ்சா தான் அவன் அரசியல்வாதி”

பாஸ்கர் மெல்லக் கேட்டான். “இப்ப நீ எடுத்துட்டுப் போற டாக்குமெண்ட்ஸ் சொத்து, அக்கவுண்ட்ஸ்களோட மதிப்பு எவ்வளவு இருக்கும்?”

வசந்த் சொன்னான். “கிட்டத்தட்ட 3400 கோடி இருக்கும்”

பாஸ்கர் வாயைப் பிளந்தான். “அவ்வளவா. அஞ்சே வருஷத்துல இத்தனை சம்பாதிச்சுட்டானாடா. அப்படின்னா மத்தவங்க ஒவ்வொருத்தனும் எத்தனை சம்பாதிச்சிருப்பானுக.?”

வசந்த் சிரித்துக் கொண்டே நண்பனிடம் சொன்னான். “முழுசா கூட்டிப் பார்த்தா உனக்கு ஹார்ட் அட்டேக் வந்தாலும் வந்துடும். எதுக்கு வீணா விஷப் பரிட்சை?”

# 9

அமலாக்கத்துறை அதிகாரிகள் சம்பத்தின் வீட்டில் சோதனைகள் முடித்துக் கொண்டு வெளியே சென்ற போது இரவு மணி எட்டரையாகி விட்டிருந்தது. அவர்கள் பத்திரிக்கையாளர்கள் கேள்விகளுக்குப் பதில் எதுவும் அளிக்காமல் போய் விட்டார்கள். ஆனால் சம்பத் விரிவான பேட்டி கொடுத்தான். "இளம் தொழிலதிபர்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக இப்படித் துன்புறுத்துவது இந்த அரசாங்கத்திற்கு அழகல்ல. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அனாவசியமாய் எனக்கு மன உளைச்சலை இவர்கள் ஏற்படுத்துகிறார்கள். இன்றைக்கு என் வீடு மற்றும் அலுவலகத்திலிருந்து சட்டத்திற்குப் புறம்பான எதையுமே அவர்கள் எடுத்துச் செல்ல

வில்லை. ஆதாரமே இல்லாத சில குற்றச்சாட்டுகளை இவர்களே கற்பனையாக நினைத்துக் கொண்டு இங்கே வந்து ஆதாரம் தேடினால் கிடைக்குமா? எனக்கு இவர் களை நினைத்தால் வேடிக்கையாகத் தான் இருக்கிறது"

சிங்கப்பூரில் ஓட்டல் அறையில் இருந்து பாஸ்கரும் வசந்தும் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பாஸ்கர் சொன்னான். "இவனுக்கும் அரசியல்வாதியாகிற திறமை அத்தனையும் இருக்கு. ஆனால் ஏன் அரசியலுக் குப் போகலைன்னு ஆச்சரியமாய் இருக்கு"

"மெல்லப் போயிடுவான்" என்று வசந்த் சொன்னான். பின் மெல்லக் கேட்டான். "உனக்கு அவனை அவ்வளவாய் பிடிக்காதா?"

பாஸ்கர் சொன்னான். "எனக்கு மட்டுமல்ல, அவன் கிட்ட வேலை பார்க்கிற யாருக்குமே அவனைப் பிடிக்காது. யாரை யும் மதிக்க மாட்டான். உனக்கும் ரெண்டு வர்ஷம் முன்னா லயே இவன் கிட்ட வேலைக்குச் சேர்ந்திருக்கேன். வேலை செய்யற எல்லாரையும் எதோ புழு பூச்சிகளை மாதிரி தான் நடத்துவான். எனக்குத் தெரிஞ்சு அவன் மதிக்கிற ஒரே

வேலைக்காரன் நீ தான். உன்னை அவன் வீட்டுக்கு டின் னருக்குக் கூப்பிட்டான்னு சொன்னா ஆபிஸ்ல அத்தனை பேரும் வாயப் பிளக்கிறானுக. உன்னால அவனுக்கு நிறைய வேலையாகுது. அதனால தான் அப்படி மரியாதையா நடத் தறான்னு பேசிகிட்டாங்க. வேலை முடிஞ்சுட்டா அவன் குணமே மாறிடும்"

வசந்த் அது தெரியும் என்பது போலப் புன்னகைத்தான்.

தொடர்ந்த நாட்களில் பாஸ்கர் தன் நண்பன் வசந்த் வேலை பார்க்கும் விதம் பார்த்து பிரமித்தான். எந்த நாட்டி லும் அவன் அழகான இடங்களைச் சுற்றிப் பார்க்கப் போக வில்லை. ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் ஊர் சுற்றிப் பார்க்க பாஸ்கரை அனுப்பி வைத்தான். ஆட்களைச் சந்திப்பது, பேசுவது, சம்பத்தைத் தொடர்பு கொள்வது, பத்திரங்கள் உருவாக்குவது, கையெழுத்து வாங்கிப் பத்திரப்படுத்திக் கொள்வது என்று முழுவதுமாக அவன் வந்த வேலையா கவே இருந்தான்.

பாஸ்கர் ஊரெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு இரவு நேரம் ஓட்டல் அறைக்கு வரும் போதும் வசந்த் லேப்டாப்பில் ஏதா

வது வேலை செய்து கொண்டே இருப்பான். அவன் உறங்கி பாஸ்கர் பார்த்ததில்லை. பாஸ்கர் உறங்கும் போது அவன் லேப்டாப்பில் வேகமாக எதையாவது செய்தபடி இருப் பான். உறக்கத்தில் இருந்து இடையில் விழித்துப் பார்க்கும் போதும் அப்படியே இருப்பான். காலை எழுந்து சோம்பல் முறித்தபடி பார்க்கும் போதும் லேப்டாப்பில் வேலை செய்து கொண்டே இருப்பான்.

ஒரு நாள் பாஸ்கர் ஆச்சரியத்தோடு கேட்டான். "ஏண்டா உனக்குத் தூக்கமே வராதா?"

"தூங்கினேனே"

"எப்போ?"

"ராத்திரி ஒரு மணில இருந்து நாலு மணி வரைக்கும்"

"அது போதுமாடா?"

"போதும், அது ஆழமான தூக்கமா இருந்தா"

பாஸ்கருக்கு ஒரு நாளைக்கு ஏழெட்டு மணி நேரம் உறங்கி யும் சில நாட்களில் தூக்கம் போதவில்லை. சுற்றிப் பார்க்க வண்டிகளில் போகும் போது அவனையுமறியாமல் கண்ண யர்ந்து விடுவான். அப்படி இருக்கையில் தினமும் சுமார் மூன்று மணி நேரம் மட்டும் உறங்கி இவன் சுறுசுறுப்பாக நாள் முழுவதும் இருக்கும் விதம் அவனுக்கு அதிசயமாகத் தான் தெரிந்தது.

ஸ்பெயினில் இருக்கும் போது ஒரு நாளிரவு பாஸ்கர் வசந்தி டம் கேட்டான். “நீ இவ்வளவு கஷ்டப்பட்டு அவனுக்கு எல் லாமே செஞ்சு தர்றியே. உனக்கு இதுல எதாவது ஒரு பகு திய அவன் தர்றானா?”

வசந்த் சொன்னான். ”அதெல்லாம் இல்லை. அதிகபட்சமா மாச சம்பளம் ஐம்பதாயிரம் ஏத்துவான். இந்த வெளியூர் பயணங்கள்ல செய்யற செலவை எல்லாம் அதிகமானாலும் கண்டுக்க மாட்டான். அவ்வளவு தான்.”

பாஸ்கருக்கு வசந்தை மிக நன்றாகத் தெரியும். வசந்த் ஏமாந்தவன் அல்ல. மிக மிக புத்திசாலி. சம்பத்துக்குச் சேவை செய்வதற்காகவே பிறந்தவன் போல் அவன் நடந்து கொள்வது அவனுக்கு இயல்பாய்த் தெரியவில்லை. “நான்

ஒன்னு கேட்டால் கோவிச்சுக்காம உண்மையைச் சொல் வாயா?"

வசந்த் சொன்னான். "அது உன் கேள்வியைப் பொறுத்தது. எதுக்கும் கேட்டுப் பாரு"

"நீ ஏதோ திட்டம் போட்டு தான் இப்ப வேலை செஞ்சுகிட்டி ருக்கிற மாதிரி எனக்குத் தோணுது. அது உண்மையா?"

வசந்த் புன்னகையுடன் சொன்னான். "சிலதை எல்லாம் நீ எவ்வளவு குறைவாய் தெரிஞ்சு வச்சுக்கறியோ அவ்வள வுக்கு நல்லது பாஸ்கர்"

பாஸ்கர் பெருமூச்சு விட்டான். "அதுவும் சரி தான். ஆமா நீ ஏன் என்னைக் கூட்டிகிட்டு வந்தாய். நண்பன்கிறதாலயா, இல்லை நீ செய்யற எதுவும் எனக்குப் புரியாதுங்கறதாலயா?"

வசந்த் சொன்னான். "நண்பன்கிறதால தான். யாரையாவது கூட்டிகிட்டு போக சம்பத் சொன்னான். உனக்கும் இத்தனை நாடுகள் சுத்திப் பார்த்த மாதிரி இருக்கும்னு நினைச்சேன்.

எவன் என் கூட வந்திருந்தாலும் நான் என்ன செய்யறேன்னு அவனுக்குப் புரியப் போறதில்லை."

அதற்கு மேல் பாஸ்கர் வசந்திடம் எந்தக் கேள்வியும் கேட்க வில்லை. "தேங்க்ஸ்டா" என்று சொல்லி நிறுத்திக் கொண் டான்.

சுவிட்சர்லாந்தில் கூட, பயணம் செய்கையில் இயற்கை அழ குகளை வசந்த் ரசித்தானேயொழிய சுற்றிப் பார்க்க பாஸ் கருடன் செல்லவில்லை. இந்த அளவு கட்டுப்பாடு ஒருவ னுக்கு இருக்குமா என்று பாஸ்கர் ஆச்சரியப்பட்டான்.

ஒவ்வொரு நாட்டிலும் வேலை முடிந்தவுடன் டாக்கு மெண்ட்களை ஸ்கேன் செய்து சம்பத்துக்கு வசந்த் அனுப்பி வைப்பான். கனடாவில் இருக்கும் போதும் அப்படியே செய்த வசந்த் ஒரு செட் டாக்குமெண்ட்களை மட்டும் ஸ்கேன் செய்யாமல் விட்டதை பாஸ்கர் கவனித்து விட்டுச் சொன் னான். "வசந்த் நீ அந்த செட் பேப்பர்ஸை ஸ்கேன் பண்ணி அனுப்ப மறந்துட்டாய்னு நினைக்கிறேன்"

வசந்த் புன்னகையுடன் சொன்னான். "வேணும்னு தான் எடுத்து அனுப்பலை. அது தேவையில்லை"

பாஸ்கர் கேள்விக்குறியுடன் பார்த்த போது வசந்த் கண்ண டித்தான். பாஸ்கர் மெல்லச் சொன்னான். "சம்பத் ஆபத்தா னவன் வசந்த். ஞாபகம் வச்சுக்கோ."

வசந்த் சொன்னான். "அவனைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும் பாஸ்கர்"

அதற்கு மேல் பாஸ்கர் எதுவும் சொல்லவில்லை. வசந்த் புத் திசாலி. அவனுக்கு யார் அறிவுரையும் தேவையில்லை.

மறுநாள் கனடாவிலிருந்து இந்தியா கிளம்பினார்கள். கிளம் பும் போது தயக்கத்துடன் பாஸ்கர் மெல்லக் கேட்டான். "எனக்கு ஒரே ஒரு உதவி செய்வாயா?"

வசந்த் கேட்டான். "என்ன?"

பாஸ்கர் நண்பன் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன் னான். "என் தங்கைக்கு வரன் பாத்துட்டு இருக்காங்க. சரி யான வரன் அமைஞ்சதுன்னா கல்யாணத்துக்குப் பத்து லட்சம் ஏற்பாடு பண்ணித் தரேன்னு அப்பா கிட்ட வாக்கு

தந்திருக்கேன். அந்த சமயத்துல எனக்கு பத்து லட்சம் கடனா தர முடியுமா?"

வசந்த் தன் நண்பனின் கைகளை இறுக்கியபடியே சொன் னான். "கவலையே படாதே. கண்டிப்பா தரேன்."

வசந்த் விமானத்தில் வரும் போது பாஸ்கரிடம் சொன்னான். "என்னைக்காவது ஒரு நாள் சம்பத் உன் கிட்ட இந்த டூர்ல நடந்ததை எல்லாம் கேட்பான். உனக்கு எதுமே தெரியா துன்னு சொல்லிடு."

"அது தானே உண்மை" என்று பாஸ்கர் சொன்னான்.

"இனி என்ன நடந்தாலும் ஆச்சரியப்படாதே. நாம ரெண்டு பேரும் இனியொரு தடவை சந்திப்போமாங்கறது கூட நிச்ச யமில்லை. டேக் கேர்" என்று வசந்த் சொன்ன போது பாஸ்கர் திகைத்துப் போனான்.

பின் அழாத குறையாகச் சொன்னான். "டேய் இப்ப தானே நீ என் தங்கை கல்யாணத்துக்கு பத்து லட்சம் கடன் தர்ற

தாய் சொன்னாய். இப்ப இதுவே கடைசி சந்திப்புங்கற மாதிரி சொல்றே."

"உன் தங்கை கல்யாணம் நிச்சயமானால் கண்டிப்பாய் எனக்குத் தெரியவரும். எப்படியாவது பத்து லட்சம் ரூபாய் உன் கையில் வந்து சேரும். இது சத்தியம். போதுமா"

பாஸ்கர் தலையசைத்தான். பின் வருத்தத்துடன் நண்ப னின் கைகளைப் பிடித்துக் கொண்டு கேட்டான். "எங்கடா போறே?"

"எங்கயோ"

பாஸ்கருக்குப் பெரும்பயம் பிடித்துக் கொண்டது. "அவன் என் கிட்ட கேட்டா என்னடா சொல்றது? ஒன்னா சேர்ந்து போய்ட்டு ஒண்டியா வந்து நிக்கறியேன்னு என்னைப் பிடிச் சுக்க மாட்டானாடா?"

"இப்ப கேட்க மாட்டான். நான் அவன் கிட்டப் பேசிக்கறேன். பத்து நாள் கழிச்சுக் கேட்பான். அப்ப அவனுக்குத் தெரியாத மாதிரியே உனக்கும் ஒன்னும் தெரியாதுன்னு சொல்லிடு"

விமானம் சென்னை வந்திறங்கியது.

# 10

வசந்த் வீட்டுக்குப் போனவுடனேயே சம்பத்துக்குப் போன் செய்தான்.

சம்பத் மிகவும் சந்தோஷத்துடன் சொன்னான். “கங்கிராட்ஸ் வசந்த்! எல்லாம் கச்சிதமாய் செய்து விட்டு வெற்றிகரமாய் திரும்பி வந்திருக்கிறாய்”

வசந்த் சொன்னான். “நன்றி சார். ஆனால் சின்னதாய் ஒரு பிரச்னை…”

சம்பத் பதற்றத்துடன் கேட்டான். "என்ன பிரச்னை வசந்த்?"

"இங்கே நான் இல்லாதப்ப அமலாக்கத் துறை அதிகாரிகள் வந்து என்னை அக்கம்பக்கத்தில் விசாரிச்சிருக்காங்க. நான் இல்லைன்னவுடனே, வந்தால் ஆபிசுக்கு வந்து பார்க்கும்படி சொல்லி விட்டுப் போயிருக்காங்க. எனக்கென்ன சந்தேகம்னா யாரோ என்னைப்பத்தியும் அவங்க கிட்ட போட்டுக் கொடுத்திருக்கலாம்..."

சம்பத் குழப்பத்தோடு யோசித்தான். அவனுடைய மற்ற வேலையாட்களிடம் விசாரித்த போது யாராவது ஒருவன் வசந்துக்கு இருக்கும் செல்வாக்கால் பொறாமைப்பட்டு எதாவது சொல்லியிருக்கலாமோ?

வசந்த் சொன்னான். "இப்ப கூட வீட்டுக்கு எதிர்ல பெட்டிக்கடைல ரொம்ப நேரமா ஒருத்தன் நின்னுகிட்டிருக்கான். என் வீட்டையே பார்த்துகிட்டிருக்கான். பார்த்தா சிஐடி மாதிரி தான் தோணுது..."

சம்பத் பயந்து போனான். அவனுடைய எல்லா ரகசியங்களையும் தெரிந்தவன் வசந்த். பல்லாயிரம் கோடி ரூபாய் பரிவர்த்தனை வேலைகளை வெளிநாடுகளுக்குப் போய்

செய்து விட்டு இப்போது தான் திரும்பியிருக்கிறான். அவனி டம் புதிய அசல் டாக்குமெண்ட்ஸ் வேறு இருக்கிறது. இந் தச் சமயத்தில் அவனை அமலாக்கத்துறை குடைவதோ, அவன் சிக்குவதோ நல்லதல்ல என்பது சம்பத்துக்கும் புரிந் தது.

“பயப்படாதே வசந்த்....”

வசந்த் சிரித்தான். “பயமெல்லாம் இல்லை சார். நீங்க இருக் கறப்ப எனக்கென்ன பயம். இப்பவே அவங்க கிட்ட நான் சிக் கினா இதுநாள் வரைக்கும் எங்கேயிருந்தேன்கிறத சொல்ல வேண்டி வரலாம். பேசாம எங்கயாவது கொஞ்ச நாள் போயிட்டு வர்றேன். அப்ப ஆரம்பத்திலிருந்தே இத்தனை நாள் அங்கே தான் இருந்தேன்னு ஆதாரங்களை உருவாக் கிட்டுக் கூட வர முடியும்”

சம்பத்துக்கு அது நல்ல திட்டமாகத் தோன்றியது. இப்போது வசந்த் வந்து செய்யக்கூடிய அவசர வேலைகளும் எது வுமில்லை. வெளிநாடுகளில் செய்த எல்லா வேலைகளு டைய ஸ்கேன் காப்பிகளும் கூட அன்றன்றைக்கே அவன் அனுப்பி வைத்திருந்ததால் அவனிடம் அங்கே நடந்ததை எல்லாம் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. சம்பத்

சொன்னான். “அது நல்ல ஐடியா. நீ போய்ட்டு வா வசந்த். உனக்கும் ரெஸ்ட் தேவை. இந்த மாசம் முழுசும் உனக்கு எக்கச்சக்கமான வேலை. போய் ஒரு வாரமோ, பத்து நாளோ இருந்துட்டு வா”

வசந்த் சொன்னான். “தேங்க்ஸ் சார். ஒருவேளை அதிகா ரிங்க யாராவது வந்து என்னைப் பத்திக் கேட்டா எனக்கு நெருங்கினவங்க யாருக்கோ உடம்பு சரியில்லைன்னு சொல்லிட்டு லீவுல போயிட்டதா சொல்லுங்க சார். நானும் வந்து அதையே சொல்றேன்”

“சரி வசந்த். இப்ப நீ அந்த எதிர் பெட்டிக்கடைல நின்னுட் டிருக்கிற சிஐடி பார்வைல இருந்து தப்பிக்க எதாவது உதவி வேணுமா?”

”வேண்டாம் சார். அந்த ஒரு ஆளையெல்லாம் நான் சுலப மாய் சமாளிச்சிடுவேன். எதுக்கும் ஒரு வாரம் கழிச்சு நில வரம் கேட்டுட்டு கிளம்பி வர்றேன் சார். இங்கே எதுவும் பிரச்னை இல்லையே”

சம்பத் சிரித்தான். ”இங்க பிரச்சனையே இல்லை. நீ போன நாள் வந்து சோதனை போட்டவனுகளுக்கு எதுவும்

கிடைக்கல. செம கடுப்பாயிட்டானுக. அதனால தான் விசாரிச்சு உன் வரைக்கும் வந்திருக்காங்க. நீ போய்ட்டு நிதானமா வந்தா போதும்...."

"தேங்க்ஸ் சார்" வசந்த் போனை வைத்து விட்டான்.

அன்று ஆபிசுக்கு பயந்து பயந்து வந்த பாஸ்கரை வந்தவுடன் சம்பத் தன் அறைக்கு வரவழைத்தான். பாஸ்கர் இதயம் சம்மட்டி அடிகளாக அடிக்க வியர்த்தபடி போனான். அவன் வசந்தைப் பற்றிக் கேட்பான் என்று நினைத்த பாஸ்கர் ஏமாந்து போனான்.

சம்பத் கேட்டான். "உன் வீட்டு கிட்ட எதுவும் பிரச்னை இல்லையே"

பாஸ்கர் குழப்பத்துடன் கேட்டான். "இல்லையே. எந்தப் பிரச்சினையைக் கேட்கறீங்க"

சம்பத் அவனை இகழ்ச்சியுடன் பார்த்தான். 'இந்த முட்டாளுக்கு வீட்டில் விசாரித்திருந்தாலும் தெரியாது. சிஐடி கண்

காணித்தாலும் தெரியாது. வசந்துக்கு இப்படியொரு நண்பன்'

பாஸ்கருக்கு சம்பத் தன்னை ஏன் இகழ்ச்சியாகப் பார்க்கிறான் என்பது விளங்கவில்லை. சம்பத் கஷ்டப்பட்டுப் பொறுமையாகக் கேட்டான். "யாராவது அதிகாரிகள் நீ இல்லாத போது வந்து உன் வீட்டில் உன்னைப் பற்றி விசாரித்தார்களா? வீட்டில் எதுவும் சொன்னார்களா?"

பாஸ்கர் மனதுக்குள் நினைத்தான். 'உன்னை மாதிரி நானுமா கொள்ளையடிச்சு சம்பாதிச்சிருக்கேன், என் வீட்டுக்கு வந்து அதிகாரிகள் என்னை விசாரிக்க'. ஆனால் அதைச் சொல்ல முடியாமல் வாயால் "இல்லை" என்று சொன்னான்.

சம்பத் கையால் 'போய்த் தொலை' என்பது போல சைகை செய்தான். பாஸ்கருக்கு வசந்தைப் பற்றி அவன் எதுவும் விசாரிக்காதது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. வெளிநாடு போய் விட்டு வந்த அவனிடம் ஒரு நாகரிகத்திற்காகக் கூட பயணம் எப்படி இருந்தது என்று விசாரிக்கவில்லையே என்ற வருத்தமும் சின்னதாய் இருந்தது.

ஒரு வாரம் கழித்து சம்பத் வசந்துக்குப் போன் செய்தான். ஸ்விட்ச்டு ஆஃப் என்ற அறிவிப்பு வந்தது. முன்னெச்சரிக் கையாக வசந்த் போனை ஸ்விட்ச்டு ஆஃப் செய்து வைத் திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். மேலும் மூன்று நாட்கள் கழித்து மீண்டும் சம்பத் போன் செய்தான். அதே அறிவிப்பு.

சம்பத் மறுபடி பாஸ்கரை அழைத்துப் பேசினான். “வசந்தோட வேறெதாவது போன் நம்பர் உன் கிட்ட இருக்கா”

பாஸ்கர் இல்லை என்றான்.

“வசந்த் உன் கிட்ட கடைசியா எப்ப பேசினான்.”

“ஏர்போர்ட்ல இறங்கினப்ப பேசினது தான் கடைசி. அதுக் கப்பறம் அவனைப் பார்க்கல. போன்லயும் பேசல நேத்து கூட அவன் கிட்ட போன்ல பேச முயற்சி செஞ்சேன். ஸ்விட்ச்டு ஆஃப் மெசேஜ் தான் வந்துச்சு”

சம்பத்துக்குத் திடீரென்று இன்னொரு சந்தேகம் வந்தது. வசந்த் அமலாக்கத் துறையில் சிக்கியிருப்பானோ? அவனை ரகசியமாய் எங்கேயாவது அடைத்து வைத்து விசாரித்துக் கொண்டிருப்பார்களோ? அதனால் தான் வசந்தால் என்னைத் தொடர்பு கொள்ள முடியவில்லையோ? இந்த சந்தேகம் வந்தவுடன் சம்பத் ஆடிப்போய் விட்டான்.

தந்தைக்கு அவன் உடனே போன் செய்து தன் சந்தேகத்தைச் சொல்லி விசாரித்து சொல்லச் சொன்னான். சுந்தரம் விசாரித்ததில் அப்படி எதுவும் யாரையும் பிடித்து வைத்து விசாரிக்கவில்லை என்று தெரிய வந்தது. அவர் அந்தத் தகவலை மகனிடம் தெரிவித்தார்.

சம்பத்துக்கு மறுபடியும் இன்னொரு சந்தேகம் வந்தது. இந்த அரசாங்கமே அவனைச் சிக்க வைக்க வசந்தைப் பிடித்து வைத்து அவனைப் பற்றிய ரகசியங்கள் அறிய சட்டபூர்வமல்லாத வழிகளில் முயல்கிறதோ? அதற்கும் வழியில்லை என்று அவன் தந்தை உறுதியாகச் சொன்னார்.

”எதற்கும் உன்னுடைய எதுவும் திருட்டுப் போகவில்லை என்பதை உறுதி செய்து கொள்” என்று அவர் சொல்லவே சம்பத் திடுக்கிட்டான். அவன் வசந்த் அவனை ஏமாற்றி

எதாவது எடுத்திருப்பானோ என்று இது வரை யோசிக்கவே இல்லை. வெளிநாடு சென்ற போது முடிந்த டாக்குமெண்ட் ஸ்கேன்களை அவ்வப்போது அனுப்பி வந்தானே!

மறுபடி வசந்தைத் தொடர்பு கொள்ள முயன்றான். மறுபடி அதே அறிவிப்பு தான் வந்தது. உடனடியாக வெளிநாடுகளுக்குத் தொடர்பு கொண்டு ஸ்கேன் எடுத்து வசந்த் அனுப்பிய டாக்குமெண்ட்கள் எதுவும் போர்ஜரி அல்லவே என்று உறுதி செய்ய விரும்பினான். அவர்கள் சரி பார்த்து எதுவும் போர்ஜரி அல்ல என்று சொன்னார்கள். சம்பத் நிம்மதியடைந்தான். ஆனாலும் முழுமையாக விசாரித்து எதிலுமே பிரச்னை இல்லை என்பதை உறுதி செய்து கொள்ள அவன் விரும்பினான். அவர்களிடம் ஒவ்வொரு பரிவர்த்தனையும் கடைசி வரை சரியாக இருக்கிறதா என்பதை உறுதி செய்து அவனுக்குத் தெரிவிக்கச் சொன்னான்.

மறுநாள் ஒவ்வொரு நாட்டிலிருந்தும் தகவல்கள் வந்தன. ஒவ்வொரு பரிவர்த்தனையும் பல கைகள் மாறியது அவன் அனுப்பியிருந்த டாக்குமெண்ட்கள் போலவே என்றாலும் ஒவ்வொன்றும் கடைசியாக யாரிடம் இருக்க வேண்டும் என்று அவன் சொல்லியிருந்தானோ அதிலிருந்தும் கை மாறி இருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். ஒவ்வொரு நாட்டுப் பரிவர்த்தனையிலும் அதுவே நடந்திருக்கி

றது. கடைசியிலிருந்தும் கைமாறி இருக்கிறது. அந்த டாக்குமெண்ட் அவனுக்கு அனுப்பப்படவில்லை.

சம்பத் தனக்கு மாரடைப்பு வந்தது போலவே உணர்ந்தான். அவன் முடிவு செய்திருக்கும் கடைசி பினாமிகள் பெயரிலும் இப்போது பணமோ, சொத்துக்களே இல்லை. அதிலிருந்தும் முழுவதுமாக மாற்றப்பட்டு விட்டது. கிட்டத்தட்ட 3400 கோடிகளும் அவன் கையை விட்டுப் போய் விட்டது.

திருடனுக்குத் தேள் கொட்டி விட்டது.

# 11

சம்பத் உடனே பாஸ்கரைத் தன் அறைக்கு வரவழைத்தான். பாஸ்கருக்கு இந்த முறை அவன் கேட்கப் போவது வசந்தைப் பற்றித் தான் என்பது நிச்சயமாய்த் தெரிந்தது. வசந்த் இதை முன்பே சொல்லி இருக்கிறான். அவன் சொன்னது போலவே பத்து நாள் கழித்துக் கேட்கிறான் இந்த மடையன்.

உள்ளே நுழைந்தவனை சம்பத் எதிரில் உட்காரச் சொன் னான். பாஸ்கர் உட்கார்ந்தான். "வசந்த் அப்பறமா போன் செஞ்சானா?"

“இல்லை சார். என்ன பிரச்னையோ அவனுக்கு. தெரி யலை” என்று பாஸ்கர் சொன்ன போது சம்பத் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

பல்லைக் கடித்துக் கொண்டு சம்பத் சொன்னான். “நிஜ மாவே அவனுக்கு பிரச்சன தான்.”

“என்ன பிரச்சன சார்?” என்று கேட்க நினைத்த பாஸ்கர் சம் பத் முகத்தில் தெரிந்த அபாய அறிவிப்பைப் பார்த்து புத்தி சாலித்தனமாய் மௌனம் காத்தான்.

“வெளிநாட்டுக்கு அவன் கூடப் போனாயே. அவன் என்ன பண்ணிருக்கான் தெரியுமா?”

பாஸ்கர் வெகுளியாய் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான். “எல்லாம் நீங்க சொன்ன மாதிரியே செய்யற தாய் சொன்னான் சார்”

சம்பத் கண்களில் அக்னி எரியக் கேட்டான். “நீயும் தானே கூட இருந்தாய். அவன் செஞ்சதை எல்லாம் பார்த்துகிட்டு தானே இருந்தாய்”

'இல்லை. ஊர் சுற்றப் போய் விட்டேன். எதையும் நான் பார்க்கலை' என்று சொன்னால் அவன் கடித்துக் குதறி விடு வான் என்று பயந்த பாஸ்கர் தயக்கத்தோடு சொன்னான். ”ஆமாம் சார்”

”இதுல உன் பங்கு என்ன சொல்ல முடியுமா?”

“சார்?”

“இதுல நீ என்னென்ன வேலை செஞ்சாய்னு கேட்கிறேன்”

பாஸ்கர் சமாளித்துக் கொண்டு சொன்னான். “நீங்க அவன் கிட்ட என்ன சொல்லி அனுப்பியிருக்கீங்கன்னு எனக்குத் தெரியாது சார். ஆனால் கூட என்னை அனுப்பினதுக்கு அவன் செய்யச் சொன்னதை எல்லாம் செஞ்சேன். அதி கமா செஞ்சது எடுபிடி வேலைகள் தான். இந்த டாக்கு மெண்ட்ஸை எல்லாம் நான் தான் உங்களுக்கு ஸ்கேன் பண்ணி அனுப்பினேன்.”

சம்பத் ஒன்றும் சொல்லாமல் அவனையே ஆழமாய் பார்த் தான். இந்த முட்டாள் பக்கத்துலயே இருந்து கொண்டு

அவன் எதாவது வில்லங்கமாய் செய்தாலும் இந்த மூளைக்கு எதுவும் எட்டும் என்று தோன்றவில்லை.

அவன் ஒன்றும் சொல்லாமல் போகவே பாஸ்கர் அவனிடம் கேட்டான். “ஏன் சார் கணக்குல எதாவது குறையுதா? இல்லை அவன் செஞ்சதில் ஏதாவது தவறிருக்கா?”

சம்பத் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு சொன்னான். “கணக்கே இல்லை. அவன் விவரமா தப்பில்லாமல் எல்லாம் செஞ்சிருக்கான். ஆனால் ஆளே தப்பாய் போயிட்டான். சுத்தமா எல்லாத்தையும் வழிச்சுட்டுப் போயிட்டான்.”

பாஸ்கர் வாயைப் பிளந்தான். அதற்கு அவன் நடிக்க வேண்டியே இருக்கவில்லை. அவன் அதிர்ச்சி உண்மையானதாகவே இருந்தது. அவன் இந்தக் கணக்கு வழக்கில் வசந்த் சில கோடிகளைச் சுருட்டியிருக்கலாம் என்று எதிர்பார்த்தானே ஒழிய முழுப் பணத்தையும் சுருட்டத் துணிவான் என்று சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. கிட்டத்தட்ட 3400 கோடிகள் என்று வசந்த் சொன்னதாய் ஞாபகம். ’வசந்த் உன் காட்டுல மழைடா’ என்று அவன் மனம் கூவியது... ‘வாழ்க வளமுடன்’ என்று வாழ்த்தும் சொன்னது,

அவன் திகைப்பைப் பார்த்துக் கொண்டிருந்த சம்பத்துக்கு அவனுக்கு எதுவும் தெரியாது என்பது உறுதியாகியது. "அந் தத் திருட்டு நாய் உனக்குப் போன் பண்ணினா எனக்கு நீ உடனே தெரிவிக்கணும் சரியா. இல்லைன்னா உன்னை யும் அவன் கூட்டாளியா நான் நினைச்சுக்குவேன்... ஏன்னா நீ தான் அவனை இங்கே வரவழைச்சவன். இப்ப கடைசியா அவன் இத்தனை தில்லுமுல்லு பண்றப்பவும் கூட இருந்தது நீ தான்."

பாஸ்கர் பதறிப் போனான். "சார் சார்.... உங்க சிஸ்டம் க்ரேஷ் ஆனப்ப நான் சரி செய்ய அவனை வரவழைச்சது உண்மை தான். அவன் வந்து சரியும் செஞ்சுட்டான். நான் அவனைக் கூப்பிட்ட கணக்கு அதோட முடிஞ்சுது.... பிறகு எதுலயுமே என் பங்கு இல்லை... அது உங்களுக்கே தெரியும்"

சம்பத் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக அவனைப் பார்த் தான். அவன் சொல்வது உண்மையே. எல்லாமே சம்பத் தின் தவறு தான். நம்பி ஏமாந்தது அவன் தவறு தான். வெளிநாட்டு பினாமிகளிடம் கேட்ட போதும் அவர்கள் அதையே சொன்னார்கள். "நீங்கள் உங்கள் பிரதிநிதியாய் அவனை அனுப்பினீர்கள். அவன் சொன்ன இடத்தில் எல் லாம் கையெழுத்து போடச் சொன்னீர்கள். போட்டோம். மற்றது எதுவும் எங்களுக்குத் தெரியாது." அவர்கள் சொன்

னது உண்மை தான். அவர்கள் அடுத்தபடியாய் கேட்டது தான் இப்போதும் கூடுதலாக வயிறெரிய வைத்தது. அவர்கள் அவர்களுக்குத் தருவதாய்ச் சொல்லியிருந்த கமிஷன் தொகை எப்போது வரும் என்று கேட்டார்கள். இரண்டு சதவீதம் எல்லோருக்கும் சொல்லி இருந்தான். கிட்டத்தட்ட எழுபது கோடி அவன் தரவேண்டியிருக்கும். அவர்களிடம் அவன் பணம் அவன் கைக்கு வந்தவுடன் தருவதாய் சொல்லி விட்டிருந்தான்....

சம்பத் பாஸ்கரிடம் விஷமத்தோடு சொன்னான். "அன்னைக்கு அவனை வரவழைச்ச மாதிரியே அவனை மறுபடி இப்போதும் வரவழை. இல்லாட்டி உனக்கும் பிரச்சனை தான்..."

பாஸ்கர் அழாத குறையாய் சொன்னான். "சார் நீங்க சொல்றது நியாயமே இல்லை"

சம்பத் சொன்னான். "போனது என் பணம். நான் அப்படி தான் சொல்வேன்"

பாஸ்கர் மனதுக்குள் கறுவினான். "டேய் போனது மக்கள் பணம். நீ திருடினதை இன்னொருத்தன் உன்

கிட்ட இருந்து எடுத்துட்டுப் போயிட்டான். அவன் ஒன்னும் உன்னை மாதிரி மோசமானவனில்லை”

சிலை போல உட்கார்ந்திருந்த அந்த முட்டாளை அதற்கு மேலும் பார்க்க விருப்பமில்லாமல் சம்பத் அவனை அனுப்பி விட்டான். பின் தான் மூன்று பிரபல துப்பறியும் நிறுவனங் களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தான். முன்பு போல் ஆட்சியில் இருந்திருந்தால் அரசு இலாக்காக்களையே அந் தத் திருட்டு நாயைப் பிடித்து வர முடுக்கியிருக்கலாம். இப் போது அந்த வசதி இல்லாதது பெருங்குறையாக அவனுக் குப் பட்டது.

அதிகபட்சம் ஒருவாரத்திற்குள் அவனைக் கண்டுபிடித்து விடுவோம் என்று மூன்று துப்பறியும் நிறுவனங்களும் அவ னுக்கு வாக்களித்தன. அது அவனை அறியாமல் எடை போட்டதாக இருந்தது. முதலில் பாஸ்கருக்கும் அவனுக்கும் இப்போதும் தொடர்பிருக்க வாய்ப்பிருக்கிறது என்று அவன் அறியாமல் அவன் போன்கால் ரிகார்டுகளை ஆராய்ந்தார் கள். பாஸ்கருடன் வசந்த் தொடர்பில் இல்லை, அவனுக்கு நிஜமாகவே வசந்த் எங்கிருக்கிறான் என்பது தெரியாது என் பது உடனடியாகத் தெரிந்து விட்டது.

அடுத்தபடியாக அவன் தந்தை விநாயகத்துடன் வசந்த் தொடர்பில் இருக்கிறானா என்று விசாரித்தார்கள். வசந்த் சென்ற வருடம் அவர் ஓய்வு பெற்ற போது வந்து போனவன் பின் அங்கே செல்லவில்லை என்பது தெரிந்தது. அவர்கள் விநாயகத்தின் போன்கால் ரிகார்டுகள் ஆராய்ந்தார்கள். அவருக்கு ஒரு நாளில் ஒன்றிரண்டு போன்கால்கள் தான் வந்திருந்தன. அத்தனையும் அவர் மாணவர்களுடையதாக இருந்தன.

வசந்தின் பழைய போன்கால்களை ஆராய்ந்தார்கள். அதிலும் அவன் அடிக்கடிப் போன் செய்த எண்கள் சம்பத்தின் எண்களாக இருந்தன. மற்றவை எல்லாம் ஏதோ வேலையாகச் சிலருக்குச் செய்த அழைப்புகளாக இருந்தன. அதே போல் அவனுக்கு வந்திருக்கும் போன்கால்களிலும் அவனை இப்போது பிடிக்க முடிந்த தகவல்கள் கிடைக்கவில்லை. ஒரு வாரத்திற்குள் கண்டுபிடித்து விடுவோம் என்று தனித்தனியாகவே வாக்குக் கொடுத்திருந்த துப்பறியும் நிறுவனங்கள் அவனைக் கண்டுபிடிக்கத் திணறின. ஒரு வாரம் என்பது பத்து நாளாகி இரண்டு வாரங்கள் ஆகி, வாரங்கள் அதிகமாகிக் கொண்டே போயின. அவன் பழைய நண்பர்கள், முன்பு வேலை பார்த்த இடத்து ஆட்கள் என்று பல கோணங்களில் அவன் தொடர்புகளை ஆராய்ந்தும் ஒரு துப்பும் கிடைக்கவில்லை.

கடைசியில் ஒரு துப்பறியும் நிறுவனம் அவன் பணத்தின் மூலம் அவனைக் கண்டுபிடிக்க முடிந்தது. சமீப காலத்தில் ஏதாவது பெரிய சொத்தை வாங்கியிருக்கும் தனி ஆள் பற்றிய விவரங்களைச் சேகரித்து அதில் ஏதாவதில் வசந்த் இருக்கிறானா என்று பார்க்க ஆரம்பித்தது.

இன்னொரு துப்பறியும் நிறுவனம் இது போன்று இதற்கு முன் திருடிய சைபர் க்ரைம் ஆசாமிகளைப் பற்றித் தகவல்கள் திரட்ட ஆரம்பித்தது. இவ்வளவு சாமர்த்தியமாக டிமிக்கி கொடுத்து மறைவாக இருப்பவன் புதுக் குற்றவாளியாக இருக்க முடியாது என்று அது கணக்குப் போட்டு அவனை அந்த வழியில் தேட ஆரம்பித்தது.

இன்னொரு துப்பறியும் நிறுவனம் அவன் திறமை மூலம் அவனைக் கண்டுபிடிக்க முனைந்தது. கம்ப்யூட்டரில் அசாத்தியத் திறமை உள்ள ஒருவன் ஏதாவது ஐடி கம்பெனியில் சமீப காலத்தில் சேர்ந்திருக்கிறானா என்று தேட ஆரம்பித்தது. அப்படிப்பட்டவன் பழைய வேலை குறித்து அதிகம் சொல்லாமல் இருந்திருந்தால் அப்படிப்பட்டவனாகத் தேட ஆரம்பித்திருந்தது. அதில் தான் வசந்த் சிக்கினான். அதுவும் கிட்டத்தட்ட ஐம்பது நாட்களின் முடிவில் தான் முடிந்தது.

# 12

சம்பத் உடனே வசந்தைப் பிடித்துக் கொண்டு வர தன் அடியாட்களை அனுப்பி வைத்தான். அவனுக்கு வசந்த் மீது கொலைவெறி இருந்தது. எந்த அளவு ஏமாந்திருக்கிறோம் என்று அடிக்கடி இம்சை செய்த அவமான உணர்வை முழுப்பணத்தையும் மீட்டுக் கொள்வது மூலம் மட்டுமல்லாமல் கூடவே வசந்தை வித விதமாகச் சித்திரவதை செய்து ரசித்து தான் குறைத்துக் கொள்ள முடியும் என்று தோன்றியது. எப்படியெல்லாம் சித்திரவதை செய்ய வேண்டும் என்று அந்த ஒரு நாளில் சம்பத் பெரிய பட்டியலே போட்டு வைத்திருந்தான்.

ஆனால் கிடைத்தவனை அவனுடைய ஆட்கள் தப்ப விட்டு விட்டார்கள். மறுபடியும் அந்தத் துப்பறியும் நிறுவனத்தின் உதவியை நாடினான். இந்த முறை அவர்கள் எந்தக் கால வரையறையையும் சொல்லவில்லை. அவர்கள் சீக்கிரமாக அவனை மீண்டும் கண்டுபிடிப்பார்கள் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருக்கவில்லை.

வசந்த் அவனை ஏமாற்றியது தெரிந்த நாளில் இருந்து அவன் உறக்கத்தைத் தொலைத்திருந்தான். பைத்தியம் பிடித்தவன் போல் இருந்த அவனிடம் அவன் தந்தை சுந் தரம் சொன்னார். “அவனுக்கு ரொம்ப வேண்டிய ஆளை நீ பிடிச்சு வச்சுட்டா அந்தத் திருட்டு நாய் அந்த ஆளைக் காப் பாத்த தானா வாலை ஆட்டிகிட்டு வரும்”

அவனுக்கு இருக்கும் ஒரே உறவும், குடும்பமும் அவன் அப்பா தான். ஆனால் அதிகமாய் அவருடனும் அவன் தொடர்பில் இல்லை. இருந்தாலும் தானாடா விட்டாலும் சதையாடும் என்பார்கள். அந்தக் கிழவனைப் பிடித்து வைத்துப் பார்க்கலாமே என்று தோன்றியது. அதுவும் பத்தி ரிக்கையில் செய்தி வரும்படி இருந்தால் உடனடியாக வசந் துக்கு அது தெரிய வரும் என்று தோன்றவே சம்பத் அந்தப் பகுதி சப் இன்ஸ்பெக்டர் யார் என்று பார்த்து அவரை வரவ ழைத்தான்.

சப் இன்ஸ்பெக்ஸ்டர் சதானந்தன் உடனே அவனை சந்தித்தார். இன்று சம்பத்தின் தந்தை பதவியில் இல்லா விட்டாலும் நாளை ஆட்சி மாறலாம், அந்த ஆள் திரும்பவும் மந்திரியாகலாம் என்பதால் தேவையில்லாமல் பகைத்துக் கொள்ள வேண்டாம் என்று நினைத்து தான் அழைத்தவுடன் வந்தார்.

சம்பத் இப்போது அவன் தந்தை மந்திரியாக இல்லாததால் சதானந்தனிடம் மிக மரியாதையாக நடந்து கொண்டான். அவரை வரவேற்று அமர வைத்து உபசரித்த பின் வசந்த் என்பவன் தன் பணத்தைக் கையாடல் செய்து விட்டதாகவும், முறைப்படி போலீசில் புகார் கொடுக்க விரும்பவில்லை என்றும் சொன்னான். அப்படிச் சொன்னவுடனேயே அது கணக்கில் காட்ட முடியாத பணம் என்பதை சதானந்தன் புரிந்து கொண்டார். அவன் தந்தையை ஏதாவது வழக்கில் சிக்க வைத்துக் கைது செய்தால் அவன் அவரைக் காப்பாற்ற திருடிய பணத்தைத் திருப்பித் தர வாய்ப்பு இருக்கிறது என்று நம்புவதாகவும் சொல்லி இந்த உதவி செய்தால் நன்றாக அவரைக் கவனித்துக் கொள்வாதாக உறுதியளித்தான்.

சதானந்தன் உடனடியாக ஒத்துக் கொள்ளவோ, மறுக்கவோ செய்யாமல், அந்த வசந்தின் தந்தை யார், அவரது

விலாசம் என்ன என்று கேட்டார். சம்பத் முன்பே சேகரித்தி ருந்த பெயர் விலாசத்தைப் படித்துக் காட்டினான்.

சதானந்தன் சில வினாடிகள் ஒன்றும் சொல்லாமல் அவ னையே பார்த்தபடி அமர்ந்திருந்தார். பின் மெல்லச் சொன் னார். "விநாயகம் சார் ஒரு ரிடையர்டு டீச்சர். அவருக்கு அந் தப் பகுதியில ரொம்ப நல்ல பேரு. கண்ணியமானவர். நேர் மையானவர். அவரோட மாணவர்கள் சிலர் கலெக்டர்களா வும், பெரிய அதிகாரிகளாவும் இருக்காங்க. அது மட்டுமில்ல அந்தப் பகுதில இருக்கிற முக்கால் வாசி ஆள்கள் அவர் கிட்ட படிச்சவங்க தான். கிட்டத்தட்ட எல்லாருமே உயர்ந்த ஸ்தானத்துல வெச்சிருக்கிற ஒருத்தரை பொய்க் கேசுல உள்ளே போட்டால் லோக்கல்லயும் ப்ரஷர் அதிகமாயிருக் கும். மேலிடத்துல இருந்தும் ப்ரஷர் அதிகமாயிருக்கும். ஒன் னுமில்ல, சும்மா இருபது, முப்பது பேர் ஸ்டேஷன் முன்னாடி தர்ணா பண்ணினா போதும் எல்லாச் சேனல்லயும் அது தலைப்புச் செய்தியா வந்துடும். அதனால அந்தப் பையன் கிட்ட பணத்தை வசூல் பண்றதுக்கு நீங்க வேற வழியப் பாக் கறது தான் நல்லது"

ஒரு மனிதரிடமிருந்து வேலை எதுவும் ஆகாது அல்லது ஆக வேண்டியதில்லை என்ற நிலைமை இருந்தால் சம் பத் அவர்களுக்கு மரியாதை கொடுப்பதை நிறுத்தி விடு

வான். அவன் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு தலையை அசைத்தான். அவர் புரிந்து கொண்டு கிளம்பி விட்டார். வெளியே சென்ற அவர் அவனிடம் சொல்லாத ஒரு விஷயம் அவரும் விநாயகத்தின் மாணவன் என்பதைத் தான்.

'ஆட்சி கையிலிருந்திருந்தால் உடனடியாக இந்த ஆளை எங்கேயாவது பிரச்சனையான இடத்திற்கு மாற்றி இருக்க லாம்' என்று மனதிற்குள் கறுவிய சம்பத் அடுத்ததாக என்ன செய்வதென்று யோசித்தான். எதற்கும் இந்த ஆள் அந் தக் கிழவனைப் பற்றிச் சொன்னதெல்லாம் சரிதானா என்று அறிய விரும்பி விசாரித்த போது, சதானந்தன் சொன்ன தெல்லாம் உண்மையே என்று தெரிந்தது.

அடியாட்களை விட்டாவது அந்தக் கிழவனைத் தூக்கிக் கொண்டு வரலாம் என்றால் அந்த ஆளின் தலைமறைவு சமாச்சாரம் கூட நாளடைவில் பெரிதாகி இந்த சதானந் தனே சம்பத்தைக் காட்டிக் கொடுத்தும் விடலாம். கிழவரின் மகன் வசந்த் சம்பத்திடம் வேலை பார்த்தான், இப்போது அவன் தலைமறைவாகி விட்டான், என்ற தகவல்கள் மீடி யாக்களிடம் கசிந்தால் இருக்கிற பிரச்னையோடு இதுவும் சேர்ந்து விடலாம்.... இந்த எண்ணங்களால் விநாயகத்தைக் கடத்திக் கொண்டு வரும் எண்ணத்தைக் கைவிட்ட சம்

பத் இனி என்ன செய்வது என்று ஆலோசித்தான். இந்தக் கையாடல்கள் பரிவர்த்தனை மூலம் முடிவில் பணம் எங்கே இருக்கிறது, என்ன பெயரில் இருக்கிறது என்று கண்டு பிடித்தால் அதன் மூலம் அவனைக் கண்டுபிடிப்பது சுல பம் என்று தோன்றியது. உடனே இது போன்ற கையாடல் களைக் கண்டுபிடித்துக் கொடுக்கும் பிரபல வெளிநாட்டு நிறுவனம் ஒன்றைத் தொடர்பு கொண்டான்.

அந்த நிறுவனத்திடம் எல்லாப் பரிவர்த்தனைகளையும் காட்டுவது ஆபத்து என்று தோன்றியதால் ஒரே ஒரு பரி வர்த்தனையை மட்டும் அவர்களிடம் கொடுத்து இது முடி வில் எங்கே போய்ச் சேர்ந்திருக்கிறது என்ற தகவலைக் கண்டுபிடித்துத் தரும்படி சொன்னான். அவர்கள் முதலி லேயே ஒரு பெரிய தொகை செலுத்தச் சொன்னார்கள். சம் பத் வயிறெரிந்து கொண்டே செலுத்தினான்.

மூன்று நாட்கள் கழித்து அவர்களிடமிருந்து நள்ளிரவில் பதில் வந்தது. ’சில நாடுகள் தங்கள் நாட்டுப் பரிவர்த் தனைகளை வெளியே தெரிவிப்பதில்லை. அதற்கேற்றபடி அந்த நாட்டுச் சட்டத்திட்டங்கள் கடுமையாக இருக்கும். அப்படி ரகசியம் காக்கும் நாட்டில் ரிஜிஸ்டர் ஆகியிருக்கும் நிறுவனம் மூலமாக ஒரு பரிவர்த்தனை நடந்தால் உள்ளே போகும் வரை தான் நமக்கு அறிய முடியும். அங்கிருந்து

பணம் எங்கே போயிருக்கிறது என்பதை அறிய வழி யில்லை. அப்படியும் அறிந்து தானாக வேண்டுமென்றால் ஒரு நாடு அதிகார பூர்வமாக அதனிடம் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அதிலும் அந்தப் பணம் தீவிரவாதத்திற் குப் பயன்படுகிறது என்று சந்தேகம் இருப்பதாகச் சொல்லி அதற்கான ஆதாரங்களையும் இணைத்துக் கேட்க வேண் டும். அப்படித் தான் நீங்கள் அனுப்பிய பரிவர்த்தனை ஒரு ஆப்பிரிக்க நாட்டின் வழியாகக் கடந்திருக்கிறது. எனவே அது தீவிரவாதிகளின் பணம் என்றோ, தீவிரவாதத்திற்கு உபயோகமாகவிருக்கும் பணம் என்றோ ஆதாரங்களை உங்கள் நாட்டு அரசாங்கம் மூலமாக அந்த ஆப்பிரிக்க நாட்டு அரசுக்குச் சமர்ப்பித்தால் ஒழிய அந்தப் பரிவர்த்த னையின் தொடர் தடம் பற்றி அறிய வழியில்லை. அந்த ஆப் பிரிக்க நாட்டின் பெயர்....”

சம்பத் அதற்கு மேல் படிக்கப் பொறுக்காமல் தான் அறிந்த கெட்ட வார்த்தைகளை எல்லாம் சத்தமாகக் கூவினான். மான்சி ஓடி வந்து கேட்டாள். “சம்பத் என்னாச்சு...”

சம்பத் அந்த மெயிலைப் படிக்கும்படி சைகை செய்து விட்டு லேப்டாப்பை அவள் பக்கம் தள்ளினான். அவள் படிக்கை யில் தலையில் கையை வைத்துக் கொண்டு அமர்ந்திருந் தான்.

மான்சி அவனிடம் சொன்னாள். "இப்படிப்பட்ட ஒரு கிரிமி னலை நிலாவுக்குக் கட்டி வைக்க ஆசைப்பட்டோமே, நல்ல வேளை அவள் தப்பிச்சுட்டா"

சம்பத் அடிவயிற்றிலிருந்து ஆக்ரோஷம் எழும்பிச் சொன் னான். "அவன் மட்டும் என் கைல கிடைச்சா சாவே தேவ லைன்னு நினைக்கற அளவுக்கு வச்சு செஞ்சுடுவேன்..."

# 13

சம்பத்தைக் கிட்டத்தட்டப் பைத்தியம் பிடிக்குமளவு ஆக்கியிருந்த வசந்த் இப்போது கர்நாடகாவில் குடகு மாவட்டத்தில் மடிக்கேரியிலிருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் ஒரு வீட்டில் வசிக்க ஆரம்பித்திருந்தான். சென்ற முறை எப்படி அவனைக் கண்டுபிடித்திருப்பார்கள் என்று ஊகித்து விட்டிருந்த அவன் இனி எந்த யூகத்திலும் சிக்கிக் கொள்ளாதபடி வேலைக்குச் செல்வதையே விட்டு விட்டுப் புதிய அவதாரம் எடுத்திருந்தான்.

தாடியும், கண்ணாடியும் முகத்தில் சேர்த்துக் கொண்டு காவேரி பிறந்த மண்ணில் காலடி வைத்த வசந்த் அந்த ஊரில் ஒரு வீட்டு புரோக்கரைக் கண்டுபிடித்து அவனிடம் தன்னைத் தமிழ் எழுத்தாளனாக அறிமுகப்படுத்திக் கொண்டான். ஒரு புதிய நாவல் எழுதுவதற்காக இயற்கை எழில் நிறைந்த இடம் தேடி வந்திருப்பதாகவும், யார் தொந்தரவும் இல்லாத ஒரு ஏகாந்தமான சூழல் உள்ள ஒரு வீடு வேண்டும் என்றும் சொல்லியிருந்தான். புரோக்கர் காண்பித்த ஐந்தாவது வீடு அவனுக்குப் பிடித்து விட்டிருந்தது.

அது சகல அடிப்படை வசதிகளும் இருந்த சிறிய வீடாக இருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை காப்பித் தோட்டம் இருந்தது. எந்த சுற்றுலாப் பயணியும் வந்து போகும் இடமாக அப்பகுதி இருக்கவில்லை. அவன் கேட்டபடியே ஏகாந்தம், இயற்கை எழில் இரண்டும் இருந்தது. அந்த வீட்டை ஒட்டினாற் போலிருந்த சற்றுப் பெரிய வீட்டில் வீட்டின் உரிமையாளரும், அவர் மனைவியும் இருந்தார்கள். அந்த வீட்டின் உரிமையாளர் அருகில் இருக்கும் பெரிய காபி எஸ்டேட்டின் மானேஜராக இருந்தார்.

அவரிடம் தனக்குச் சமைக்கத் தெரியாது என்று தெரிவித்த வசந்த் அருகில் மெஸ் அல்லது ஓட்டல் ஏதாவது இருக்கிறதா என்று ஆரம்பத்தில் கேட்டான். நாலைந்து மைல்கள்

தள்ளி தான் ஓட்டல் இருப்பதாய்ச் சொன்ன அவர் "வேண்டுமானால் என் மனைவியே சமைத்துத் தருவாள். நீங்கள் பணம் கொடுத்தால் சரி" என்றார். அதுவும் வசந்துக்கு வசதியாகி விட்டது. இப்போது அவன் முழுமையான பாதுகாப்பை உணர்ந்தான். அடிக்கடி பயணித்து புதிய ஆட்கள் கண்ணில் விழ வேண்டியதில்லை...

வீட்டுக்கார அம்மாவின் சமையலில் தமிழ்நாட்டு ருசி இல்லா விட்டாலும் கஷ்டப்படாமல் சாப்பிட்டுப் பசியாறும்படியாகத் தான் இருந்தது. சாப்பிட்டு விட்டு பின் லாப்டாப்பில் செய்திகள் வாசித்து விட்டு வசந்த் வேலையை ஆரம்பிப்பான். அது இடை இடையே சின்ன ஓய்வு இடைவெளிகள் விட்டு இரவு வரை தொடரும். எப்போதாவது வீட்டுக்காரர் அவனிடம் பேச வருவார். பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் அவனிடம் பேசி விட்டுப் போவார். கன்னடம் நன்றாகப் புரிந்தாலும் வசந்துக்குச் சரளமாய் பேச வராது. ஆனாலும் அரை குறை கன்னடத்தில் அவரிடம் பேசுவான். அவர் போன பிறகு மறுபடி வேலையை ஆரம்பிப்பான்.

சில சமயங்களில் வசந்துக்கு மான்சியின் செகரட்டரி நிலாவின் நினைவு வரும். அந்த சமயங்களில் எல்லா வேலைகளையும் ஒதுக்கி விட்டு அவளுடனான நினைவுகளில் அவன் ஆழ்வான். அவன் முகத்தில் மென்மையும் புன்ன

கையும் படரும். அவளும் அவனுடன் அங்கிருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றும்.

அவளை அன்று சம்பத்தின் வீட்டில் சந்திக்க நேர்ந்ததும் விதி என்றே வசந்துக்குத் தோன்றியது. சம்பத், மான்சி முன்னிலையில் நிலாவைக் கண்டு கொள்ளா விட்டாலும் வீட்டுக்குப் போகும் வழியில் அவளை அவள் வீட்டில் இறக்கி விடச் சந்தர்ப்பம் கிடைத்ததும் கூட விதி என்றே தோன்றியது. இல்லா விட்டால் இருவரும் இன்றும் அன்னியர்களாகவே இருந்திருப்பார்கள்.

சம்பத் வீட்டிலிருந்து கிளம்பி நாலைந்து கிலோமீட்டர் போன பிறகு பைக்கை ஆள் நடமாட்டம் அதிகமில்லாத இடத்தில் வசந்த் நிறுத்தினான். பின்னால் இருந்த அவள் அவனிடம் கேட்டாள். “என்னாச்சு?”

வசந்த் திரும்பிப் பார்த்து சொன்னான். “உன் கிட்ட கொஞ்சம் பேசணும்”

நிலா பைக்கில் இருந்து இறங்க முற்படவில்லை. “பேசுங்க” என்றாள்.

“உன் முகத்தைப் பார்த்துப் பேசணும்”

சம்பத்தின் வீட்டிற்குள் பாராமுகமாய் இருந்தவன் இப் போது இப்படிச் சொன்னது அவளை ஆச்சரியப்படுத்திய துடன் ஆனந்தத்திலும் ஆழ்த்தியது. அவன் என்ன பேசப் போகிறான் என்று தெரியா விட்டாலும் படபடக்க ஆரம்பித்த இதயத்தை அவள் அமைதிப்படுத்த முயன்றாள். மெல்ல பைக்கில் இருந்து இறங்கினாள். அவனும் பைக்கிலிருந்து இறங்கி விட்டு அவள் முகத்தைப் பார்த்துச் சொன்னான். “உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.”

அவளுக்கு மனதில் பறந்த பட்டாம்பூச்சிகளைக் கட்டுப்ப டுத்துவது கஷ்டமாய் இருந்தது. இவன் புதிராய் நடந்து கொள்கிறான். திடீர் திடீரென்று மாறுகிறான். அங்கே ஒரு மாதிரி இருந்தான். இங்கே இன்னொரு விதமாய் மாறுகி றான். இவனிடம் ஜாக்கிரதையாய் இரு, இவன் ஆபத்தான வன் என்று அவளுடைய அறிவு எச்சரித்தது. ஆனால் அவ ளுடைய மனம் அந்த எச்சரிக்கையை ஏற்க மறுத்தது.

வசந்த் அவளிடம் சொன்னான். “உனக்கும் என்னைப் பிடிச் சிருந்தா நாம இங்கேயே கொஞ்ச நேரம் பேசலாம். இல் லாட்டி வெளிப்படையா சொல்லிடு. நான் உன்னை உன்

வீட்டில் இறக்கி விட்டுப் போயிடறேன். அப்புறமா உன்னை எப்பவுமே தொந்திரவு செய்ய மாட்டேன்”

நிலா இப்போதும் மற்ற ஆண்களிடமிருந்து வசந்த் வித் தியாசப்படுவதைப் பார்த்தாள். அவன் உணர்ச்சிவசப்பட்டு பேசும் ஆசாமியாக இருக்கவில்லை. பேசுவது உணர்ச்சிக ரமான விஷயமாய் இருந்தாலும் கறாரான வியாபாரி வியா பாரத்தைப் பேசுவது போலத் தான் பேசினான். அவளும் கிட்டத்தட்ட அவனைப் போன்ற ஆள் தான். அவனை நம்ப முடியும் என்று அதனாலேயே அவளுக்குத் தோன்றியது.

ஆனாலும் அவள் தன் விருப்பத்தைப் பற்றி எதுவும் சொல் லாமல் அவனுடைய அடிக்கடி மாறும் குணத்தைச் சுட்டிக் காட்டி விளக்கம் கேட்டாள். “அவங்க வீட்ல ஆரம்பத்துல உங்களுக்கு என்னைப் பிடிச்ச மாதிரி இருந்துது. அதை நானும் உணர்ந்தேன். ஆனா அப்பறமா நீங்க என்னைக் கண்டுக்கவே இல்லை. சரியா பேசக்கூட இல்லை. இப்ப திடீர்னு என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்றீங்க. அடிக்கடி மாறுகிற உங்கள் குணம் என்னைக் குழப்புது...”

அவன் புன்னகையுடன் சொன்னான். "எனக்கு உன்னைப் பிடிச்சிருக்குங்கறது அவங்களுக்குத் தெரிய வேண்டாம்னு தான் அப்படி நடந்துகிட்டேன்."

"ஏன் அவங்களுக்குத் தெரிஞ்சா என்ன?" அவள் குழப்பத் துடன் கேட்டாள்.

"உனக்கு என்னைப் பிடிச்சிருக்கா? அதை முதல்ல சொல்லு. உனக்குப் பிடிக்கலைன்னா நாம மத்தத எல்லாம் பேசறதுல அர்த்தமே இல்லை..."

அவள் பிடிக்கவில்லை என்று சொல்லி விட்டால் பின் ஒரு வார்த்தை கூடப் பேசாமல், விளக்கம் எதுவும் கேட்காமல் பைக்கை ஸ்டார்ட் செய்து விடுவான் என்று அவள் மனதார உணர்ந்தாள். வாழ்க்கையில் முதல் முறையாக யாரிடமும் உணராத ஒன்றை அவனிடம் உணர்ந்த அவளுக்கு இந்த ஒரு சந்தர்ப்பத்தை இழந்தால் பின் எப்போதும் கிடைக் காது என்றும் உள்ளுணர்வு சொன்னது. அவள் பின் எதுவும் யோசிக்காமல் சொன்னாள். "எனக்கும் உங்களைப் பிடிச்சி ருக்கு"

அதற்குப் பிறகு அங்கேயே நின்று கொண்டு நேரம் போவது தெரியாமல் இருவரும் இரண்டு மணி நேரம் பேசினார்கள்.

# 14

இருவருடைய ரசனைகளும் பெருமளவு ஒத்துப் போனதை அவர்கள் மனம் விட்டுப் பேசும் போது உணர்ந்தார்கள். நிலாவுக்கும் வசந்தைப் போலவே உலக நாடுகள் சுற்றுவதில் ஆர்வம் இருந்தது. அழகான இயற்கைச்சூழலில் ஒரு கச்சிதமான வீடு, உயர்தரமான பொருள்களைத் தேவையான அளவு நிறைத்து வைத்திருப்பது, வசதியான வாழ்க்கை முதலானவை எல்லாம் அவளுடைய கனவுகளாகவும் இருந்தது. கொள்கைகளும் இருவருக்கும் ஒரே மாதிரி இருந்தன. ஏமாற விருப்பமில்லாத, கவனமான நல்லவர்களாக இருவ

ரும் இருந்தார்கள். அவளுக்கும் தேவையான போது பயப்ப டாமல் செயல்படும் துணிச்சல் இருந்தது.

வசந்த் கூடுதலாகத் தனது சித்தாந்தத்தைச் சொன்னான். ”ஏமாத்தறவங்களை ஏமாத்தறது தப்பேயில்லை.”

நிலா ஒரு கணம் யோசித்து விட்டுக் கேட்டாள். “அப்ப டின்னா, அவங்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?”

அவன் யோசிக்காமல் சொன்னான். “அவங்க நல்லவங்க, கெட்டவங்கன்னு பாக்காம முடியறப்ப எல்லாம் ஏமாத்த றவங்களாய் இருப்பாங்க. நாம நல்லவங்களையும், பாவப் பட்டவங்களயும் ஏமாத்தக் கூசற அளவுக்கு நல்லவங்களா இருக்கிறோம்கிறது தான் வித்தியாசம்”

நிலா வாய் விட்டுச் சிரித்தாள். அவனிடம் பேசப் பேச அவனை அதிகமாய் பிடிkக ஆரம்பித்தது.

இருவரும் தங்கள் குடும்பத்தைப் பற்றியும் ஒருவருக்கொரு வர் தெரிவித்துக் கொண்டார்கள். வசந்த தன் பெற்றோரைப் பற்றிச் சொன்னான். அம்மா இறந்து விட்டதையும் அப்பா

[redacted]

மட்டும் இருப்பதையும் சொன்னான். “எனக்கு என் அம்மா குணம் வந்திருக்குன்னு நினைக்கறேன். நிறைய விஷயங் கள்ல நாங்க ரெண்டு பேரும் ஒத்துப் போவோம். ஆனா எங் கப்பா ஒரு தனிரகம். ரொம்ப நல்ல மாதிரி...”

அவன் தந்தையைப் பற்றி அவளிடம் விவரித்த போது அவள் வியந்து போனாள். இந்தக் கலிகாலத்தில் இப்படி யும் ஆட்கள் இருக்கிறார்களா என்று தோன்றியது. வசந்த் சொன்னான். “... எனக்கு சில சமயங்கள்ல கோவம் வரும். ஒரு பழைய வாடகை வீட்டுல இருக்கிறோம், நிறைய நல்ல விஷயங்களை அனுபவிக்காமயே வாழ்ந்துட்டு இருக்கி றோம்கிறதெல்லாம் அவர் மனசுலயே இல்லை. அவருக்குத் தன்னைப் பத்தியோ, தன் குடும்பத்தைப் பத்தியோ மாத்தி ரம் யோசிச்சுப் பார்க்கத் தெரிஞ்சதே இல்லை நிலா. ஒரு இந்தியனா, சார்ந்திருக்கிற சமூகத்தோட ஒரு அங்கமா மட் டுமே பார்த்து வாழ்ற ஆளாவே தான் இன்னும் இருக்கார்....”

“அவரோட மாணவர்கள் பல பேர் வீட்ல அவர் ஃபோட்டோ இருக்கு. கலெக்டர், ஐஏஎஸ் ஐபிஎஸ் அதிகாரிகள், பெரிய பெரிய ஆள்கள் எல்லாம் அவரோட மாணவர்களா இருந் தவங்கன்னு அவருக்கு சந்தோஷம். அவங்களும் அந்தப் பக்கம் வர்றப்ப அவரைப் பாத்து, விசாரிக்காமல் போக மாட் டாங்க. அதே மாதிரி அவர் மளிகைக்கடைக்குப் போனா

எத்தனை கூட்டம் இருந்தாலும் அவர் தலையப் பார்த் துட்டா அந்தக் கடைக்காரன் அத்தனை பேரையும் நிக்க வச்சுட்டு அவருக்கு என்ன வேணும்னு கேட்டு முதல்ல குடுத்து அனுப்பறத நான் பார்த்துருக்கேன். ஏன்னா அந் தக் கடைக்காரன் அவர் பழைய மாணவன். அவர் தூக்கிட்டு வர்ற பை கொஞ்சம் கனமா இருக்குன்னு தோணுச்சுன்னா அவரோட பழைய மாணவங்க அவர் கைல இருந்து அதை கட்டாயப்படுத்தி வாங்கி, வீடு வரைக்கும் வந்து வெச்சுட்டு போறதயும் நான் பார்த்திருக்கேன். மோசமான கேடியாய் இருப்பான்... எவனையுமே மதிக்காதவனாய் இருப்பான்.. தெனாவட்டா பீடியோ சிகரெட்டோ ஊதிகிட்டு தெருல நின் னுகிட்டிருப்பான்... எங்கப்பாவப் பார்த்துட்டா பீடிய அவசரமா வீசி எறிஞ்சுட்டு, லுங்கிய கீழ இறக்கிட்டுக் கும்பிடு போடறத நான் பார்த்திருக்கேன்.... இதெல்லாம் ஆத்மார்த்தமா அவ ருக்குக் கிடைக்கற மரியாதைகள் தான். ஆனா இதனால எல்லாம் என்ன அவருக்கு என்ன லாபம், அவரோட வாழ் வாதாரம் எதாவது விதத்துல முன்னேறியிருக்கான்னு நான் அடிக்கடி யோசிப்பேன்.."

அவன் அவரைப் பற்றிச் சொல்லும் போது உணர்ச்சிவசப் பட்டான். அவன் குரல் கரகரத்தது. அவன் அவர் தந்தை என்பதற்காக மட்டுமல்லாமல் அவருடைய குணத்திற்கா கவே அவரை மிக நேசிக்கிறான் என்பது புரிந்தது. நிலா

வுக்கு அந்த மனிதரைப் பார்த்து வணங்க வேண்டும் என்று தோன்றியது. இந்தத் தேசத்தில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா என்று வியக்கத் தோன்றியது.

அவள் தன் குடும்பத்தைப் பற்றிச் சொல்லும் போது சொன் னாள். "எங்கப்பா ஒரு பிரைவேட் கம்பெனில வேலை பார்த் தவர். அம்மா நர்ஸ். ரெண்டு பேரும் காதல் கல்யாணம் பண்ணிகிட்டவங்க. அவங்களுக்கு நானும் அக்காவும் தான் குழந்தைங்க.... அப்பா என் எட்டு வயசுல மாரடைப்புல கால மாயிட்டார். அக்காவையும் என்னையும் அம்மா கஷ்டப்பட்டு படிக்க வெச்சாங்க. அக்கா கல்யாணமாகி துபாய்ல இருக்கா. அவ கல்யாணத்துக்குப் பட்ட கடன் இன்னும் முடியல. அம்மா சில சமயம் ரெண்டு ஷிப்ட் வேலை பார்ப்பாங்க. நான் பெருசா கனவு காணறப்ப எல்லாம் என்கிட்ட சொல்வாங்க. "தரைல நடடி. நிறைய கனவு காணாதே. அப்புறம் கனவு கண்டது நடக்கலைன்னா வாழ்க்கையே கசந்துடும்"னு சொல்வாங்க. ஆனாலும் நான் கனவு காணறத நிறுத்தி னதில்லை. அதை நிறுத்தறத விட செத்துப் போலாம்னு தோணும். பைத்தியக்காரத்தனம் தான். ஆனாலும் அப்படித் தோணும்..."

வசந்துக்கு அவளுடைய அந்தப் பைத்தியக்காரத்தனம் பிடித்திருந்தது. அவனும் நிறைய கனவு காண்பவன். அது

ஒரு நாள் கைகூடும் என்று எதிர்பார்ப்பவன்.... அந்த இரண்டு மணி நேரத்தில் இருவரும் மிக நெருங்கி விட்ட தாக உணர்ந்தார்கள். நீண்ட நாள் பழகியவர்கள் போல், இது போன ஜென்மத்துத் தொடர்பு போல் இருவருக்கும் தோன் றியது.

அதன் பின் அடிக்கடி ரகசியமாய் இருவரும் சந்தித்தார்கள். அவர்கள் தொடர்பு பற்றி சம்பத்துக்குத் தெரியவே கூடாது என்பதில் வசந்த் உறுதியாய் இருந்தான். பல பேர் பார்க் கும் இடத்தில் அவளுடன் சுற்றத் தயங்கினான். அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போகத் தயங்கினான். நண்பர் கள் யாருக்கும் அவளை அவன் அறிமுகப்படுத்தவில்லை. அவள் காரணம் கேட்ட போது அவன் நேரடியாய் ஒன் றும் சொல்லவில்லை. வற்புறுத்தி அவள் ஒரு முறை கேட்ட போது சொன்னான். “எல்லாம் உன் பாதுகாப்புக்காகத் தான்”

அவளுக்கு மெல்லப் புரிந்தது. அவள் கேட்டாள். “ஏமாத்தற வங்கள நீங்க ஏமாத்தப் போறீங்களா?”

[redacted]

அவள் புரிந்து கொண்டதும், அதைக் கேட்ட விதமும் அவன் முகத்தில் புன்னகையை வரவழைத்தது. அவன் கேட்டான். “அது தப்பா நிலா?”

அவள் சொன்னாள். “தப்பில்லை.... ஆனா பாறையோட மோதறது ஆபத்தானதில்லையா”

“பாறையோட தலை மோதினா தான் ஆபத்து. உளி மோதினா?” அவன் கேட்டான்.

அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவன் துணிச்சலும், புத்திசாலித்தனமும், நம்பிக்கையும் அவளைத் தைரியப்படுத்தப் போதவில்லை.

அவன் சொன்னான். “நீ தான சொன்னே. கனவு காணறத நிறுத்தறத விடச் செத்துப் போறது நல்லதுன்னு. கனவு தானா நனவாயிடாது நிலா. அது நனவாக நாம தான் ஏதாவது செஞ்சாகணும். முடியாட்டி செத்துப் போனாலும் நஷ்டமில்லை. கனவுக்கு சம்பந்தமில்லாத எந்திர வாழ்க்கையை விட அது நல்லது தான்”

அவள் ஏனோ கண்கலங்கினாள். அவன் அவளை அணைத்தபடி காரணம் கேட்டான். அவள் சொன்னாள். “என் வாழ்க்கை இப்ப தான் அழகாக ஆரம்பிச்சிருக்கு. அந்த அழகைத் தொலைச்சுடுவேனோன்னு பயமா இருக்கு வசந்த்”

“பயப்படாதே நிலா. நான் முட்டாள்தனமா எதுவும் செய்ய மாட்டேன். தப்பிக்க வழி தயாரா வெச்சிருக்காம எந்தக் காரியத்துலயும் இறங்க மாட்டேன்.”

ஆனால் அவன் என்ன செய்யப் போகிறான் எப்படி செய் யப் போகிறான் என்று அவளிடம் தெரிவிக்கவில்லை. அவ னாகச் சொல்லாத எதையும் அவளும் வற்புறுத்திக் கேட்க வில்லை.

அவன் பாஸ்கருடன் வெளிநாட்டுப் பயணம் கிளம்பும் முன் அவளிடம் இனி அடுத்த சந்திப்பு சீக்கிரத்தில் இருக்காது என்று தெரிவித்தான். அவளுக்கு ஏதாவது தெரிவிக்க இருந்தால் அவள் அவனை எப்படித் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும், அவன் அவளை எப்படித் தொடர்பு கொள்வான் என்றும் அவளிடம் விவரித்த போது அவன்

எவ்வளவு எச்சரிக்கையாகவும், கவனமாகவும் இருக்கிறான் என்பதை நிலா உணர்ந்தாள்.

பிரியும் போது இருவருமே மனக்கனத்தை உணர்ந்தார்கள். ஏனென்றால் இருவருக்குமே அடுத்த சந்திப்பு இருக்கும் என்ற நிச்சயமில்லை. அவள் கண்களில் நீரைப் பார்க்கத் திராணியில்லாமல் வசந்த் சீக்கிரமே கிளம்பி விட்டான்.

# 15

வசந்த் வெளிநாட்டுப் பயணம் போன பிறகு ஒவ்வொரு நாள் மான்சியின் ஆபிசுக்குள் நுழையும் போதும் அவளிடமிருந்து வசந்த் பற்றிய ஏதாவது ஒரு தகவல் கிடைக்குமா என்று நிலா எதிர் பார்த்துக் கொண்டே நுழைவாள். ஆபிசிலிருந்து திரும்பி வரும் வரை அந்த எதிர்பார்ப்பு இருந்து கொண்டே இருக் கும். வசந்த் போய் இருபது நாட்களுக்கு மேல் ஆகியும் அவள் எதிர்பார்த்தபடி தகவல் எதுவும் மான்சியிடமிருந்து கிடைக்கவில்லை. எல்லாம் வழக்கம் போலவே போய்க் கொண்டிருந்தது.

மான்சி ஓவியக்கலையில் மட்டுமல்லாமல் பலவற்றில் ஈடு பாடு வைத்திருந்தாள். வட இந்திய தென்னிந்தியச் சமை யல்கள், கைவினைப் பொருட்கள் செய்வது, ஓவியக்கலை குறித்து உலக அளவில் வெளியாகும் புத்தகங்களில் எழு துவது, பெண்ணுரிமை இயக்கங்களில் பொறுப்பான பதவி கள் வகிப்பது என்று அவள் ஈடுபாடு நீண்டு இருந்ததால் அதில் ஏதாவது ஒன்றில் அவளுக்கு உதவியாளராகச் செய் யக்கூடிய வேலைகள் நிலாவுக்கு இருந்து கொண்டே இருக் கும்.

மான்சியின் ஓவியங்களும், கைவினைப் பொருட்களும் சம் பத்தின் பண்ணை வீடு ஒன்றில் உள்ள பெரிய ஹாலில் தான் வைக்கப்பட்டிருக்கும். அங்கே மாதம் இரண்டு முறை போய் அவற்றைத் தூசி தட்டி வைக்கும் வேலையும் நிலா வுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஓவியங்களிலும், கைவினைப் பொருட்களிலும், தண்ணீரின் ஈரமும் படாமல், கீறல் கூட விழாமல் தூசு துடைத்து வைப்பது சாதாரண வேலைக்கா ரர்கள் செய்து முடிக்கக்கூடிய வேலை அல்ல. அதற்கென பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட பிரஷ்கள், துணிகள், வேறு சில கெமிகல்கள் எல்லாம் பயன்படுத்தி பொறுமையா கச் சுத்தம் செய்ய வேண்டும். போனால் அத்தனை வேலை களும் செய்து முடிக்க அரைநாளுக்கு மேலாகி விடும். அப்ப

டிப் போகும் போது சில சமயங்களில் அவளுடன் மான்சியும் வருவதுண்டு.

அந்தப் பண்ணை வீடு இரண்டரை ஏக்கரில் நகரின் ஒதுக்குப் புறத்தில் இருந்தது. மான்சியின் ஓவியங்கள், கைவினைப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் ஹால் ஒரு தனிக் கட்டிடமாகவும், அருகிலேயே இரண்டாயிரம் சதுர அடியில் ஒரு பங்களா தனிக்கட்டிடமாகவும் இருந்தன. மீதமுள்ள பரந்த இடத்தில் தென்னை மரங்களும், மாமரங்களும் ஒரு பகுதியிலும், அழகுப் பூச்செடிகள் ஒரு பகுதியிலும், வெறும் புல்வெளி ஒரு பகுதியிலும் இருந்தன. கடைசியில் தோட்ட வேலைப் பொருட்கள், உரங்கள் எல்லாம் வைக்கும் ஒரு சிறு குடோன் இருந்தது.

சில சமயங்களில் நிலா அந்த ஓவியங்களைத் துடைத்து வைக்கப் போயிருக்கும் போது பக்கத்தில் இருக்கும் பங்களாவில் இருந்து சம்பத்தின் சிரிப்புச் சத்தமும், வேறு ஒன்றிரண்டு பெண்களின் சிரிப்புச் சத்தமும் கூடக் கேட்கும். சத்தமாகக் குத்துப்பாடல்களும் சில சமயங்களில் கேட்கும். சம்பத் பெண்கள் விஷயத்தில் பலவீனமானவன் என்று அரசல் புரசலாக அவள் கேள்விப்பட்டிருந்தாள். அப்படி இருந்தும் முதல் முறை அருகிலேயே அந்தச் சல்லாபச் சத்தங்களைக் கேட்கும் போது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

மான்சியை அழகி என்று சொல்வது கூடக் குறைத்துச் சொல்வது போலத் தான். பேரழகி என்றே சொல்ல வேண் டும். அந்த அழகைப் பார்த்துத் தான் அவள் நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணாக இருந்த போதும் சம்பத் அவளைத் திருமணம் செய்து கொண்டான். அப்படிப்பட்ட மனைவி இருக்கையில் இப்படி அவன் கண்ட கண்ட பெண்களைக் கூட்டிக் கொண்டு வந்து கூத்தடிப்பது முதல் முறை அவளை மனம் பதற வைத்தது. போகப் போக அவளுக்குப் பழகி விட் டது.

ஒரு முறை அவளுடன் மான்சியும் அங்கே வந்திருந்த போதும் சம்பத்தின் சல்லாபச் சத்தங்கள் கேட்டன. மான்சி யின் முகம் மாறியது. அவள் நிலாவைப் பார்த்தாள். நிலா வுக்கு இப்படிக் கேட்பது புதிதல்ல என்பதை அவள் முக பாவனையிலிருந்தே மான்சி உணரவும் செய்தாள். வறண்ட குரலில் நிலாவிடம் சொன்னாள். “போகலாம் நிலா. நாளைக்கு வந்து செஞ்சுக்கலாம்”

இருவரும் கிளம்பி விட்டார்கள். போகும் போது நீண்ட நேரம் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. பின் மான்சி அவளி டம் சொன்னாள். ”பணம் ஒரு அளவு இருக்கிற வரை தான் மனுஷன் ஒழுங்கான வாழ்க்கை வாழ்கிறான் நிலா. அது அதிகமாச்சுன்னா அதை வெச்சுட்டு என்ன செய்யறதுன்னு

அவனுக்குத் தெரியறதில்லை. எல்லாத்துலயும் அதிகமா அனுபவிக்கக் கிளம்பிடறான்.... என்ன தான் பெண் ணுரிமை பேசினாலும் குடும்பம் முக்கியம்னு நினைக் கற பெண்ணுக்கு சிலதை எதிர்த்துப் போராட முடியற தில்லை. போராட்டத்தில இழக்கறது குடும்பமாயிருக்கும் கிற நிலைமை இருக்கறப்ப அவ தயங்க வேண்டி இருக்கு...”

அதற்குப்பின் அவள் அது சம்பந்தமாக எதுவும் பேச வில்லை. அவளை நினைக்கையில் நிலாவுக்குப் பாவமாக இருந்தது. குடும்பம், குழந்தைகள் என்பதற்காக ஒரு பெண் எத்தனை சகிக்க வேண்டியிருக்கிறது என்று நினைத்துக் கொண்டாள். அன்று நடந்ததையும் சரி, அதற்கு முன் னால் நடந்திருப்பதையும் சரி, நிலா யாரிடமும் சொல்லவோ, பேசவோ இல்லை என்பது தெரிந்த பின் மான்சிக்கு அவள் மேல் இருக்கும் மதிப்பு அதிகமாகியது.

அது வரை ஆபிஸோடு அவளை நிறுத்திக் கொண்ட மான்சி சில நாட்கள் கழித்து சம்பத் வசந்தை இரவுச் சாப்பாட் டுக்கு அழைத்திருக்கிறான் என்று தெரிந்தவுடன் தானும் நிலாவை அன்றே அழைத்தாள். நிலா அந்த அழைப்பை எதிர்பார்க்கவில்லை. அவளுக்கு அந்த சல்லாப சம் பத்தை நேரில் பார்க்கவும் அருவருப்பாக இருந்தது. ஆனா

லும் மான்சி முதல் முறை அழைத்ததை அலட்சியப்படுத்த விரும்பாமல் அவள் அன்று போனாள்.

உண்மையில் அது விதியின் அழைப்பாகவே தோன்றியது. அன்று அவள் போனது மிக நல்ல நிகழ்வாகத் தோன்றியது. அன்று அங்கு போகாமல் இருந்திருந்தால் அவள் வசந்தைச் சந்தித்திருக்க முடியாது. வசந்தம் அவள் வாழ்க்கையில் வராமலேயே போயிருக்கும். இப்போதும் கூட வந்திருக்கும் வசந்தம் நீடிக்குமா என்று அவளால் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. தினமும் திகிலோடு தான் ஆபிஸ் வந்து போகிறாள். ஆனாலும் அவனுடன் பழகிய சில நாட்களின் இனிமையை அவளால் என்றுமே மறக்க முடியாது.

முடிவில் ஒரு நாள் அவள் எதிர்பார்த்த செய்தி மான்சியிடமிருந்து கிடைத்தது. “நிலா, நீ எங்க வீட்டுக்குச் சாப்பிட வந்தப்ப வசந்த்ன்னு ஒருத்தனை அறிமுகம் பண்ணி வெச்சமே ஞாபகம் இருக்கா?’

நிலா எந்த உணர்ச்சியும் காண்பிக்காமல் தலையசைத்தாள். மான்சி சொன்னாள். “அவனை என் வீட்டுக்காரர் வேலைக்காரன் மாதிரியே நடத்தல. ஒரு நண்பன் மாதிரி வச்சிருந்தார். அவனை நம்பி எல்லாத்தையும் ஒப்படைச்சு

இருந்தார். கடைசில அவன் பணத்தை சுருட்டிட்டு போயிட்டான்."

நிலா திகைப்பைக் காட்டினாள். "உண்மையாவா. பார்த்தா ரொம்ப டீசண்டா தெரிஞ்சாரு"

மான்சி கோபத்தோடு கொந்தளித்தாள். "அவனுக்கெல்லாம் என்ன மரியாதை வேண்டியிருக்கு.... அவன் அப்படி டீசண்டா தெரிஞ்சதால தான் இவர் நம்பினார். ராத்திரி பகல் வேலை பார்க்கற மாதிரியெல்லாம் நடிச்சான். கடைசில கைவரிசைய காமிச்சுட்டான்."

நிலா கேட்டாள். "போலீசுல புகார் குடுத்தாச்சா மேடம்?"

மான்சி குரலைத் தாழ்த்திச் சொன்னாள். "அதுல கணக்குல காமிக்காத பணமும் இருக்கு நிலா. அதனால போலீஸ்ல இவர் புகார் குடுக்கல"

நிலா சொன்னாள். "அப்படின்னா ஆளைப் புடிச்சு நாலு தட்டு தட்டி வாங்கலாமே மேடம்...."

மான்சி படபடப்போடு சொன்னாள். "ஆளு தலைமறைவா யிட்டானே நிலா. அவனைக் கண்டுபிடிக்க முடியல"

நிலா வெளியே கவலையைக் காட்டி உள்ளே ஆனந்தம டைந்தாள். "உழைச்சு சாப்பிடணும்கிற எண்ணமே நிறைய பேருக்கு இல்லை மேடம். உட்கார்ந்த இடத்துல இருந் துட்டே எப்படியாவது வேகமா பணத்தை சேர்த்துக் குவிக் கணும்னு தான் ஆசைப்படறாங்க திருட்டுப்பசங்க. இப்படி சேர்க்கற காசுல சாப்டறது எப்படி தான் ஜீரணம் ஆகுதோ?"

மான்சிக்கு நிலா வசந்தைத் திட்டியதில் சந்தோஷப்பட முடியவில்லை. அந்த வார்த்தைப் பிரயோகங்கள் அவள் கணவனுக்கும் பொருந்துவதாகத் தோன்றவே அமைதி யாய் இருந்தாள். பின் சொன்னாள். "நல்ல வேளை. நீயும் அவனும் சரியான ஜோடியாய் எனக்கும் சம்பத்துக்கும் தோணுச்சு. இவர் கூட அவன் கிட்ட அதைச் சொன்னார். அவன் யாரோ முறைப்பொண்ணு இருக்கறதா சொன்னா னாம். அதனால இவர் விட்டுட்டார். எப்படியோ நீ தப் பிச்சுட்டே. இல்லாட்டி அல்பாயுசுல சித்திரவதை பட்டு சாகப்போகப் அவன் உன் சந்தோஷத்தையும் கெடுத்திருப் பான்..."

நிலாவுக்குச் சுருக்கென்றது. அவள் கடவுளை நம்புபவள் என்றாலும் அடிக்கடி பிரார்த்திக்கும் ரகம் அல்ல. ஆனால் மான்சியின் இந்தக் கொடூர வார்த்தைகளில் மனம் நடுங்கிய அவள் இந்தக் கணம் அவனுக்காகவும் அவளுக்காகவும் மனமுருகப் பிரார்த்தித்தாள்.

# 16

வசந்த் அகப்படாமல் நகர்ந்த ஒவ்வொரு நாளும் சம்பத்துக்கு ஆத்திரம் அதிகமாகிக் கொண்டே வந்தது. பைத்தியம் பிடித்தவன் போல கூடுதலாக நடந்து கொண்டான். இரவு மட்டும் போதையில் இருப்பவன் பகலிலும் கூடக் குடிக்க ஆரம்பித்தான். மான்சி அவனை முடிந்த அளவு சமாதானப்படுத்த முயன்றாள். “பாருங்க. அவன் கண்டிப்பா கிடைக்காம இருக்க மாட்டான். பணமும் திரும்பக் கிடைக்கத் தான் போகுது. அப்படியே இல்லைன்னாலும் என்ன ஆகப் போகுது? நம்ம கிட்ட இன்னும் எத்தனையோ இருக்கு. அதுவும் ரொம்பக் கம்மியில்ல. நமக்கும் நம்ம பையனுக்கும் அது

தாராளமா போதும். இதுக்காக இவ்வளவு கவலைப்படுவாங் களா?"

சம்பத் ஆத்திரம் வந்து கத்தினான். "அறிவிருக்காடி. இப்ப கணக்குல காமிச்சு கைல வச்சிருக்கிற சொத்து எவ்வ ளவு தெரியுமாடி வெறும் தொன்னூற்றி ரெண்டு கோடி. தொலைச்சிருக்கறது எவ்வளவு தெரியுமாடி மூவாயிரத்து நானூத்தி முப்பத்தி ஆறு கோடி. அதுக்கு இது கொஞ்சமா வது பக்கத்துல இருக்காடி. யோசிச்சுப் பாருடி. இப்ப கணக் குப் பாத்தா அவன் தான் கோடீஸ்வரண்டி. நான் வெறும் கோவண ஆண்டி,.."

மான்சி பெருமூச்சு விட்டாள். சரியான கணக்கு அவளை யும் தான் கஷ்டப்படுத்தியது. ஆனால் கணவன் சிறிதாவது கோபம் தணிந்தால், நம்பிக்கை பெற்றால் பரவாயில்லை என்று தோன்றியது. நல்ல வேளையாக ஒரு துப்பறியும் நிபு ணர் புதிய தகவலுடன் வந்தார்.

"அவனுக்கு ஒரு காதலி இருந்திருக்கிறாள்ங்கற தகவல் கிடைச்சிருக்கு. அவன் அந்தப் பொண்ணோட நடு ராத் திரி வரைக்கும் சில நாள்கள்ல சுத்தியிருக்கான்னு தெரியுது. ஆனா அதைக் கவனமா செஞ்சிருக்கான். அரையிருட்

டுல ஆள்நடமாட்டமில்லாத இடத்துல தான் ரெண்டு பேரும் திரிஞ்சுருக்காங்க...”

சம்பத்துக்கு அவர் தன் முட்டைக்கண்ணை உருட்டி உருட்டிச் சொன்ன அந்தப் புதிய தகவல் சிறிது நம்பிக்கை ஊட்டியது. “அந்தப் பொண்ணக் கண்டுபிடிய்யா சீக்கிரம்” என்று கூவினான்.

அந்தத் துப்பறியும் நிபுணர் அவன் கூவலைக் கண்டு கொள்ளவில்லை. அவர் நம்பிக்கையுடன் அமைதியாகச் சொன்னார். “கண்டிப்பா கண்டுபிடிப்போம். கவலைப்படாதீங்க”

சம்பத் எரிச்சலுடன் சொன்னான். “இப்படித்தான்யா அவன் விஷயத்துலயும் சொல்லிகிட்டே வந்தீங்க, அவன் இப்பவும் எங்கயோ ஜாலி செஞ்சுகிட்டிருக்கான். நான் இங்கே தண்ணி போட்டுட்டு புலம்பிகிட்டிருக்கேன். அவன் இந்தியால தான் இருக்கானா இல்லை வெளிநாடு போய் செட்டில் ஆயிட்டானா அதுவும் தெரியலை”

துப்பறியும் நிபுணர் சொன்னார். “நேத்து கூட அவன் பாஸ்போர்ட் நம்பர் குடுத்து செக் பண்ணிட்டேன். அவன் இந்தியாவ விட்டுப் போகல. ஏதாவது காரணம் இருக்

கும்னு நினைக்கிறேன். இல்லைன்னா அவன் வெளிநாட் டுக்குப் போறது தான் அவனுக்குப் பாதுகாப்பு. ஒருவேளை அவன் காதலியோட பாஸ்போர்ட் விசா தயாராகலயோ என் னவோ...”

அவர் போன பிறகு சம்பத் புலம்பித் தள்ளினான். “என் நேரம் ஆட்சில இல்லாமப் போயிட்டோம். அப்பா மந்திரியாயிருந் திருந்தா அவனைத் தீவிரவாதியா அறிவிச்சு பாஸ்போர்ட்ட முடக்கி அவனைத் தேடி ஒரு படையே அனுப்பிச்சிருக்க லாம். பாஸ்டர்ட் தப்பிச்சுட்டான். அவனுக்கு நல்ல நேரம்”

அன்று ஆபிஸ் போனவுடன் சம்பத் பாஸ்கரைத் தனத றைக்கு வரவழைத்து உட்காரச் சொன்னான். பாஸ்கருக்கு அவன் நிற்க வைத்துப் பேசுவது மரியாதைக் குறைவு என் றாலும் சீக்கிரமாய் அனுப்பி விடுவான் என்பதால் அது தேவலை என்று தோன்றியது. உட்கார வைத்தால் நிறைய நேரம் பேசுவான். இப்போது குடித்துக் கொண்டு வந்திருப் பதும் தெளிவாகவே தெரிந்தது. என்னவெல்லாம் சொல் வானோ என்று பயந்தபடியே அவன் எதிர் நாற்காலியில் அமர்ந்தான்.

”வசந்துக்கு ஒரு காதலி இருக்காளாமே. தெரியுமா?” என்று சம்பத் ஆரம்பித்தான்.

பாஸ்கர் விழித்தான். கல்லூரி நாட்களில் சில பெண்களிடம் வசந்த் நெருக்கமாய் பழகியது உண்மை என்றாலும் காதலி என்று அவனுக்கு யாரும் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. வேலைக்கெல்லாம் வந்து விட்ட பிறகு வசந்த் அந்த மாதிரி விஷயங்களுக்குப் போன மாதிரி தெரியவில்லை. தன் அபிப்பிராயத்தை பாஸ்கர் சம்பத்திடம் சொன்னான்.

சம்பத் அவனை எரித்து விடுவது போல் பார்த்தான். “அப்ப நான் பொய் சொல்றேனா?” என்று அவன் கேட்ட போது பாஸ்கர் அவனைப் பரிதாபமாகப் பார்த்தபடி சொன்னான். “எனக்குத் தெரிஞ்சு அவனுக்கு காதலி இல்லை. ஒரு வேளை அவன் ரகசியமாய் யார் கிட்டயாவது பழகியிருக்கலாம்.”

சம்பத் அடுத்த கேள்வியை பாஸ்கரை ஊடுருவிப் பார்த்தபடியே கேட்டான். “அவனோட முறைப்பெண்ணையாவது தெரியுமா, இல்லை அதையும் அவன் ரகசியமாய் வெச்சிருந்தான்னு சொல்லுவியா?”

பாஸ்கர் வாழ்க்கை நொந்தான். மனதிற்குள் வசந்தை நினைத்துப் புலம்பினான். “டேய் என்னடா இது? புதுசு புதுசா இவன் கேக்கறான். சொன்னா நம்ப வேற மாட்டேன் கிறான்..”

சம்பத் அவனிடம் கேட்டான். “என்ன திடீர்னு ஊமையா யிட்டே?”

பாஸ்கர் சொன்னான். “எனக்குத் தெரிஞ்சு அவனுக்கு முறைப்பொண்ணுன்னு யாருமில்ல சார். அவன் அம்மா, அப்பா ரெண்டு பேருக்கும் கூடப்பிறந்தவங்க யாரும் கிடி யாது..”

அவன் மீது சந்தேகம் வந்தாலும் அதையே துப்பறியும் நிபு ணர்கள் தங்கள் கண்டுபிடிப்பில் முதலில் சொல்லியிருந்த தைப் படித்தது நினைவுக்கு வந்தது.

“சரி அவன் அப்புறம் உன் கிட்ட தொடர்பு கொண்டானா?”

“இல்லைங்க சார்”

“அவனைக் கண்டுபிடிக்க நீ என்னவெல்லாம் முயற்சி எடுத்திருக்கே?”

பாஸ்கருக்கு உள்ளே கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ‘டேய் நான் ஏண்டா முயற்சி எடுக்கறேன். என் காசயா அவன் ஆட்டையப் போட்டான். உன் காசு போனதுக்கு நீ தாண்டா முயற்சி எடுக்கணும். அதை விட்டுட்டு லூசு மாதிரி என் கிட்டே கேட்கிற’

சம்பத் கேட்டான். “உனக்குக் காது கேக்காதா? அவனைக் கண்டுபிடிக்க என்ன முயற்சி எடுத்திருக்கேன்னு கேக்கறேன். அவன் கிடைக்கலன்னா உன்னை விட மாட்டேன்னு சொல்லிருக்கேன் ஞாபகம் இருக்கா?”

பாஸ்கர் ‘உனக்கு வேண்டியது பொய் தானேடா மடச் சாம்பிராணி. கேட்டுத் தொலை’ என்று மனதில் சீறி விட்டு, வாய் விட்டு வேறு மாதிரி சொன்னான். “எங்க ரெண்டு பேருக்கும் பொதுவா இருக்கற நண்பர்கள் கிட்ட அவங்க யார் கிட்டயாவது வசந்த் பேசியிருக்கானான்னு கேட்டேன். ஆனா எல்லாருமே அவன் கிட்ட பேசியே ஆறு மாசம் ஆச்சு ஒரு வருஷம் ஆச்சுன்னு சொல்றாங்க சார்”

சம்பத் சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டான். அவன் தூங்கி விட்டானோ என்று பாஸ்கர் சந்தேகப்பட ஆரம்பித்த போது கண்விழித்துக் கேட்டான். "ஓ.கே. நீ எனக்கு இங்கேயிருந்து ரெண்டு பேரும் விமானம் ஏறினதிலிருந்து திரும்பி வந்து இறங்கின வரைக்கும் என்னவெல்லாம் நடந்ததுன்னு ஒன்னு விடாம விவரமா சொல்லு பார்ப்போம்..."

'அடேய்... மறுபடியுமா' என்று மனதுக்குள் அலறிய பாஸ்கர் வேறுவழியில்லாமல் சொல்ல ஆரம்பித்தான். பெரும்பாலான சமயங்களில் அவன் சுற்றிப் பார்க்கவே சென்றிருந்ததால் அவனுக்கு சில நாட்கள் என்ன நடந்தது என்றே சொல்லத் தெரியவில்லை. அதை எப்படியோ சமாளித்து அவன் சொல்ல முயன்ற போது சம்பத் உண்மையைக் கண்டுபிடித்து விட்டான்.

கண்களில் தீப்பந்தங்கள் எரியச் சொன்னான். "அப்படின்னா நீ அங்கே போய் என் வேலை எதுவும் செய்ய அவனுக்கு உதவி செய்யல. நீ ஊர் சுத்தப் போய் அவன் தனியா யார் இடைஞ்சலும் இல்லாமல் என்னை ஏமாத்தறதுக்கு உதவி செஞ்சுட்டு வந்திருக்கே"

பாஸ்கர் மனதினுள் வெந்தான். 'பக்கத்துலயே நான் இருந் திருந்தாலும் எதையும் கண்டுபிடிச்சிருக்க முடியாதுடா மடையா. வேலை என்ன ஏதுன்னே எனக்குத் தெரியாதப்ப நான் எப்படிடா கண்டுபிடிக்கறது'. ஆனால் தன்னைக் கட் டுப்படுத்திக் கொண்டு எதோ சொல்ல வேண்டுமே என்பதற்காகச் சொன்னான். "அப்படியெல்லாம் இல்லை சார்"

சம்பத் அவனை ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்து விட்டுச் சொன்னான். "மூணு நாள் தர்றேன். அதுக்குள்ளே அவனை எப்படியாவது கண்டுபிடிச்சுத் தரணும். இல்லாட்டி அவனைப் பத்தின ஏதாவது கூடுதல் விவரத்தையாவது சொல்லணும். இல்லாட்டி அது உனக்கே நல்லதாய் இருக் காது"

அவனை அனுப்பி விட்டு வீட்டுக்கு வந்த சம்பத் மான்சியி டம் சொன்னான். "பாஸ்கர் சொல்றான். வசந்துக்கு யாரும் முறைப்பொண்ணு இல்லைன்னு. அப்படின்னா அந்த ராஸ் கல் அந்த விஷயத்துலயும் ஏன் பொய் சொன்னான்? நீ எதுக்கும் நிலா கிட்ட விசாரி.  அன்னிக்கு ரெண்டு பேரும் சேர்ந்து தானே இங்கிருந்து போனாங்க."

# 17

அன்று மாலையில் ஆபிசுக்குப் போன மான்சி நிலாவிடம் சொன்னாள். “அந்த ராஸ்கல் வசந்த் வாயைத் திறந்தாலே பொய் தான் பேசுவான் போல இருக்கு. நீ அவனுக்குச் சரி யான ஜோடியாய் இருப்பேன்னு சொன்னப்ப அவன் அவ னுக்கு முறைப்பொண்ணு இருக்கறதா இவர் கிட்ட சொல்லி ருக்கான். இப்ப அவன் நண்பன் பாஸ்கர் கிட்ட கேட்டா அவ னுக்கு முறைப்பொண்ணுன்னு யாரும் இல்லைன்னு சொல் றானாம்”

நிலா கேட்டாள். “இப்படியெல்லாம் பொய் சொல்றதுல அவ னுக்கென்ன மேடம் லாபம்”

“யாருக்குத் தெரியும்? ஆனா அவனுக்கு ஒரு காதலி இருக் கிறான்னும் அடிக்கடி அவளை அவன் ரகசியமா சந்திச்சு கிட்டிருந்தான்னும் இப்ப தகவல் கிடைச்சிருக்கு...”

நிலாவுக்கு திக்கென்றது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவளும் ஆச்சரியத்தை முகத்தில் காட்டி னாள்.

மான்சி கேட்டாள். “அவன் அன்னைக்கு ராத்திரி உன்னை வீட்ல ட்ராப் பண்ணானே அப்ப எதாவது சொன்னானா?”

நிலா இன்னேரம் சுதாரித்திருந்தாள். தன் மீது எந்தச் சந்தே கமும் வராமல் இருக்க ஒரே வழி அவனைத் திட்டுவது தான் என்று புரிந்து கொண்டிருந்தாள். “அவன் நீங்க சொன்னதுக் காகத் தான் என்னை வீட்டுல இறக்கி விட்டான். போறப்ப வாயே திறக்கலை. என்னவோ நான் அவன் ஸ்டேட்டஸூக் குப் பத்தாதுங்கற மாதிரி நடந்துகிட்டான். எனக்கு ஏண்டா அவன் கூடப் போனோம்னு ஆயிடுச்சு. இறக்கி விட்டு தேங்க்ஸ் சொல்ற வரைக்கும் கூட அவன் நிக்கலை. வேக

மாப் போயிட்டான். எனக்கே அவமானமாயிடுச்சு. அவன் மேல நீங்க ரெண்டு பேரும் வச்சிருக்கற மரியாதையக் கெடுக்க வேண்டாம்னு தான் நான் உங்க கிட்ட இதை சொல்லலை....”

மான்சி அதைக்கேட்டு இன்னும் வசந்த் மேல் கோபப்பட் டாள். “என்ன பெரிய ஸ்டேட்டஸ் அவனுக்கிருக்கு. சொந் தமா வீடு கூட கிடையாது. இப்ப ஆட்டயப் போட்ட காசுல வேணும்னா அரண்மனையே வாங்கலாம். அது வேற விஷ யம். மத்தபடி சொத்து பத்து கிடையாது அந்த நாய்க்கு”

நிலா சொன்னாள். “நான் கூட அவன் பந்தாவ பாத்து கொஞ்சம் வசதியானவன்னு நினைச்சேன்....”

மான்சி அவளிடம் அவன் தந்தை ஒரு பள்ளிக்கூட வாத் தியார், அவருடைய ஒரே சொத்து பழைய சைக்கிள் தான் என்பதைக் கேவலமாகச் சொன்னாள்.

கேட்டுக் கொண்ட நிலா திடீரென்று யோசனை வந்தவ ளாகச் சொன்னாள். “அவனுக்குக் காதலி ஒருத்தி இருக் கிறாங்கறது உண்மையா தான் மேடம் இருக்கும்.... ஏன்னா

என்னை இறக்கி விட்டுட்டு அவன் காத்தாய் பறந்தான். அவளைச் சந்திக்கத் தான் போயிருப்பான் போல...”

மான்சி சொன்னாள். “அந்தப் பொண்ணு கைக்குக் கிடைச்சா கூட அவளை வெச்சு அவனைப் பிடிக்கலாம். அவ எங்கேயிருக்காளோ?”

அன்று வீட்டுக்குப் போய்ச் சேரும் வரை திக் திக்கென்று தான் நிலாவுக்கு இருந்தது. அவன் காதலி அவள் தான் என் பது அவர்களுக்குத் தெரிந்தால் பின் அவள் நிலைமை எப் படி மாறும் என்பதை அவளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

வீடு போய்ச் சேர்ந்தவுடன்  அவன் போவதற்கு முன் உரு வாக்கித் தந்திருந்த  அவளுடைய புதிய மெயில் ஐடியி லிருந்து அவனுடைய புதிய மெயில் ஐடிக்கு இந்தப் புதிய தகவலை அனுப்பினாள். அதை மிக மிக அவசியமான தரு ணங்களில் அவசரத்தகவல் அனுப்ப மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று அவன் எச்சரித்திருந்தான். ”சும்மா நீங்க எப்படி இருக்கீங்க. பாதுகாப்பா இருக்கீங்களா, சௌக்கிய மான்னெல்லாம் மெயில் அனுப்பக்கூடாது. ரொம்ப ஜாக்கி ரதையாய் இருக்கணும். அவங்களுக்குச் சந்தேகம்னு வந்

துட்டா எதை வேணும்னாலும் தோண்டி அவங்க கண்டுபி டிச்சுக்க முடியும். அப்படியிருக்கு டெக்னாலஜி”

அனுப்பும் மெயிலிலும் தந்தி வாசகம் போல் சுருக்கமாகத் தகவல் அனுப்பச் சொல்லியிருந்தான். அதனால் சுருக்க மாகவே அவள் தகவல் அனுப்பியிருந்தாள். அரை மணி நேரத்தில் இரண்டு புகைப்படங்களை அனுப்பி அவள் என்ன செய்ய வேண்டும் என்று தெரிவித்து வசந்திடமிருந்து மெயில் வந்தது. அவள் அந்தப் புகைப்படங்களைத் தன் அலைபேசியில் சேமித்துக் கொண்டாள். பின் இருவரும் அந்த மெயிலை அழித்துக் கொண்டார்கள்.

மறுநாள் ஆபிசில் நிலா மான்சியிடம் ஏதோ சொல்ல வந்த போது அவள் முகத்தில் தெரிந்த வெட்கத்தைப் பார்த்து விட்டு மான்சி கேட்டாள். “நிலா. ஏதோ விசேஷமான செய்தி சொல்ல வந்திருக்கிற மாதிரி இருக்கு”

நிலா வெட்கத்தோடு தன் அலைபேசியிலிருந்த இரண்டு புகைப்படங்களைக் காட்டினாள். அதிலிரண்டிலும் ஒரு மிக அழகான இளைஞன் இருந்தான். ஒன்றில் பைக்கில் அமர்ந்தபடி இருந்தான். இன்னொன்றில் ஏதோ பூங்காவில்

நின்றபடி இருந்தான். பார்த்து விட்டு மான்சி சொன்னாள். "சினிமா ஹீரோ மாதிரி இருக்கான்."

நிலா வெட்கத்துடனே சொன்னாள். "இவர் துபாய்ல ஒரு கம்பெனில அக்கவுண்டண்டா இருக்கார். அப்பா அம்மாக்கு ஒரே பிள்ளையாம். அவங்களும் அங்கேயே இருக்காங்க. என் அக்கா என் பழைய போட்டோ ஒன்னைக் காமிச்சிருக்கா. அது அவரோட அப்பா அம்மாக்குப் பிடிச்சிருக்காம். பையனுக்குக் காமிக்க நல்லதாய் ரெண்டு போட்டோ அக்கா அனுப்பி வைக்கச் சொல்லி இருக்கா"

மான்சி சொன்னாள். "வாழ்த்துக்கள்"

நிலா சொன்னாள். "அவசரப்படாதீங்க. பையனுக்கு என்னைப் பிடிக்கணுமே. என்னை ரெண்டு போட்டோ எடுக்கறீங்களா மேடம்"

மான்சி உற்சாகமாய் நிலாவுக்குச் சில ஒப்பனைகள் எல்லாம் செய்து நான்கு போட்டோக்கள் எடுத்தாள். அதில் இரண்டைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கச் சொன்னாள். "இதைப் பார்த்தா உன்னோட ஹீரோவுக்குப் பிடிக்காம போகாது..."

“அவருக்கும் பிடிச்சிருந்தா நான் ஒரு தடவை துபாய் போய்ட்டு வர வேண்டி இருக்கும் மேடம்... அக்கா வரச் சொல்றா...”

மான்சி சொன்னாள். “போய்ட்டு வா. கல்யாணம் ஆனா நீயும் அங்கேயே செட்டில் ஆயிடுவியா?”

“தெரியலை மேடம். போய்ப் பேசினா தான் தெரியும்”

மான்சி வீட்டுக்குப் போனவுடன் நிலாவுக்கு வீட்டில் ஒரு பையன் பார்த்திருப்பது பற்றி சம்பத்திடம் சொன்னாள். ”.... பொண்ணு முகத்துல ஒரே சந்தோஷம். பையன் சினிமா ஹீரோ மாதிரி இருக்கான்... துபாய்ல இருக்கானாம்...”

சம்பத்துக்கு அந்தத் துப்பறியும் நிபுணர் வசந்தின் காதலி யைப் பற்றிச் சொல்லி விட்டுப் போனவுடனேயே ஓரிரண்டு ஆபிஸ் பெண்களோடு நிலாவும் ஏனோ நினைவுக்கு வந்து விட்டுப் போனாள். வசந்த் நிலாவிடம் பெரிய ஆர்வம் காட் டாவிட்டாலும் கூட அவள் செல்ல எழுந்திருக்கும் போதே அவனும் எழுந்ததும், மான்சி சொல்லித்தான் என்றாலும் இருவருமாகச் சேர்ந்து போனதும் கொஞ்சம் சந்தேகத்தை

யும் கிளப்பியிருந்தது. அதனால் தான் எதற்கும் நிலாவையும் விசாரிக்கச் சொல்லி மான்சியிடம் சொல்லி இருந்தான்.

இப்போது மான்சி சொல்வதைக் கேட்டால் வசந்தின் காதலி நிலாவாக இருக்க முடியாது என்ற தோன்ற ஆரம்பித்தது. ஆனாலும் மனைவியைக் கேட்டான். "அவ கூட வசந்த் போனப்ப ஏதாவது சொன்னானா, என்ன நடந்ததுன்னு கேட்டாயா?"

மான்சி நிலா சொன்னதைச் சொன்னாள். சம்பத் அன்று இரவு நடந்ததை எல்லாம் மனதில் மறு ஒளிபரப்பு செய்து பார்த்தான். நிலா மீது வசந்த் சிறிதும் ஆர்வம் காட்டவில்லை என்பது உண்மை தான். அவளைத் தன் தலையில் சம் பத் கட்டிவிடப்போகிறானோ என்று பயந்து கூட அவன் முறைப்பெண் இருப்பதாய்ச் சொல்லி இருக்கலாம்... அவன் காதலியைப் பார்க்க வருவதாக ஒரு நேரத்தைச் சொல்லி வாக்களித்திருக்கலாம். ஆனால் எப்படி சடாரென்று எழுந்து போவது என்று தயக்கம் காட்டி இருக்கலாம். நிலா எழுந் தவுடன் இது தான் சாக்கு என்று அவனும் கிளம்பியிருக்க லாம். மான்சி சொன்னதற்காக அவளைக் கொண்டு போய் இறக்கி விட்டுத் தன் காதலியைப் பார்க்கப் பறந்து போயி ருக்கலாம்....

எல்லாமே ஒரு கோர்வையாக வந்தவுடன் சம்பத் சந்தேகம் ஒழிந்தான். அந்தப் பெண் நிலா தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கக்கூடியவள். எத்தனையோ முறை அவன் பண்ணை வீட்டில் அழகிகளை அழைத்துக் கொண்டு செல்லும் போது அதன் பக்கத்திலிருந்த ஹாலின் வெளியே அவளுடைய ஸ்கூட்டி நிற்பதைப் பார்த்திருக்கிறான்.

வேலைக்காரர்களைக் கண்டு பயந்தெல்லாம் தன் சந்தோஷங்களை இழக்கத் தயாராக இல்லாத சம்பத் கூட்டிக் கொண்டு வந்தவர்களுடன் வீட்டுக்குள் நுழைந்து ஜாலியாக இருந்திருக்கிறான். அவள் அதைக் கண்டுகொண்டதுமில்லை. பிறகு மான்சியிடம் அதைப் போட்டுக் கொடுத்ததாகவும் தெரியவில்லை. அவள் சொல்லியிருந்ததால் அதை மான்சி ஏதாவது ஒரு சமயத்தில் தெரிவித்திருப்பாள்.

துப்பறியும் நிபுணர் ”வசந்தைக் கண்டுபிடிக்கிறேனோ இல்லையோ, அவன் காதலியைச் சீக்கிரமே கண்டுபிடித்துக் கொடுக்கிறேன்” என்று வாக்குக் கொடுத்திருக்கிறார். அந்தப் பெண் கிடைத்தால் அவளை என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று அவன் கற்பனை செய்ய ஆரம்பித்தான்.

# 18

**வ**சந்த் ஆபத்தான கட்டத்திலேயே இப்போதும் தானும், நிலாவும் இருப்பதை உணர்ந்திருந்தான். எத்தனை தான் புத்திசாலித்தனமாக முன்யோசனையுடன் நடந்து கொண்டாலும் சில தவறுகள் நிகழ்ந்தே தீர்கின்றன. நிலாவுடன் அவன் அதிக ஆள்நடமாட்டமுள்ள இடங்களுக்குப் போனதில்லை. எந்த செக்யூரிட்டி கேமிராவிலும் மாட்டியதில்லை. அதிக வெளிச்சங்களில் நடமாடியதில்லை. இருந்த போதிலும் அவர்களை யாரோ கவனித்திருக்கக்கூடும், கவனித்த விவரங்களை நினைவு வைத்திருக்கக்கூடும், வந்து விசாரிப்பவர்களிடம் சொல்லவும் கூடும்...

நிலாவிடமிருந்து வந்த மெயில் அவனை நிஜமாகவே உலுக்கி விட்டிருந்தது. அவளுக்கு ஒரு ஆபத்தை விளைவித்து விட்டு அவன் கண்டிப்பாக இங்கே ஒளிந்திருக்க முடியாது, தப்பிக்கவும் முடியாது. அதனால் தான் உடனடியாக

யோசித்து நெட்டில் தேடி கல்கத்தாவைச் சேர்ந்த பிரபல மில்லாத ஒரு ஆண் மாடலின் இரண்டு புகைப்படங்களை எடுத்து அவளுக்கு அனுப்பி அவளுடைய அக்கா அவளுக் குப் பார்த்திருக்கும் வரனாகச் சொல்லச் சொன்னான்.

சம்பத்தின் வீட்டிலிருந்து இருவரும் சேர்ந்து கிளம்பியதால் அவர்களுக்குச் சிறிய சந்தேகமாவது எழ வாய்ப்பிருக்கிறது என்று புரிந்து கொண்டவன், எழ ஆரம்பித்திருக்கும் சந் தேகத்தை ஆரம்பத்திலேயே வெட்டியெறிய எண்ணினான். அதோடு இனி நிலா இந்தியாவில் அதிக காலமிருந்தால் என்னேரமும் ஆபத்து வரலாம் என்பதால் அவள் இங்கி ருந்து பாதுகாப்பாக அவனுக்கு முன்பே போய் விடுவது நல் லது என்று அவன் நினைத்தான்.

அவள் திடீரென்று வெளிநாடு கிளம்பினால் அது கூட அவர் களுக்குச் சந்தேகத்தைக் கிளப்ப வாய்ப்பிருக்கிறது என் றால் இந்த சாக்கைச் சொல்லி சில நாட்கள் அவர்களி டம் எப்போதும் போல் வேலைக்குப் போய்க் கொண்டிருந்து விட்டு விடைபெற்றால் சந்தேகம் வராது என்று அறிவுறுத்தி அவளை உடனடியாக விசா மற்றும் விமான டிக்கெட்டை அடுத்த வாரத்தில் ஒரு நாளுக்கு வாங்கி விடும்படி சொல்லி இருந்தான். விமான டிக்கெட் செலவு எவ்வளவானாலும் அதற்கெல்லாம் யோசிக்க வேண்டாம் என்று சொன்னவன்

அவளுடைய தாயையும் கூட அழைத்துப் போகச் சொன்னான்....

ஆனால் இதெல்லாம் நிலாவை எத்தனை நாள் காப்பாற்றும் என்று அவனுக்குத் தெரியவில்லை.

மான்சியிடம் நிலா வந்து வெட்கத்துடன் நன்றி சொன்ன போது, நன்றி எதற்கு என்று மான்சிக்குப் புரியவில்லை. கேள்விக்குறியோடு நிலாவை அவள் பார்த்தாள்.

நிலா சொன்னாள். “அவரும் பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டாராம். எல்லாம் நீங்கள் என்னை போட்டோ எடுத்த ராசி மேடம்”

மான்சி சந்தோஷப்பட்டாள். “உன்னை ஒருத்தன் பிடிக்கலைன்னு சொன்னா தான் அது ஆச்சரியம். அப்படின்னா துபாய் போகணுமா நீ?”

நிலா சொன்னாள். ”ஆமாம் மேடம். அடுத்த வார புதன் கிழமை போக உத்தரவாயிருக்கு”

மான்சி சொன்னாள். “ஓகே ஆல் த பெஸ்ட் நிலா. ஆனா போறதுக்கு முன்னாடி, இருக்கற எல்லா வேலையும் முடிச் சுட்டு போ நிலா. நான் ஒருத்தியே எல்லாத்தையும் பாத்துக்க முடியாது”

“அது நீங்க சொல்லாட்டியும் கண்டிப்பா செஞ்சு முடிச்சுட்டு தான் போவேன் மேடம்”

“நீ திரும்ப எப்ப வருவே?”

“ஒரு மாசமாவது ஆகும் மேடம். ’வர்றது தான் வர்றே, ஒரு மாசமாவது இருந்துட்டு போ’ங்கறா அக்கா.”

மான்சிக்கு அது அதிகம் என்று தோன்றியது. ஒருவாரம் அல்லது அதிகபட்சமாய் பத்து நாட்கள் போதும், அதைவிட அதிகமாய் இருக்க துபாயில் அப்படியொன்றும் பெரிதாக இல்லை… ஆனால் அதை வாய் விட்டுச் சொல்லவில்லை. ஒருவேளை இவள் கோபித்துக் கொண்டு வேலையிலி ருந்து நின்று விட்டால் இவளைப் போல வேறொரு ஆள் அவளுக்குக் கிடைக்காது. மான்சி மெல்ல அரை மனதோடு சரியென்று தலையசைத்தாள்.

**வ**சந்தின் முக்கிய வேலைகள் அவன் இருந்த இடத்திலி ருந்தே மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. சம்பத்திடம் சொல்லி அந்தத் துப்பறியும் நிபுணர் சந்தேகப்பட்டது போல அந்த வேலைகள் முடியாததால் தான் இங்கிருந்து வெளி நாட்டுக்குத் தப்பித்துச் செல்லாமல் இருக்கிறான்.

நிறைய பணம் = நிறைய பரிவர்த்தனைகள் = நிறைய வேலைகள் = நிறைய சட்டதிட்டங்கள் = நிறைய தாமதம்

எல்லாமே சரியாகச் செய்ய வேண்டியவை. அதில் குறைபாடு இருக்குமானால் அது பல கோடி நஷ்டங்களை ஏற்படுத்தி விடும். வெளிநாடுகளுக்குச் செல்லும் போது அடிப்படை வேலைகள் எல்லாம் அவன் செய்து விட்டு வந்திருக்கிறான். பணம் சம்பத் கையிலிருந்து நழுவி விட்டது. அவன் கண் டுபிடிக்க முடியாதபடி பல பரிவர்த்தனைகள், பல நாடுகள் தாண்டி விட்டன. ஆனால் பணம் முழுவதுமாக இன்னமும் வசந்த் கையில் வந்து சேரவில்லை. பெரும்பாலானவை கடைசி நிலையில் இருக்கின்றன.

அன்னியச் செலாவணி மற்றும் வெளிநாட்டு வர்த்தக வல்லுனர் சம்பத்தின் அழைப்பின் பேரில் அவன் ஆபி சுக்கு வந்து சம்பத்துக்குத் தேவையான பரிவர்த்தனைகள

அனைத்தையும் விவரித்த போது, அதற்குப் பிறகான தன்னுடைய பரிவர்த்தனைகளுக்கான நுணுக்கங்களை வசந்தால் கேட்க முடியவில்லை. அந்த வல்லுனர் போகும் போது ஏதாவது சந்தேகம் வந்தால் கேட்கலாம் என்று போன் நம்பரை வசந்திடம் கொடுத்து விட்டுப் போயிருந்தார். அவன் சந்தேகங்கள் போனில் கேட்கக்கூடிய சந்தேகங்கள் அல்ல. அதனால் அவன் சம்பத்துக்குத் தெரியாமல் அவர் ஆபிசுக்குப் போய் ஒரு நாள் முழுவதும் அவரிடம் பேசி, ஏகப்பட்ட கேள்விகள் கேட்டு குறிப்புகள் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறான். அதை எல்லாம் கவனத்தில் வைத்துத் தான் அவன் மிக நேர்த்தியாகப் பரிவர்த்தனைகள் செய்திருக்கிறான். அதில் எல்லாம் சில கேள்விகள் எழுகையில் அவன் விளக்கங்கள் தர வேண்டியிருந்ததே ஒழிய பிரச்னைகள் இல்லை. சிறிது தாமதமாகின்றது என்பது தான் ஒரே பிரச்னை.

ஒரே ஒரு பெரிய பரிவர்த்தனை மட்டும் ஏதோ சட்ட நுணுக்கப் பிரச்னையில் பாதியிலேயே நிற்கிறது. அந்தப் பிரச்னை என்னவென்று அவனுக்கு அவர்கள் தெரியப்படுத்தினால் ஒழிய வசந்த் அதைச் சரிசெய்ய முடியாது. அது இங்கிலாந்தில் இருக்கும் பெரிய சொத்து சம்பந்தப்பட்டது.... வாங்கியிருப்பவர்கள் 25% பணம் தந்து விட்டார்கள். மீதமுள்ள 75% அவர்களுடைய சட்ட நிறுவனம் டாக்குமெண்டுகளில்

முழுத் திருப்தி அடைந்த பின் தான் அவன் கைக்கு வரும். அவன் கைக்கு வந்த பின் அவன் செய்ய வேண்டிய வேலைகள் இருக்கின்றன. அதை எல்லாம் முடித்து விட்டுத் தான் அவன் கிளம்ப முடியும்...

வசந்த் எதிர்பார்த்திருந்த மெயில் ஒரு வழியாக வந்து சேர்ந்தது. அந்தப் பரிவர்த்தனை சம்பந்தமான மூலப்பத்திரத்திற்குத் தொடர்புள்ள ஒரு டாக்குமெண்ட் அதனுடன் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் அது ஒன்றை மட்டும் அனுப்பி வைத்தால் பரிவர்த்தனை பூரணமடைந்து விடும் என்றும் மீதிப் பணம் அனுப்பி வைக்கத் தடையேதும் இல்லை என்றும் அதில் வெளிநாட்டுச் சட்ட நிறுவனம் தெரிவித்திருந்தது.

வசந்த் அவர்கள் குறிப்பிட்டிருந்த டாக்குமெண்ட் என்ன என்று பார்த்தான். அது சம்பத்திடம் இருக்கிறது என்று ஞாபகம் வந்தது. ஏனென்றால் அந்தச் சொத்து வாங்குவதற்கு சம்பத் போன போது கூட அவனும் போயிருக்கிறான். சம்பத் வெள்ளைக்காரப் பெண்களுடன் உல்லாசமாக இருந்த போது அவன் தான் அவற்றைச் சரிபார்த்து எடுத்து வைத்தவன்.

ஆனால் பிற்பாடு சம்பத்தின் வக்கீல் அந்த டாக்குமெண்ட் அடுத்த பரிவர்த்தனைகளில் அவசியமில்லை என்று சொல்லி விட அது சம்பத்தின் ஆபிஸ் பீரோவில் நானா வித கூடுதல் டாக்குமெண்ட்களோடு வைக்கப்பட்டு விட்டது. சம்பத்தின் வக்கீல் வேண்டாம் என்று சொன்ன டாக்குமெண்ட் இப்போது இந்தப் பரிவர்த்தனையை முடிக்கத் தேவைப்படுகிறது. அது சம்பத்திடம் உள்ளது. அது வசந்த் கைக்கு வந்தால் ஒழிய மொத்தப் பரிவர்த்தனையே முடியாது. என்ன செய்வது என்று யோசித்தான்.

பாஸ்கர் ஒரு புத்திசாலியாகவும், துணிச்சல்காரனாகவும் இருந்திருந்தால் அவனிடம் பேசியிருக்கலாம். அதை எப்படியாவது சம்பத்தின் தனியறை பீரோவில் இருந்து திருடி அனுப்பச் சொல்லியிருக்கலாம். அங்கேயே வேலை செய்பவனாக இருப்பதால் அவனுக்கு அந்த பீரோவில் இருந்து எடுத்து அனுப்புவதில் பெரிய சிரமம் இருக்காது. ஆனால் அவனுக்கு சாமர்த்தியம், துணிச்சல் இரண்டுமே போதாது. இத்தனைக்கும் அந்த ஆபிசின் எல்லோ பீரோ சாவிகளுக்கும் கள்ளச்சாவி வசந்திடம் உள்ளது. அவற்றை எல்லாம் அவன் முன்பே தயாரித்து வைத்திருந்தான். பாஸ்கரால் முடியும் என்று தோன்றினால் பீரோ சாவியை அவன் அனுப்பிக்கூட வைத்திருப்பான். பாஸ்கர் இப்போது சம்பத்தின் கோபத்தையே சமாளிக்க முடியாமல் கஷ்டப்பட்டுக்

கொண்டிருப்பான் பாவம். அவனுக்குப் போன் செய்து பேசு வதே இருவருக்கு,ம் ஆபத்து தான்.

பாஸ்கரிடம் உதவி கேட்கும் யோசனையைக் கைவிட்டு, வேறு என்ன செய்வது என்று வசந்த் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.

# 19

வசந்த் முன்னால் இரண்டு வழிகள் தெரிந்தன. ஒன்று அதை எடுத்து வர இது போன்ற வேலைகளில் தேர்ச்சி பெற்ற ஆள்களிடம் ஒப்படைப்பது. நல்ல தொகை தந்தால் அதைக் கச்சிதமாகச் செய்து வர நிறைய பேர் இருக்கிறார்கள். வரவிருக்கும் தொகை பல கோடிகளில் இருப்பதால் லட்சங்கள் செலவு செய்வது பிரச்சினை இல்லை. ஆனால் எவனிடமாவது இந்த வேலையை ஒப்படைத்தால் அந்த டாக்குமெண்டை அங்கிருந்து எடுத்துக் கொண்டு வந்து வசந்திடம் தந்து விட்டு என்றென்றுக்குமாய் நகர்ந்து போய் விட்டால் பிரச்சினை இல்லை. அவனைப் பற்றியும், சம்பந்தப்பட்டிருக்கும் தொகை பற்றியும் தெரிந்தால் அந்த ஆள்

[redacted]

கூடுதல் பணத்துக்கு ஆசைப்படலாம். பணம் கேட்டுப் பிறகு ப்ளாக்மெயில் செய்யலாம். இவ்வளவு பணம் தா. இல்லா விட்டால் நீ இருக்கும் இடத்தை உன் எதிரிக்குச் சொல்லி விடுவேன் என்று மிரட்டலாம்....

இதெல்லாம் நடக்கக்கூடியவையே. இது போன்ற வேலைக்கு வருபவர்கள் வேலையில் ஈடுபடுவதற்கு முன் னால் எல்லாத் தகவல்களையும் தெரிந்து கொள்ளாமல் வேலையை ஆரம்பிக்க மாட்டார்கள். அப்படித் தெரிந்து கொள்ளும் போது பண ஆசை அவர்களை மாற்றி விடலாம். தொழில் மந்தமாகும் போதெல்லாம் அவர்களுக்கு அவன் நினைவு வரலாம். ஏனென்றால் இந்தக் காலத்தில் தொழில் தர்மம் என்பது அபூர்வமாகக் காணும் ஒன்றாகி விட்டது. நியாயம் பேசினால், நீயும் கஷ்டப்பட்டு சம்பாதித்தது அல் லவே அதில் ஒன்றிரண்டு கோடிகள் கூடுதலாய் எனக்குக் கொடுத்தால் என்ன, குறைந்தா போய்விடுவாய் என்றெல் லாம் கூடக் கேட்கலாம். அதெல்லாம் செய்யா விட்டாலும் கூட, மறைமுகமாய் அவனைக் கண்காணித்துக் கொண்டி ருந்து, பின் தொடர்ந்து அவன் எங்கே போய் சேர்கிறான், எங்கே வசிக்கிறான் என்பதை எல்லாம் தெரிந்து வந்தும் கூட சம்பத்திடம் கோடிகளுக்குப் பேரம் பேசி அந்தத் தக வல்களைத் தரும் அபாயம் கூட இருக்கிறது.

இன்னொரு வழி, அவனே போய் எடுத்து வருவது. அதில் ஆபத்தின் அம்சங்கள் அதிகம். அவனைக் கஷ்டப்பட்டுத் தேடிக் கொண்டிருப்பவர்கள் இடத்திற்கே போய் இன் னொரு பொருளை எடுத்து வருவது. அபாயத்தின் உச் சம் என்றே சொல்ல வேண்டும். அகப்பட்டுக் கொண்டால் எல்லாமே வீணாகிப் போய் விடும். ஆனால் வெற்றிகரமாக எடுத்துக் கொண்டு வர முடிந்து விட்டாலோ எதிர்காலத்தி லும் கூட எந்தப் பிரச்சினையும் இதன் மூலம் வராமல் நிம்ம தியாக இருக்கலாம்.

இரண்டையும் யோசித்ததில் புத்திசாலித்தனமாகச் செய் தால் இரண்டாம் வழி ஆபத்தாயிருந்தாலும் நல்லது என்று வசந்துக்குத் தோன்றியது. உடனே ஒரு காகிதம் எடுத்து அனுகூலமாக இருக்கும் விஷயங்கள், ஆபத்தாக இருக்கும் விஷயங்கள் என்று இரண்டு பட்டியல் போட ஆரம்பித்தான்.

<u>அனுகூலமாக இருக்கும் விஷயங்கள்:</u>

1. அந்த இடம் அவன் முழுவதுமாக அறிந்த இடம். அவன் வருடக்கணக்கில் வலம் வந்த இடம்.
2. அவன் அங்கே எதையும் உடைக்க வேண்டிய தில்லை. முன் கேட் சாவியிலிருந்து சம்பந்தப்பட்ட பீரோ சாவி வரை கள்ளச்சாவிகள் அவன் கையில் இருக்கின்றன.
3. காவலுக்கு இருக்கும் காவலாளி எந்த நேரம் தூங் குவான், எந்த நேரம் விழிப்பான் என்பதெல்லாம்

[redacted]

அவனுக்கு அத்துப்படி. காவலாளி இரவில் 12 மணி முதல் காலை நான்கு மணி முதல் கும்பகர் ணன்.

4. அந்த ஆபிசில் ஒருவன் திருட வருவான் என்று யாருமே எதிர்பார்க்க மாட்டார்கள். ஒரு சாதார ணத் திருடன் வந்து திருடிக் கொண்டு போய் விற்க முடிந்த பொருள்கள் அங்கே எதுவுமில்லை. அத னால் யாருமே எச்சரிக்கையாகக் கண்காணிக்க மாட்டார்கள்.

5. முக்கியமாக அவன் மீண்டும் வருவான் என்ற எதிர் பார்ப்போ சந்தேகமோ ஒரு சதவீதம் கூட சம் பத்துக்கே வராது. ஏனென்றால் வசந்துக்கு மிகத் தேவைப்படும் ஒரு டாக்குமெண்ட் தன்னிடம் இருக்கிறது என்பது சம்பத்துக்கே தெரியாது.

<u>ஆபத்தான விஷயங்கள்</u>

1. போகும் போதோ, வரும் போதோ யாரா வது அவனை அடையாளம் கண்டுபிடிக்கக்கூடும். அதை சம்பத்திடம் தெரிவித்து விடவும் கூடும். அதனால் போகும் வழியிலோ, வரும் வழியிலோ அவன் அவர்களிடம் பிடிபட்டுவிடும் வாய்ப்பு இருக்கிறது.

2. ஆபிசில் கண்காணிப்பு கேமிராக்கள் இருக்கின் றன. அவை மூலம் சம்பத் இருக்கும் இடத்திலி ருந்தே தன் மொபைலில் ஆபிசில் நடப்பதைக் கண்காணிக்க முடியும்படி வசதி செய்து வைத் துக் கொண்டிருக்கிறான். ஊழியர்கள் எல்லோரும் ஒழுங்காக வேலை செய்கிறார்களா என்று கண்கா ணிக்க அவன் செய்து வைத்திருக்கும் இந்த ஏற் பாட்டில் பார்த்தால் வசந்த் அங்கே போய் உள்ளே செய்யும் வேலையும் தெரியும்.

3. அப்படி ஒரு வேளை சம்பத் பார்த்து விட்டால் உட னடியாக ஒரு படையையே மின்னல் வேகத்தில் அனுப்பி வைக்க முடியும்.

[redacted]

4. அந்த செக்யூரிட்டி கேமிராக்களைச் செயலிழக்க வைக்க முடியாது. மிக நேர்த்தியான தொழில்நுட் பம் வாய்ந்த அந்தக் கேமிராக்கள் தொட்டாலே வினோதமான ஒலியை ஏற்படுத்தக்கூடியவை.

இந்த இரண்டு பட்டியல்களையும் பார்த்து ஆலோசித்த பிறகு, தானே போவதில் மிக அனுகூலமாக இருக்கும் அம்சமாக நினைத்தது அவன் அங்கே வருவான் என்று யாரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள் என்பது தான். யாருமே எதிர்பார்த்திருக்காத ஒன்றுக்குத் தயாராக வும் இருக்க மாட்டார்கள் அல்லவா?

அதே போல் ஆபத்தான அம்சங்களிலும் அவன் முதல் அம்சம் மட்டுமே நடக்க வாய்ப்பிருப்பதாக நினைத்தான். அவனை அறிந்தவர்கள் அதிகம் உள்ள நகருக்கு அவன் செல்கிறான். துப்பறியும் நிபுணர்கள், அவர்களுக்குத் துப்பு சொல்பவர்கள் நிறைய இருக்கிறார்கள். இவர்களில் யாரா வது ஒருவர் அவன் வந்திருப்பதைக் கண்டுபிடித்து விட் டால் ஆபத்து அதிகபட்சம் தான்.

மற்றவற்றைப் பற்றி அவன் பெரிதாகக் கவலைப்பட வில்லை. காரணம் அவன் ஆபிசின் உள்ளே செல்ல உத் தேசித்திருக்கும் நேரம் இரவு மணி ஒன்றிலிருந்து மூன் றுக்குள். அந்த நேரத்தில் சம்பத் ஏன் பூட்டப்பட்டிருக்கும்

தன் ஆபிசைக் கண்காணிக்கப் போகிறான். அந்த நேரத்தில் அவன் விழித்திருப்பதே அதிசயம் தான். விழித்திருந்தாலும் அந்த நடுநிசி நேரத்தில் ஆபிசில் நடப்பதைக் கண்காணிக்க வாய்ப்பே இல்லை.

இதை எல்லாம் யோசித்துப் பார்த்த வசந்த் தானே செல்வ தென்று உடனே முடிவு செய்தான். இப்போதைய தோற்றத் தோடு அவன் போக விரும்பவில்லை. ஒரு வேலை யார் பார் வையிலாவது சிக்கிப் பிரச்சினை எதுவுமில்லாமல் தப்பித்து வந்தாலும் கூட இந்தத் தோற்றத்திலேயே தேட ஆரம்பித்து விடுவார்கள். பின் இந்தத் தோற்றத்திலேயே இங்கிருப்பது ஆபத்தாகப் போய் விடும். தோற்றத்தை மாற்றினால் மாற் றிய இரண்டாவது வேஷத்தோடு இங்கிருக்க முடியாது. மறு படி இடம் மாற வேண்டியிருக்கும். அதனால் தோற்றத்தை எப்படி மாற்றுவது என்று யோசித்துக் கடைசியில் தொப் பையோடு இருக்கும் வட இந்திய சேட் தோற்றத்திற்கு மாற முடிவு செய்தான். தலையில் ஒரு தொப்பியும், உடை பைஜாமா குர்த்தாவும், வாயெல்லாம் பீடாவுமாகப் போனால் அவனை யாரும் அடையாளம் கண்டுபிடிப்பது கஷ்டம்.

அடுத்தது பயணத் திட்டம். மடிக்கேரியிலிருந்து பஸ் மூலம் பெங்களூர் சென்று, பெங்களூரில் இருந்து இருந்து விமா னத்தில் சென்னை செல்வது தான் குறைந்த நேரத்தில்

சென்னை சேர முடிந்த வழி. ஆனால் விமானத்தில் பயணம் செய்தால் பரிசோதனையில் கண்டிப்பாகப் பிடிபட்டுவிட வேண்டியிருக்கும். வயிற்றைச் சுற்றி அவன் சுற்றும் துணிகள் கண்டிப்பாகத் தெரிந்து விடும். அதனால் அவன் அதைத் தவிர்க்க முடிவு செய்தான். மடிக்கேரியிலிருந்து பஸ்ஸில் மைசூருக்கும், மைசூரிலிருந்து ரயிலில் சென்னைக்கும் செல்வது என்று தீர்மானித்தான்.

வீட்டுக்காரரிடம் ஊருக்குப் போய் மூன்று நாட்களுக்குள் திரும்புவதாகச் சொல்லிக் கொண்டு கிளம்பிய வசந்த் மடிக் கேரியில் குல்லா, பைஜாமா குர்த்தா, வயிற்றுப் பகுதிக்கு சில தடிமனான துணிகள் எல்லாம் வாங்கிக் கொண்டு ஆள்நடமாட்டம் இல்லாத ஒரு பகுதியில் அவற்றைப் போட் டுக் கொண்டு வடநாட்டுச் சேட்டாக மாறி, மைசூர் செல்லும் பஸ் ஏறினான்.

[redacted]

# 20

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து இறங்கிய போதே வசந்த் உடைகளில் மட்டுமல்லாமல் நடை, பாவனையிலும் அசல் வடநாட்டு சேட்டாக மாறியிருந்தான். அவன் வாய் பீடாவை அசை போட்டுக் கொண்டிருந்தது. நடக்கும் போது காலியாக இருந்த தண்டவாளத்தில் உமிழ்நீரை உமிழ்ந்தான்.

பக்கத்தில் நடந்து கொண்டிருந்த ஒரு இளைஞன் அருகில் இருந்த பெரியவரிடம் சொன்னது காதில் விழுந்தது. “எத்

[redacted]

தனை தான் ஸ்வச் பாரத்ன்னு விளம்பரம் பண்ணாலும் இவனுக மாற மாட்டானுக”

ஆனால் வசந்த் அதைப் பொருட்படுத்தாமல் சற்று காலை இழுத்து இழுத்து சாவகாசமாக நடந்தான். வெளியே வந்த வுடன் ஆட்டோகாரனிடம் ஹிந்தி தமிழ் கலந்து பேரம் பேசி ஆட்டோ ஏறி லாட்ஜுக்கு மதியம் மூன்று மணிக்குப் போய்ச் சேர்ந்தான். அந்த லாட்ஜ் சம்பத்தின் ஆபிசுக்கு மிக அருகில் இருந்தது. நடந்தால் மூன்று நிமிட தூரம் தான்.

அது பழைய காலத்து லாட்ஜ். இன்னமும் கம்ப்யூட்டர் எல் லாம் வந்து சேரவில்லை. லெட்ஜரில் தான் எல்லா விவரங் களையும் ரிசப்ஷனில் பெரியவர் எழுதிக் கொண்டார். எத் தனை நாளைக்கு வேண்டும் என்று பெரியவர் கேட்ட போது “ராத்திரி போரான். ஏக் பஜே.” என்று சொன்ன வசந்த் ஒன்று என்று ஒரு விரலைக் காட்டினான். பின் அவர் நீட்டிய லெட் ஜரில் மாவீர் ஜெயின் என்று நிறுத்தி நிதானமாய் எழுதிக் கையெழுத்துப் போட்டு சாவி வாங்கிக் கொண்டான்.

பெரியவர் ”ரூம் பாய் ரூம் பாய்” என்று இரண்டு முறை கத்தி னார். யாரும் வரவில்லை. வசந்த் “கொய் பாத் நஹீ.....” என்று ஹிந்தியில் சொல்லி அந்தப் பெரியவர் முழித்த போது வசந்த்

‘பரவாயில்லை’ என்று சைகையில் சொல்ல, பெரியவரும் நிம்மதியாகி, அறை கீழ் தளத்திலேயே கடைசியில் இருக்கிறது என்று சைகை காட்டினார். வசந்த் சாவகாசமாக அவர் காட்டிய இடம் நோக்கி காலை இழுத்து இழுத்து நடந்து போனான்.

அறை பழைய காலப் பாணியிலேயே இருந்தது. ஆனால் சுத்தமாகவும், விசாலமாகவும் இருந்தது. வசந்த் படுக்கையில் களைப்புடன் விழுந்தான். சில நிமிடங்களில் உறங்கியும் போனான்.

சுந்தரம் தன் மகனைப் பார்க்க வந்திருந்தார். அவன் கண்கள் சிவந்து, உடம்பு மெலிந்து, தலைமுடியெல்லாம் கலைந்து பைத்தியக்காரனைப் போல் வீட்டு ஹால் சோபாவில் சாய்ந்து படுத்திருந்தான். அவர் சம்பாதித்துக் கொடுத்திருந்த அத்தனை கோடிகளையும் அவன் ஏமாந்து தாரை வார்த்திருந்ததில் அவருக்கு அவன் மேல் நிறைய கோபம் இருந்தது. ஆனால் இந்தக் கோலத்தில் மகனைப் பார்க்க நேர்ந்த போது அந்தக் கோபம் கரைந்து போனது.

தந்தையைப் பார்த்தவுடன் சம்பத் எழுந்து உட்கார்ந்தான். அவர் கேட்டார்,. "அவனைப் பத்தியோ அவன் காதலியைப் பத்தியோ எதாவது தகவல் இருக்கா?"

"இல்லை. அந்தப் பொண்ணைப் பத்தின தகவல்களை சீக்கிரமே கண்டுபிடிச்சு சொல்லிடறோம்னு ஒருத்தன் சொல்லிருக்கான்.... உங்க பழைய அதிகாரத்த பயன்படுத்தி போலீஸ் சிபிஐன்னு உதவி கேட்க முடியாதா?"

சுந்தரம் வறண்ட சிரிப்பு சிரித்தார். "பதவி இல்லாதப்ப யாருக்கும் எந்த மதிப்பும் கிடையாது. ஏதாவது ரகசி யமா தகவல் தர்றதுன்னா ஒன்னு ரெண்டு பேர் தருவான். நாம நாளைக்கு ஆட்சிக்கு வந்தா கவனிச்சுக்குவோம்னு நினைப்பான். மத்தபடி யாரும் யாருக்கும் உதவி பண்ண மாட்டானுக. இது தான் உலகம்..."

சம்பத் சோகமாகக் கண்ணை மூடிக் கொண்டான். சுந்தரம் கேட்டார். "எப்படி நீ இப்படி அவன் கிட்ட ஏமாந்தே? உனக்கு அவன் மேல கொஞ்சம் கூடச் சந்தேகமே வரலையா?"

சம்பத் பரிதாபமாகச் சொன்னான். "இதுக்கும் முன்னாடி என் கூடக் கூட்டிகிட்டு போறப்பவும் எல்லா வேலையும் கச்

[redacted]

சிதமா பண்ணுவான். எதையுமே நான் பாக்க வேண்டியே இருக்காது.... அங்கேயும் சரி, இங்கேயும் சரி எந்தக் கையா டலும் அவன் பண்ணல. வேலைல கூட மத்தவங்க நான் இருக்கறப்ப ஒரு மாதிரி, இல்லாதப்ப ஒரு மாதிரி வேலை பாப்பானுக. அதை நான் இங்கிருந்தே மொபைல்ல பாத் திருக்கேன். இவன் ஒருத்தன் மட்டும் நான் இருந்தாலும் இல்லாட்டியும் ஒழுங்கா வேலை செய்வான். அப்படிப்பட்ட வன் அதிகபட்சமா பயணம் போக்குவரத்து இதுல எல்லாம் கொஞ்சம் பணம் அடிச்சாலும் அடிப்பான்னு எதிர்பார்த் தேன். மீறி மீறிப் போனா ஒன்னு ரெண்டு லட்சம் அடிக்க முடியும் அதுக்கும் மேல ஒன்னும் பண்ண முடியாதுன்னு நினைச்சேன்...."

வசந்தை நினைக்க நினைக்க அவனுக்கு இரத்தக் கொதிப்பு வருவது போல இருந்தது. சில வினாடிகள் கண்ணை மூடி இருந்துவிட்டு சம்பத் தொடர்ந்தான். "இந் தத் தடவை கூட நான் சொன்ன மாதிரி தான் எல்லா டாக்கு மென்ஸும் தயார் பண்ணிட்டுப் போனான். நான், ஆடிட்டர், வக்கீல் மூணு பேரும் ஓ.கே சொன்னப்பறம் தான் போனான். அங்கே போய் செய்ய வேண்டியதைச் செஞ்சு கையெழுத்து வாங்கறவங்க கிட்ட வாங்கி அதை ஸ்கேன் பண்ணிக் கூட அனுப்பினான். கடைசியா யார் கிட்ட போகணுமோ அவங்க நமக்கு வேணும்கிறப்ப திருப்பித் தர்றதுக்கு வேண்டிய பேப்

பர்ஸ்ல கூட அவங்க கையெழுத்து வாங்கி ஸ்கேன் பண்ணி அனுப்பிச்சான். அந்தப் பேப்பர்ஸோட வேற பேப்பர்ஸ்லயும் கையெழுத்து வாங்கி உடனடியா சொத்தையே கைமாத்து வான்னு நான் நினைச்சே பாக்கல.... கையெழுத்து போட்ட வங்களும் பினாமிகள்ங்கறதால நீட்டின இடத்துல கையெ முத்துப் போட்டாங்களே ஒழிய யார்கிட்டே இருந்து வந்தி ருக்கு, யாருக்குப் போகுதுன்னு எல்லாம் பார்க்கப் போகல. அது இப்ப பல கை மாறியிருக்கு போல தெரியுது... அதை ட்ரேஸ் பண்ண முடியாதுன்னு சொல்றாங்க. அந்த அளவுல பக்காவா திட்டம் போட்டு ஒவ்வொரு சொத்துலயும் பண்ணி யிருக்கான். அந்தத் திருட்டு நாயி.."

சுந்தரம் சிறிது யோசித்து விட்டுக் கேட்டார். "நமக்கு ஸ்கேன் பண்ணி அனுப்பிச்ச அந்தக் கடைசி பர்வர்த்தனைகளோட ஒரிஜினல் இப்ப நம்ம கைல இருக்கா?"

சம்பத் பரிதாபமாகச் சொன்னான். "இல்லையே. அவன் கைல தான் இருக்கு. அவன் அதுக்கப்பறம் தான் நம்ம கிட்ட வரவேயில்லையே. வெளிநாட்டுல இருந்து வந்தவு டனே அவன் வீட்டு முன்னாடி சிஐடிகள் காத்துகிட்டிருக்க றதா கதை விட்டான். அவன் அந்த டாக்குமெண்ட்ஸோட மாட்டிகிட்டா நமக்குப் பிரச்சனன்னு நானும் சரி எங்கயாவது தப்பிச்சுட்டு போயிடு, அப்பறம் பாக்கலாம்னு விட்டுட்டேன்.

[redacted]

எல்லாமே முடிஞ்சு போச்சு. ஸ்கேன் காபி நம்ம கிட்டே இருக்கு. ஒரிஜனல் பின்ன நிதானமா கைக்கு வந்தாலும் தப்பில்லைன்னு விட்டுட்டேன்...”

சுந்தரம் பெருமூச்சு விட்டார். இப்படி மொத்தமாகக் கொள் ளையடிக்க அசாத்திய தைரியமும், மூளையும் வேண்டும். ஒரு தனிமனிதன் இப்படிச் செய்வான், செய்ய முடியும் என்ற எண்ணமே அவரையும் அசத்தியது. இத்தனைக்கும் அவர் பழுத்த அரசியல்வாதி. பலதரப்பட்ட மனிதர்களை அவர் பார்த்திருக்கிறார். ஆனால் இந்த வசந்தைப் போல் ஒருவ னைப் பார்க்க நேர்வது தன்னுடைய பெரிய துரதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டார்.

**வ**சந்த் இரவு ஒரு மணி ஆனவுடன் லாட்ஜிலிருந்து புறப்பட் டான். தெருவில் வாகனங்கள் ஒன்றிரண்டு போய்க் கொண் டிருந்தனவே ஒழிய ஆட்கள் யாரும் இருக்கவில்லை. வசந்த் சம்பத்தின் ஆபிசை அடைவதற்குச் சில அடிகள் முன்னதா கவே தன்னிடமிருந்த முகமூடி ஒன்றைப் போட்டுக் கொண் டான். அது பிள்ளைகள் பயன்படுத்தும் விளையாட்டு முக மூடி தான். . ஆனால் அதில் ஆள் அடையாளம் தெரிய வாய்ப்பில்லை. வேஷத்தில் வந்திருந்தாலும் அந்த வேஷம் கூட அந்தக் கேமிராவில் பதிய வேண்டாம் என்று நினைத்

தான். இரண்டு கைகளிலும் ரப்பர் உறைகளையும் போட்டுக் கொண்டான். கைரேகை பதிவாகி பிறகு தேவையில்லாத பிரச்சினை உருவாவதையும் அவன் விரும்பவில்லை. ஆபிசை அவன் நெருங்கிய போது, வெளி கேட்டைப் பூட்டி விட்டு காவலாளி உள்ளே உறங்கியிருந்தான். வசந்த் அமைதியாகத் தன்னிடமுள்ள சாவியால் பூட்டைத் திறந்து சத்தமில்லாமல் மெல்லக் கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான்.

# 21

உள்ளே நுழைந்த வசந்த் பழையபடி கேட்டை மூடி விட்டு உறங்கிக் கொண்டிருந்த காவலாளியைப் பார்த்தான். காவலாளி அருகில் அவனுடைய அலைபேசி இருந்தது. வசந்த் மெல்ல அதை எடுத்து ஸ்விட்ச் ஆஃப் செய்து விட்டான். யாராவது போன் செய்து இவன் எழுந்து போன் பேசி பின் விழிப்பில் இருந்தால் தேவையில்லாத பிரச்னை என்று வசந்த் நினைத்தான். இனி அந்தப் பிரச்னை இல்லை.

பின் அவன் மெல்ல ஆபிஸ் கதவைத் தன்னிடமிருக்கும் கள்ளச்சாவியால் திறந்து உள்ளே போனான்.

அந்தச் சமயத்தில் சம்பத் சரியாக உறக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தான். மனம் திரும்பத் திரும்ப பணத்தையே நினைத்தது. 'போனது 3400 கோடிகளுக்கு மேல்.... கஷ்டப்பட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்ததை மொத்தமாய் திருடிக் கொண்டு போய் விட்டான்.... என்ன வினயம்... என்ன நடிப்பு... எப்படி என்னை நம்ப வைத்துக் கவிழ்த்து விட்டான் திருட்டு நாய்.... இப்போ என்னை விட அவன் பல மடங்கு பணக்காரன்..... எவள் கூட ஜாலியா இருக்கானோ.... எந்த ஸ்டார் ஓட்டல்ல ராஜா மாதிரி இருக்கானோ.... எல்லாம் என்னோடது.... ஐயோ அப்பா கட்சி ஆட்சியில் இல்லையே.... ஆட்சியில் இல்லையே....'

மனம் இந்த எண்ண ஓட்டத்தில் திரும்பத் திரும்ப புழுங்குவது லட்சம் தடவைகளுக்கு மேலாகி விட்டது. மறக்க முடியவில்லை. போதை கூட அந்தக் கவலையைப் போக்க முடியவில்லை. போதையை மீறிக் கவலை வாட்டி எடுக்கிறது. 'எல்லோரும் கவலைப்படாதே என்று அறிவுரைகள் சொல்கிறார்கள். அத்தனை கோடிகளைத் தொலைத்து விட்டால் எவன் நிம்மதியாக இருக்க முடியும்?'

ஏதோ வாட்ஸப் மெசேஜ் வந்த சத்தம் கேட்டு இந்த நேரத்தில் கூட என்னைப் போலவே தூங்க முடியாமல் இருந்து

[redacted]

வாட்சப் அனுப்புபவன் யார் என்று அலைபேசியைத் திறந்து பார்த்தான். அமெரிக்காவில் இருக்கும் நண்பன் ஒருவன். அவனுக்கு இப்போது காலை நேரம். ஏதோ பொன் மொழி அனுப்பி இருந்தான். எரிச்சலோடு பின்னுக்கு வந்து எதையோ அழுத்தியதில் அவன் ஆபிஸ் பல கோணங் களில் தெரிய ஆரம்பித்தது. அதுவும் வேதனைப்படுத்தி யது. எல்லாத் திட்டத்தையும் அந்தத் திருட்டு நாய் அங்கே உட்கார்ந்து தானே தீட்டியிருக்கிறான். அவன் கோட்டை யிலேயே உட்கார்ந்து அவனைப் பக்கத்திலேயே வைத் துக் கொண்டு அசராமல் காய் நகர்த்தி இருக்கிறான் என்று எண்ணி மறுபடியும் மனம் புழுங்கியபடி பின்னுக்குப் போக நினைத்த போது தான் அவன் ஆபிஸ் அறையில் முகமூடி போட்ட உருவம் பீரோவைத் திறப்பதைப் பார்த்தான்.

முதலில் போதையின் விளைவு தான் இது என்று தோன் றியது. அவன் ஆபிசுக்கு யார் வரப் போகிறார்கள்? அங்கே திருட என்ன இருக்கிறது? கண்களை நன்றாகக் கசக்கிக் கொண்டு பார்த்தான். போதை அல்ல, கற்பனையும் அல்ல என்பது தெரிந்தது. அதிர்ச்சியுடன் பார்த்தான்.

அந்த உருவம் சாவகாசமாக பீரோவில் அதையோ தேடிக் கொண்டிருந்தது. சம்பத் அதிர்ச்சியிலிருந்து மீண்டு முழுப் போதையும் பறந்தவனாக இதயம் மாரத்தான் ஓட அவச

[redacted]

ரமாய் ஆபிஸ் காவலாளிக்குப் போன் செய்தான். “நீங்கள் அழைத்த எண் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டுள்ளது” என்று அலைபேசி தெரிவித்தது.

‘காவலாளியைக் கொன்று விட்டுத் தான் உள்ளே போயி ருக்கிறானா, இல்லை அந்த நாயும் தண்ணியடித்து விட்டு, போனை ஸ்விட்ச் ஆஃப் செய்துவிட்டுப் படுத்துக் கிடக்கி றதா’ என்பது தெரியவில்லை. சம்பத்துக்குக் கைகால்கள் நடுங்க ஆரம்பித்து விட்டன. என்ன செய்வது என்று யோசித் தான். மூளை அவசரத்திற்கு வேலை செய்ய மறுத்தது. மான் சியைக் கூப்பிடலாமா என்று நினைத்தான். அவள் அறையி லிருந்து சின்னதாய்க் குறட்டைச் சத்தம் கேட்டது. அழைக்க வாய் திறந்தான். சத்தம் வரவில்லை.

எதையும் வெளியாள் திருடிக் கொண்டு போய் விற்றுப் பணம் செய்ய முடிந்த விலையுயர்ந்த பொருள் அந்த ஆபி சில் இல்லை. இந்த முட்டாள் அது தெரியாமல் வந்திருக் கிறானா? அது சரி அந்தப் பீரோவை எப்படித் திறந்தான். சாவியை நான் அங்கே விட்டுவிட்டு வரவில்லையே....

உடனே ஆபிசுக்கே போன் செய்தான். ஆபிஸ் மணி அடித் தது. ’மொபைல் போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணி அந்தக்

காவலாளி படுத்திருந்தால் இந்தச் சத்தத்திற்கு எழுந்திருப் பான்...'

**வ**சந்த் ஒரு கணம் திடுக்கிட்டான். இந்த நேரத்தில் யார் இங்கே போன் செய்வது? என்று எண்ணியவனாக வேகமாய் வந்து அடிக்கும் போனைப் பார்த்தான். பாஸ் என்று ஆங் கில எழுத்துக்கள் மின்னின. வசந்த் அதிர்ந்தான். அப்படியா னால் சம்பத் பார்த்து விட்டான்... உடனடியாக அந்த போன் ரிசீவரை எடுத்துக் கீழே வைத்து விட்டு வசந்த் மறுபடி சம் பத் அறைக்கு ஓடினான். அவசர அவசரமாகத் தேடினான். டாக்குமெண்ட் எப்போதும் இருக்கும் கடைசி அலமாரியில் இல்லை.

வசந்த் பரபரப்புடன் யோசித்தான். அப்போது தான் அவ னுக்கு நினைவுக்கு வந்தது. அவனும் பாஸ்கரும் வெளி நாடு போன அன்று அதிகாரிகள் சோதனைக்கு வருகி றார்கள் என்று அதற்கு முன் தினமே சம்பத்துக்குத் தக வலும் வந்து எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாய் எடுத்து அவன் நண்பன் ஒருவன் வீட்டுக்கு அப்புறப்படுத்தி விட் டது நினைவுக்கு வந்தது. அப்போது இந்த டாக்குமெண்டும் போயிருக்கும். எண்ணும் போதே வசந்துக்குப் பகீரென்றது.

[redacted]

இத்தனை ஆபத்தை எதிர்கொண்டு இங்கே வந்திருப்பதே வீண் தானா...

ஆனால் எதையும் திரும்பக் கொண்டு வந்து விடாமல் சம் பத் இருக்க மாட்டான். ஒளித்து வைக்கக் கொடுத்ததை அந்த நண்பனிடமே விட்டு வைக்கும் அளவு சம்பத் அலட் சியப் பேர்வழி அல்ல. சோதனைகள் எல்லாம் முடிந்து அவர் கள் போய் இனி வர மாட்டார்கள் என்று உறுதியான பிறகு திரும்பக் கண்டிப்பாக எடுத்த இடத்திலேயே கொண்டு வந்து வைக்கக் கூடியவன் அவன். அவன் சுபாவம் வசந் துக்குத் தெரியும்.

அவசரமாக யோசித்த போது ஒரு ஸ்பைரல் பைண்டிக் செய்த பருமனான ஒரு டாக்குமெண்டோடு தான் அவன் தேடும் டாக்குமெண்டும் இருந்தது நினைவுக்கு வந்தது. அது எங்கே இருக்கிறது என்று பீரோவில் தேடினான். அது பீரோவில் மேல் அலமாரியில் ஒரு பக்கத்தில் ஒரு கட் டோடு தெரிந்தது. அவசரமாக அதனுடன் இருக்கும் ஒட்டு மொத்த டாக்குமெண்ட்களையும் அவன் எடுத்துத் தேடி னான். அதிர்ஷ்டவசமாக அதில் அவனுக்கு வேண்டிய டாக் குமெண்ட் கிடைத்தது. வசந்த் அதை எடுத்துக் கொண்டு ஓடினான்....

[redacted]

அப்போது தான் சம்பத்துக்கு அது வசந்தாக இருக்கும் என்ற சந்தேகம் வந்தது. உடனே அவன் அடிவயிற்றிலிருந்து கோரமாய் அலறிய அலறல் அவன் குடியிருக்கும் தெரு வெங்கும் எதிரொலித்தது. மான்சி அலறியடித்துக் கொண்டு ஓடி வந்தாள். “என்ன ஆச்சு?”

சம்பத் இதயம் வெடிப்பது போல் உணர்ந்தான். அவளி டம் அவனால் அதிர்ச்சியிலும் ஆத்திரத்திலும் பேச முடி யவில்லை. அவன் தன் அலைபேசியில் தெரியும் ஆபிஸ் காட்சியை அவளுக்குக் காட்டினான். யாரோ ஒரு முகமூடித் திருடன் ஒரு டாக்குமெண்டோடு ஓடுவது தெரிந்தது

அவள் “போலீசுக்குப் போன் செய்யட்டுமா?” என்று கேட்டு அவசர அவசரமாக அவளது அலைபேசியை எடுக்க அவன் தடுத்தான். தடுத்து விட்டு அவன் தன் அடியாட்க ளின் தலைவனுக்குப் போன் செய்து “டேய் அந்த வசந்த் நம்ம ஆபிஸ்ல இருந்து எதையோ எடுத்துட்டு ஓடறாண்டா போய்ப் பிடிங்கடா.. ஓடுங்க,,,,” என்று கத்தினான்.

அடியாட்கள் தலைவன் இரவு நன்றாகக் குடித்து விட்டு அசந்து தூங்கும் தன் ஆட்களை வேகமாக எழுப்ப ஆரம் பித்தான்..

அங்கே மான்சி கணவனிடம் கேட்டாள். “ஏன் போலீஸுக்குப் போன் பண்ண வேண்டாம்னு சொன்னீங்க. அவன் வசந்துன்னு வேற சொல்றீங்க... உங்க ஆளுகளும் போகட்டும்.... போலீஸும் போகட்டும். யார் கைல அவன் மாட்டினாலும் நல்லது தானே?”

சம்பத் சொன்னான். “அத வெச்சு போலீஸ் உள்ளார வந்து அந்தப் பீரோல இருக்கற டாக்குமெண்ட்ஸ எல்லாம் பாத்தா நமக்கு தாண்டி பிரச்சன. முதல்லயே ஆளுங்கட்சிக்காரனுக நமக்கு எதிரா எதாவது கிடைக்காதான்னு காத்துகிட்டிருக்காங்க....”

சம்பத் ஏதோ வெறி வந்தவன் போல சகல பலத்தையும் குவித்து எழுந்தான். அவனும் ஆபிசுக்குக் கிளம்பினான். ஆபிஸ் இருபத்தைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றது. ஆனால் அவன் அடியாட்கள் பத்து கிலோமீட்டர் தூரத்தில் தான் இருக்கிறார்கள். இந்த தடவை அவர்கள் கண்டிப்பாக அவனைப் பிடித்து விடுவார்கள்.

## 22

வசந்த் வெளியே கேட் வரைக்கும் ஓடி வந்தவன் கேட்டை கவனமாகச் சாத்தி விட்டு தெருவில் வேகமாக நடக்க ஆரம்பித்தான். தெருவில் ஓடுவது, யாராவது பார்க்க நேர்ந்தால் சந்தேகப்படக் காரணமாகி விடும். ஆனால் தெருவில் யாரும் இருக்கவில்லை. நாலைந்து அடி வைத்த பின், ஆபிசின் வெளிக் கண்காணிப்பு கேமிராவின் எல்லையைத் தாண்டியவுடன் தன் முகமூடி, கை உறைகள், டாக்குமெண்ட் மூன்றையும் தன் கையில் இருக்கும் பையில் திணித்து ஜிப்பை மூடிக்கொண்டு விரைந்தான். தெருக்கோடியில் ஒரே ஒரு ஆட்டோ ரிக்ஷா இருந்தது. ஆட்டோக்கா

ரன் உள்ளே தூங்கிக் கொண்டு இருந்தான். அவனை எழுப்பி “ஓட்டல் வெண்ணிலா போரான்” என்றான்.

“இருநூறு ரூபா ஆவும் சார்” என்று தூக்கக்கலக்கத்தில் டிரைவர் சொன்னான்.

வசந்த் “தரான்” என்று சொல்லிக் கொண்டே ஏற ஆட்டோ கிளம்பியது.

வசந்த் சில நிமிடங்களில் இந்த இடம் ஆள்களால் நிரம் பப்போகிறது என்று நினைத்தான். சம்பத் இங்கே இருபது நிமிடங்களுக்கு முன் வர முடியாது என்றாலும் அவன் அடி யாட்கள் என்னேரமும் வரலாம். போலீஸுக்கு அவன் புகார் சொல்லியிருந்தால் அவர்களும் வரலாம்... துப்பறியும் ஆட்க ளும் வந்து சேரலாம்.....

சம்பத்துக்கு காரில் ஆபிஸ் நோக்கி வந்து கொண்டிருக்கும் போது தான் அந்தத் துப்பறியும் நிறுவன ஆளிடமும் சொல் லியிருக்கலாம் என்று தோன்றியது. அந்த முட்டைக்கண் ஆசாமி நல்ல புத்திசாலி. அவர் தான் வசந்த் முன்பிருந்த இடத்தைக் கண்டுபிடித்துச் சொன்னவர். அவர் ஒருவர்

[redacted]

தான் வசந்துக்கு ஒரு காதலி இருப்பதையும் கண்டுபிடித்துச் சொன்னவர். அவருக்குப் போன் செய்து தகவலைச் சொன்னார்.

தூக்கக் கலக்கத்தில் ஹலோ என்று அவர் ஆரம்பத்தில் சொல்லியிருந்தாலும் சம்பத் சொன்ன விஷயத்தைக் கேட்டு அவர் முழு சுறுசுறுப்படைந்தார். “நானும் இப்போதே வருகிறேன்” என்றார்.

ஆட்டோ சாதாரண வேகத்திலேயே போனது. வசந்த் இரண்டு முறை சீக்கிரம் போப்பா என்று சொல்ல வாயெடுத்துப் பின்னால் மௌனமானான். சீக்கிரம் என்று ரயிலுக்கும் பஸ்ஸுக்கும் போகிறவர்கள் சொன்னால் பெரிய சந்தேகம் வராது. ஆனால் ஓட்டலுக்குப் போகிறவன் சொன்னால் அந்த ஆட்டோக்காரனுக்கு அவனை அதிகம் கவனிக்கத் தோன்றலாம். அதனால் பொறுமை காத்தான். ஆட்டோ ஓட்டல் வெண்ணிலாவை அடைந்தது. எடுத்துக் கையில் தயாராக வைத்திருந்த இருநூறு ரூபாயை அந்த ஆட்டோக்காரன் கையில் திணித்து விட்டு கீழே இறங்கினான்.

ஆட்டோக்காரன் பார்த்துக் கொண்டிருக்கையில் ஓட்டலின் முதல் பெரிய கேட்டின் வழியாக வசந்த் உள்ளே நுழைந் தான். முன்னால் யாரும் இல்லை. கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் கம்ப்யூட்டரில் ஏதோ வேலை பார்த்துக் கொண் டிருந்த ரிசப்ஷன் பையன் தெரிந்தான். ஆட்டோ போகும் சத்தம் கேட்டவுடன் வசந்த் இன்னொரு கேட் வழியாக வெளியே வந்தான்.

அப்போது அங்கு வந்து நின்ற ஒரு டாக்சியில் இருந்து ஒரு வயதான பெரியவரும், அவர் மனைவியும் இறங்கினார்கள். அவர்கள் இறங்கியவுடன் டாக்சி டிரைவரிடம் வசந்த் கேட் டான். “சென்ட்ரல் போகணும். வர்றியாப்பா”

“மீட்டருக்கு மேல நூறு ரூபா போட்டுக்குடுப்பா. நைட் டைம்” என்றான்.

வசந்த் சரியென்று ஏறி உட்கார்ந்தான். டாக்சி கிளம்பியது.

சம்பத்தின் ஆபிஸ் பகுதியில் அடியாட்கள் அங்குமிங்கும் பரபரத்துக் கொண்டிருந்தார்கள். காவலாளி எழுப்பப்பட்டு பரிதாபமாக விழித்துக் கொண்டிருந்தான். அடியாட்களின்

[redacted]

தலைவன் தெரு முனை ஆட்டோ ஸ்டேண்டிற்கு ஒரு ஆட்டோ வந்து நிற்பதைக் கவனித்து ஓடினான்.

“இங்கே யாராவது பைஜாமா குர்த்தா போட்டுட்டு தொப்பை இருக்கற ஆள் போறதையோ வர்றதையோ பார்த்தீ யாப்பா?”

”ஆமாம் சார். இப்ப தான் அந்த ஆள ஓட்டல் வெண்ணி லால வுட்டுட்டு வர்றேன்” என்று ஆட்டோக்காரன் சொல்ல அந்தச் சமயத்தில் தான் சம்பத்தும், துப்பறியும் நிபுணரும் தனித்தனிக் கார்களில் ஆபிஸ் வந்து சேர்ந்தார்கள். சம் பத் வந்து சேர்ந்ததைக் கவனித்த அடியாட்கள் தலைவன் தலைதெறிக்க ஓடி வந்தான்.

சம்பத் கேட்டைத் தாண்டி வந்ததும் காவலாளியை ஓங்கி அறைந்தான். “பாஸ்டர்ட். உனக்கு சம்பளம் குடுக்கறது நைட் இங்கே வந்து தூங்கறதுக்கா. அதுவும் போனை ஸ்விட்ச் ஆஃப் பண்ணிட்டு தூங்கறே” என்று ஆக்ரோஷ மாய் கத்த அந்தக் காவலாளி மிரண்டு போய் அடிபட்ட கன் னத்தில் கையைத் தடவியபடி நின்றான்.

ஓடி வந்த அடியாட்கள் தலைவன் ஆட்டோக்காரன் சொன் னதை சம்பத்திடம் சொன்னான். சம்பத் கத்தினான். “போங் கடா. அந்த ஓட்டலுக்குப் போய் அவனைப் புடிச்சு வெச்சு போன் பண்ணுங்கடா. நானும் வர்றேன்”

அவர்கள் இரண்டு மூன்று கார்களில் பறக்க துப்பறியும் நிபுணர் அமைதியாக நின்றிருந்தார். சம்பத் இந்த முட்டைக் கண்ணன் ஏன் இப்படி மரம் போல் நிற்கிறான் என்று மனதில் கேட்டுக் கொண்டு “அவன் சொன்னது உங்களுக்குக் கேட் கலையா. நீங்களும் போலாமே”

“ஒரே இடத்திற்கு எல்லாரும் போய் என்ன பிரயோஜனம்? உங்க சிசிடிவி கேமிரால பதிவானதைக் கொஞ்சம் பார்க்க ணும்” என்று அமைதியாகச் சொன்னார் முட்டைக்கண்ணர்.

சம்பத்துக்கு அந்த ஆளின் அமைதி, மனிதர் வேறு விதமாய் சிந்திக்கிறார் என்பதைப் புரிய வைத்தது. வேகமாக உள்ளே அழைத்துப் போய் அவருக்கு அந்தப் பதிவைக் காண்பித் தான். நிதானமாகப் பார்த்துக் கொண்ட அவர் வெளியே வந் தார். இதற்குள் அவருடைய ஆட்கள் நால்வர் நான்கு பைக் குகளில் வந்து சேர்ந்தார்கள்.

அவர்களிடம் அவர் விவரத்தைச் சொல்லி கோயம்பேடு பஸ் ஸ்டேண்ட் முதல் மற்ற பஸ் ஸ்டேண்டுகள் வரை ஒவ் வொருவரையும் ஒவ்வொரு இடத்துக்குப் போய் உடனடியா கப் பார்க்கச் சொன்னார். “அவன் எதாவது வெளியூர் பஸ் ஏறினால் எனக்கு உடனடியாய் தெரிவிக்கணும். வேகமா போங்க”

அவர்கள் வேகமாகப் பறந்தார்கள். முட்டைக்கண்ணர் தன் காரில் ஏறியபடி சொன்னார். “நான் சென்ட்ரல் போறேன்...”

திகைத்து நின்ற சம்பத்திடம் அவர் சொன்னார். “அவன் நிஜமாவே ஓட்டல் வெண்ணிலால தங்கப் போறவனா இருந்தா  இந்த ஏரியா ஸ்டேண்ட்ல இருக்கற ஆட்டோல ஏறியிருக்க மாட்டான். போயிட்டிருக்கிற வேற எதாவது ஆட் டோல ஏறியிருப்பான். இந்த ஏரியா ஆட்டோவ எல்லாம் நாம விசாரிப்போம்னு அவனுக்குத் தெரியாம இருக்காது. நம்ம கவனத்தைத் திருப்ப அவன் செய்திருக்கிற யுக்தி இது, அவ் வளவு தான்”

பின் தொடர்ந்து சொன்னார். “அவன் நிலைமைல நீங்க இருந்து பாருங்க. ஒன்னை திருட வந்தவங்க உங்க உயி ருக்கு ஆபத்து இருக்கற நிலைமைல என்ன பண்ணுவீங்க.

வந்த வேலை முடிஞ்சவுடன முதல்ல அந்த ஊரை விட்டுப் போகத் தான் பாப்பீங்க. இல்லியா? அதான் பஸ் ஸ்டேண்ட் ரயில்வே ஸ்டேஷன் போய்ப் பார்க்கறது தான் புத்திசாலித்தனம்."

அவர் காரும் வேகமாய் அங்கிருந்து கிளம்பியது.

**வ**சந்த் சென்ட்ரல் ரயில்நிலையம் நுழைந்தவுடனேயே உடனடியாக எந்த ரயில் கிளம்புகிறது என்று பார்த்துக் கொண்டான். அதில் தனக்கு வசதியான ஒரு ஸ்டேஷனில் இறங்கிக் கொள்ளத் தீர்மானித்து அவசரமாக ஓடி கவுண்டரில் டிக்கெட் வாங்க வரிசையில் நின்றான். வரிசையில் இருந்தது நான்கே பேர் என்றாலும் அது அவனுக்கு மிக நீண்ட வரிசையாகத் தெரிந்தது. மூன்றே நிமிடத்தில் முன்னால் இருந்தவர்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள். அவன் டிக்கெட் வாங்கிய பின் சில்லறைக்கு உள்ளே இருந்த ஆள் தேடும் போது "பரவாயில்லை" என்று சொல்லி விட்டு ஓடினான். ஐந்தாவது ப்ளாட்பாரத்தில் கிளம்பக் காத்திருந்த ரயிலில் ஜெனரல் கம்பார்ட்மெண்டில் அவன் ஏறிக் கொள்ளவும், முட்டைக்கண்ணர் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

[redacted]

ரயில் கிளம்பி விட்டது. கிளம்பும் ரயிலில் வெள்ளை உடைகள் அணிந்த மனிதன் ஏறுவது தான் தூரத்தில் தெரிந்தது. அவன் ஏறி கருப்புப் பையை உள்ளே இழுத்துக் கொண்டதும் தெரிந்தது. அது வசந்த் தான் என்று அவருக்கு உறுதியாகி விட்டது.

உடனடியாக அவர் அந்த ரயில் எங்கே போகிறது என்று விசாரித்தார். பின் அந்த ரயில் அடுத்த ஸ்டேஷனைச் சேர்வதற்குள் அங்கே போய்ச் சேரக் காரை மின்னல் வேகத்தில் ஓட்டினார்.

# 23

ரயிலேறிய வசந்த் மெல்ல ரகசியமாய் பாதி தலையை மட்டும் வெளியே விட்டு எட்டிப் பார்த் தான். முட்டைக்கண்ணர் ஒரு போர்ட்டரிடம் எதையோ கேட்டுக் கொண்டிருந்தார். அவர் அவனைப் பார்த்து விட்டார் என்பதில் அவனுக்குச் சந்தேகம் இல்லை. இதற்கு முன்பும் அவரை ஒரு முறை எங்கேயோ பார்த்திருக் கிறான்.... பழைய ஊரில் அந்தக் கம்பெனியில் வேலை பார்த் துக் கொண்டிருக்கையில்... அவர் சாதாரண ஆள் போலத் தான் அன்று தெரிந்தார். அவனை வேவு பார்க்க வந்தவர் போலத் தெரியவில்லை. அவன் கம்பெனிக்கு எதிர்ப்புறம் நீண்ட நாள் நண்பருடன் பேசுவது போல் யாரோ ஒருவனு டன் பேசிக் கொண்டிருந்தார். அதற்கு மறுநாள் அவனைத்

தேடி சம்பத்தின் அடியாட்கள் கூட்டம் வந்து விட்டது. இப்போதும் கூட ஓட்டல் வெண்ணிலா பக்கம் போகாமல் அவர் சென்ட்ரல் வந்திருப்பது அவர் புத்திசாலித்தனத்தைக் காட்டுகிறது என்று நினைத்துக் கொண்டான்.

நுழைந்தவுடனே சீட் தேடி அமராமல் டாய்லெட்டில் பையோடு வசந்த் உள்ளே நுழைந்தான். முதலில் கருப்புப் பையில் மேலே ஒட்டியிருந்த கருப்பு ஸ்டிக்கிங் காகிதத்தை மெல்லப் பிரித்தான். முழுவதும் பிரித்தெடுத்த பின் வெள்ளைப் பையாய் அது மாறியது. ஆனாலும் பையின் மேலே பசை லேசாகத் தெரிந்தது. அதைத் தண்ணீரில் நன்றாகத் துடைத்தான். இப்போது அது முன்பு கருப்புப் பையாக இருந்த அறிகுறியே இல்லை.

அடுத்ததாக பையிலிருந்து சிறிய தேங்காய் எண்ணெய் பாட்டிலை எடுத்து தலைக்குத் தேங்காய் எண்ணெய் தேய்த்துக் கொண்டான். எண்ணெய் வழியும் அளவு போட்டுக் கொண்டு முகத்தை நன்றாக சோப் போட்டுக் கழுவினான். பற்பசையால் அவன் பற்களையும் தேய்த்துக் கொண்டான். பீடாக் கறை முழுவதுமாகப் போய் விட்டது. பைஜாமா குர்த்தா கழற்றி விட்டு ஒரு நீல நிற சட்டையையும், பட்டு ஜரிகை இருந்த வேட்டியையும் அணிந்து கொண்டான். உ:ள்ளே இருந்து ஒரு கண்ணாடியும் எடுத்துப் போட்

டுக் கொண்டான். இப்போது உள்ளே பையில் காலி இடம் அதிகமாகியது. பையை உள்ளே ஒரு சுற்றுக் குறைக்க முடிந்தது. அதைச் செய்துவிட்டுப் பின் முகமூடி, கை உறை, குல்லாய் எல்லாம் பைஜாமா குர்த்தாவில் சுருட்டி எடுத்து வெளியே வந்து ஓடும் ரயிலில் இருந்து வெளியே வீசினான்.

சிறிது தூரம் சென்ற பின் ரயில் ஒரு சிக்னலில் நின்றது. வசந்த் உடனடியாக இறங்கிக் கொண்டு முன்னால் இருக்கும் ஜெனரல் கம்பார்ட்மெண்டுக்கு ஓடினான். அவன் ஏறிக் கொண்ட பிறகு ஒரு நிமிடம் கழித்து தான் ரயில் மறுபடி நகர ஆரம்பித்தது. ஏறியவன் பின் நிதானமாக வந்து மடியில் அந்த வெள்ளைப் பையை வைத்துக் கொண்டபடி ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டான். பையிலிருந்து மலையாளப் பத்திரிக்கை ஒன்றை எடுத்துக் கையில் பிரித்து வைத்துக் கொண்டான். எண்ணெய் தேய்த்து வாரிய தலை, வேஷ்டி, அரை மூக்கில் கண்ணாடி, கையில் இருக்கும் மலையாளப் பத்திரிக்கை எல்லாமாகச் சேர்ந்து அவனை ஒரு மலையாளியாகவே காட்டியது.

வேகமாக முட்டைக்கண்ணர் காரை ஓட்டினார். அவர் சகாக்கள் ஆங்காங்கே வந்து சேர்ந்து கொண்டனர். அவர் அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ”அந்த ரயிலில்

ஜெனரல் கம்பார்ட்மெண்ட்கள் முன்னால் இரண்டும், பின்
னால் இரண்டும் இருக்கின்றன, அவன் பின்னால் இருந்த
ஜெனரல் கம்பார்ட்மெண்டில் ஏறுவதைத் தான் நான் பார்த்
தேன். ஆனால் அவன் லேசுப்பட்டவன் அல்ல. ரயில் எங்
கேயாவது சிக்னலில் நின்றால் இறங்கி கம்பார்ட்மெண்ட்
மாறியும் உட்கார்ந்து கொள்வான். அதனால் நாம் அவன்
பின்னால் இருக்கும் ஜெனரல் கம்பார்ட்மெண்டிலேயே
இருப்பான் என்று நாம் நம்ப முடியாது. நான் பின்னால் இருக்
கும் ஜெனரல் கம்பார்ட்மெண்டில் ஏறிக் கொள்கிறேன், நீ
முன்னால் இருக்கும் ஜெனரல் கம்பார்ட்மெண்டில் ஏறிக்
கொள். நீங்கள் ரெண்டு பேரும் ஸ்லீப்பர் கோச்களில் ஆரம்
பத்திலும் கடைசியிலும் ஏறிக் கொள்ளுங்கள். ஏனென்றால்
ரிசர்வ் செய்யா விட்டாலும் அதில் ஏறி உலா வந்தாலும் வரு
வான் அவன். அப்படிச் செய்வது அவன் உத்தேசமானால்
முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் உங்களிடம் மாட்
டாமல் போக மாட்டான். கவனிக்கும் போது டாய்லெட்டில்
அவன் ஒளிந்து கொண்டிருக்கிறானா என்பதையும் பார்க்
காமல் விட்டு விடக்கூடாது. நீ ஒருவன் மட்டும் ப்ளாட்
பாரத்திலேயே நின்று கொள். ஏனென்றால் நாம் ரயிலில்
ஏறும் போது அவன் இறங்கி ஓடவும் செய்வான்.... அதற்கும்
வாய்ப்பு இருக்கிறது. நாம் ஏறிய பிறகு அடுத்த ஸ்டேஷன்
வர நாற்பது நிமிடம் இருக்கிறது. அதற்குள் நாம் அவனைக்
கண்டுபிடிக்க வேண்டும்...”

இப்படி ஒவ்வொருவரையும் சுட்டு விரலைக் காட்டிச் சொன்னபடி வேகமாகக் காரோட்டி வந்து, வசந்த் ஏறிய ரயில் அடுத்த ஸ்டேஷனை வந்தடைவதற்குள், முட்டைக்கண்ணர் அந்த ஸ்டேஷனை வந்தடைந்து விட்டார். அந்த ரயில் ஸ்டேஷனுக்குள் வந்து சேர்ந்த போது அவரும் அவருடைய நான்கு சகாக்களும் போர் வீர்ர்கள் போல் தயாராக நின்று கொண்டிருந்தனர். வசந்த் முட்டைக்கண்ணர் பின்னால் கைகட்டியபடி ப்ளாட்பாரத்தில் நின்று கொண்டிருப்பதை ஜன்னல் வழியாகப் பார்த்து 'மனிதர் எமகாதகர்' என்று நினைத்துக் கொண்டான். அவர் அவன் ஆரம்பத்தில் ஏறிய பெட்டியிலேயே ஏறினார். ஒவ்வொரு ஆளையும் கூர்மையாகப் பார்த்து வசந்த் அல்ல என்று திருப்தி அடையாமல் அவர் நகரவில்லை.

வசந்த் அமர்ந்திருந்த பெட்டியில் ஏறிய அவருடைய சகா சப்பை மூக்கு இளைஞன். அவன் வந்த போது வசந்த் தலைநிமிரவேயில்லை. வெள்ளைப் பையை மடியில் வைத்துக் கொண்டு அதன் மேல் மலையாளப் பத்திரிக்கையை வைத்து சுவாரசியமாகப் படித்து கொண்டிருப்பவன் போலக் காட்டிக் கொண்டான். சப்பை மூக்கன் கூர்மையாக எல்லாரையும் பார்த்துக் கொண்டே நடந்தான். அவன் இரண்டை மிக உன்னிப்பாகக் கவனித்தான். ஒன்று வெள்ளைப் பைஜாமா குர்த்தா, இரண்டாவது கருப்புப் பை.

[redacted]

இரண்டையுமே பார்த்துக் கொண்டு வந்தவன் ஒரு வெள்ளைப் பைஜாமா குர்த்தா ஆசாமி வசந்துக்கு எதிரே உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். அவனையே அவன் கூர்ந்து பார்க்க அவனும் என்ன வேண்டும் என்பது போல சப்பை மூக்கனைப் பார்த்தான். அவன் கண்டிப்பாக வசந்த் அல்ல என்று தெளிவான பின் சப்பை மூக்கன் நகர்ந்தான். நகர்வதற்கு முன் எண்ணெய் வழியும் தலையுடன் ஏதோ பத்திரிக்கையை வெள்ளைப் பை மீது வைத்துப் படிக்கும் மலையாளியை அவன் மேலோட்டமாய் பார்த்தபடி நகர்ந்தான்.

அடுத்த வரிசையில் முழுவதுமாய் கருப்புப் பர்தா துணியில் உடலை மறைத்து உட்கார்ந்திருந்த பெண் அவன் சந்தேகத்தைக் கிளப்பினாள். வசந்த் உள்ளே வந்து டாய்லெட்டில் இந்தக் கருப்புடைக்குள் புகுந்திருக்கும் வாய்ப்பு அதிகம் என்று நினைத்துக் கொண்டு அவளருகே வந்து கூர்ந்து பார்க்க அவள் அருகில் இருந்த இளைஞன் முறைத்தான்.

மெல்ல அங்கிருந்து நகர்ந்தாலும் அவனுக்குச் சந்தேகம் முழுவதுமாக அகன்று விடவில்லை. இன்னொரு இடத்தில் அமர்ந்திருந்த ஒரு தொப்பை ஆசாமி காலடியில் கருப்புப் பையும் வைத்திருந்ததால் அவரையும் கூர்ந்து பார்த்தான். கண்களை மூடி அமர்ந்திருந்த அந்த ஆள் வசந்துக்குச் சுத்த சம்பந்தமே இல்லாமல் இருந்தார். தலை பாதி வழுக்

கையாகவும் இருந்தது. வசந்த் தலைமுடி நல்ல அடர்த்தி
யாய் இருக்கும்.

திரும்பவும் வந்து அந்தப் பர்தா பெண் முன்னால் சந்தேகத்
துடன் அவன் நிற்க அருகில் உட்கார்ந்திருந்த இளைஞன்
எரித்து விடுவது போல் பார்த்தான். அவனிடம் பொறுமை
யாக சப்பைமூக்கன் விளக்கினான். "ஒரு திருடன் இங்கே
இருப்பதாய் எங்களுக்கு நம்பத் தகுந்த தகவல் கிடைத்தி
ருக்கிறது. அதனால் தான் சந்தேகத்தின் பேரில் பார்க்கி
றேன் தப்பாய் நினைக்காதீர்கள். தப்புவதற்கு அவன் ஒரு
பர்தாவுக்குள் ஒளிந்திருக்கலாம் என்று சந்தேகப்படுவது
தப்பில்லை அல்லவா?"

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அந்தப் பெண் பர்
தாவை மேலே உயர்த்தி அவனை ஒரு முறை பார்த்தாள்.
வெள்ளை வெளேர் என்றிருந்த அந்த இளம்பெண்ணைப்
பார்த்தவுடன் "நன்றி" என்று ஒரு அரை சல்யூட் அடித்து
விட்டு அவன் நகர்ந்தான். இரண்டாம் முறையும் அந்த எண்
ணெய் வழியும் மலையாளியைப் பார்த்து விட்டு எந்தச் சந்
தேகமும் வராமல் நகர்ந்தான்.

முட்டைக்கண்ணர் ஒரு முறை எல்லோரையும் பார்த்துச் சந்தேகம் தெளிந்து மீண்டும் ஒரு முறை கூர்மையாய் எல்லாரையும் பார்த்து வந்ததுடன் அவர் குனிந்து கருப்புப் பை எங்காவது வைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் இந்த முறை பார்த்தார். கருப்புப் பை உள்ளே தள்ளியபடி வைத்திருந்தால் யாருடையது என்று கேட்டு சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டார்.

தான் ஏறிய பெட்டியில் வசந்த் இல்லாத்தைக் கண்டு ஏதோ ஒரு சிக்னலில் ரயில் நின்று வசந்த் கண்டிப்பாக இடம் மாறியிருப்பான் என்று முட்டைக் கண்ணர் உறுதியாக நம்பினார். அவர் நினைக்க நினைக்க ரயில் ஒரு இடத்தில் நின்றது. இரு கதவுகள் வழியாகவும் அவர் வேகமாக எட்டிப் பார்த்தார். யாராவது இறங்கி ஓடுகிறார்களா என்று பார்த்தார். யாரும் ஓடவில்லை. முதலிலேயே இப்படி ஏதாவது சிக்னலில் ரயில் நிற்கும் போது அவன் இறங்கி ஓடியிருப்பானோ?

பின் தன் சகாக்களுக்குப் போன் செய்து நிலவரம் கேட்டார். அவர்களும் வசந்த் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். முன்பே சிக்னலில் ரயில் நிற்கும் போது அவன் இறங்கி ஓடித் தப்பித்திருக்க வேண்டும் என்ற அவரது சந்தேகம் வலுத்தது. அடுத்த ஸ்டேஷனில் அவர் சோர்வுடன் இறங்கிக் கொண்டார். சகாக்களும் இறங்கிக் கொண்டனர்.

# 24

சம்பத் முன்பை விட மோசமான மனநிலையில் இருந்தான். அவனை எவ்வளவு தரக்குறைவாகவும், சாமர்த்தியமில்லாதவனாகவும் நினைத்திருந்தால் வசந்த் திரும்பவும் அவ்வளவு தைரியமாக அவன் ஆபிஸ் வரை வந்து அவனுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு போயிருப்பான் என்று எண்ண எண்ண அவனுக்கு பெருங்கோபத்தில் அடிக்கடி உடல் நடுங்கியது. வந்து சாதித்தும் போயிருக்கிறானே என்ற நினைவு அடிக்கடி அவன் ரத்தத்தைக் கொதிக்க வைத்தது.

[redacted]

அவனுடைய அடியாட்கள் ஓட்டல் வெண்ணிலாவில் வசந்த் தங்கவில்லை என்று போன் செய்து தெரிவித்த போது அவன் பெரிதாகக் கவலைப்படவில்லை. முட்டைக்கண் ணர் ஓட்டல் வெண்ணிலாவுக்கு விரையாமல் இருக்கக் காரணத்தைச் சொன்னதில் இருந்தே அவன் கண்டிப்பாக வசந்த் அங்கே இருக்க வழியில்லை என்பதை உணர்ந்தி ருந்தான்.

ஆனால் அவன் முட்டைக்கண்ணர் இந்த முறை அவனைப் பிடித்துத் தருவார் என்று நம்பினான். ஆனால் அவரைத் தப்பு சொல்லவும் வழியில்லை. அவர் ஒருவர் தான் சரியாக வசந்த் நோக்கத்தைக் கண்டுபிடித்து அவன் அந்த ரயிலில் ஏறியதையும் கண்ணால் பார்த்தவர். வழியிலேயே சிக்னலில் ரயில் நிற்பதற்கும், அவன் அதைப் பயன்படுத்தித் தப்பியோ டுவதற்கும் அவர் தான் என்ன செய்வார்!

சம்பத் அவரிடம் புலம்பினான். “அவனுக்கு எங்கயோ சுழி மச்சம் இருக்கு சார். இல்லாம இப்படி எல்லாம் தப்பிச்சுப் போக முடியாது”

அவர் அதை மறுப்பது போல் தலையசைத்தார். “பெற்றவர் கள் செய்யும் பாவமும், புண்ணியம் பிள்ளைகளைச் சேரும்

என்று ஏன் பாட்டி அடிக்கடி சொல்வாள். அது அவனைப் பார்த்தால் தான் புரிகிறது. நான் அவனைப் பத்தி விசாரிக்கும் போது எல்லோருமே அவன் அப்பாவைத் தான் மிக நல்லவர், உபகாரி என்றெல்லாம் சொன்னார்கள். அவர் செய்த புண்ணியம் தான் அவனைக் காப்பாற்றி வருவதாக எனக்குத் தோணுது”

இந்த ஆள் உன் தந்தை பாவம் செய்தவர், அதனால் தான் உனக்கு நல்லது எதுவும் நடக்கவில்லை என்று சொல்ல வருகிறாரோ என்று சம்பத் சந்தேகித்தான். அவர் முகபாவனையிலிருந்து அவர் உத்தேசம் எதையும் அவனால் அறிய முடியவில்லை.

அவர் அவனுக்குத் தைரியம் சொன்னார். “இன்னும் இரண்டு மூன்று நாளில் அவன் காதலி படத்தை உங்களுக்கு வரைந்தே கொண்டு வந்து விடுகிறேன். அவளை வெச்சு அவனைப் பிடிச்சுடலாம் கவலைப்படாதீங்க...”

மூன்று நாள் என்பது இப்போதைய நிலைமையில் அவனுக்கு மூன்று யுகங்கள் மாதிரி என்பது அவருக்குத் தெரியவில்லை. அவர் போய் விட்டார். சம்பத் அவ்வப்போது ஏதேதோ பிதற்றிக் கொண்டே இருந்தான். அவனைப்

பார்த்துக் கொண்டே வீட்டில் இருந்தால் மான்சிக்கும் பைத்தியம் பிடித்து விடும் போல இருந்ததால் அவள் ஆபிசுக்குப் போய் விட்டாள்.

அங்கு போய் அவள் நிலாவிடம் நேற்று வசந்த் சம்பத்தின் ஆபிசுக்கு வந்து மறுபடியும் எதையோ திருடிக் கொண்டு போனதைச் சொன்ன போது நிலா நிஜமாகவே பேரதிர்ச்சி அடைந்து சிலை போல் நின்றாள். இந்த அளவு ஏன் அபாய வேலைகளில் அவன் ஈடுபடுகிறான் என்று அவள் மனம் பதைத்தது.

அவள் அதிர்ச்சியுடன் நின்ற விதத்தைப் பார்த்து மான்சி சிரித்தாள். "நீயும் நானும் அதிர்ச்சியாகிறோம். ஆனால் அவன் துணிச்சலாக நாம் எதிர்பார்க்காததை எல்லாம் செய்கிறான். ரெண்டு நிமிஷம் முன்னாடி அந்த டிடெக்டிவ் போயிருந்தா அவனைப் பிடிச்சிருக்கலாம். அவனுக்கு அதிர்ஷ்டம் நல்லா இருக்கு. தப்பிச்சுட்டான்..... சரி அவனை விடு. நீ எப்ப துபாய் போகிறாய்? எத்தனை நாள் இனி வருவாய்?"

"நாளைக்கு தான் வருவேன் மேடம். நாளானிக்குப் பேக்கிங் பண்ணனும். அதுக்கு அடுத்த நாள் கிளம்பறேன்"

“அப்படின்னா நாளைக்குப் பண்ணை வீட்டுக்குப் போய் ஓவியங்களையும், மத்ததயும் துடைச்சு வச்சுட்டு வந்துடு நிலா. மத்த வேலை எதுவும் பாக்கி இல்லையே”

“இல்லை மேடம். எல்லாம் முடிஞ்சுடுச்சு”

”தேங்க்ஸ் நிலா”

சம்பத்தின் நிலைமை வசந்த் மறுபடி வந்து போனதிலிருந்து மேலும் மோசமாயிருக்கிறது என்பதை மருமகள் மூலம் அறிந்த சுந்தரம் மகனிடம் போன் செய்து பேசினார். “ஓவரா துள்ளறவன் ஒரு நாள் அதல பாதாளத்துல விழுவான் சம் பத். அதனால மனசு உடைஞ்சுடாதே. அவனுக்கு அழியற காலம் வந்துடுச்சு. அதனால தான் இந்த ஆட்டம் ஆட றான்...”

“அந்த ஆட்டத்தைப் பார்த்துகிட்டு ஒன்னும் செய்ய முடியாத நிலைமையில நான் இருக்கேனேன்னு தான்ப்பா எனக்கு அவமானமா இருக்கு. சிங்கம் மாதிரி இருந்தேன். இப்ப சுண்டெலி ரேஞ்சுக்கு என்னை இறக்கிட்டானேப்பா...”

“அதெல்லாம் உன் கற்பனை. மான்சி சொன்னா அவனோட காதலியக் கண்டுபிடிச்சு மூணு நாள்ல சொல்றதா அந்த டிடெக்டிவ் சொல்லியிருக்கான்னு. பின்ன அவன் கூட வெளிநாடு போனானே அவன் ப்ரண்டு... அவனையும் கொஞ்சம் மிரட்டிக் கேளு. எதுவுமே எனக்குத் தெரியாதுன்னு அவன் சொல்றதை எனக்கென்னவோ நம்பக் கஷ்டமாயிருக்கு”

சம்பத் ஆபிசுக்குப் போனான். ஒவ்வொரு வேலைக்காரனும் அவனைப் பார்த்து உள்ளூரச் சிரிப்பது போல் அவன் உணர்ந்தான். அவர்கள் மனதில் எல்லாம் வசந்த் கதாநாயகனாகவும், முதலாளி கோமாளியாகவும் தோன்றிக் கொண்டிருக்கும் என்று தோன்றியது. முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு தனதறைக்குப் போன அவன் உடனே பாஸ்கரை வரவழைத்தான்.

பாஸ்கருக்கு ஆபிசுக்கு வந்த பிறகு தான் முந்தைய இரவு நடந்ததெல்லாம் தெரிந்தது உண்மையிலேயே அவனுக்குத் தன் நண்பன் ஆங்கிலப் பட கதாநாயகன் போலத் தான் தோன்றினான்.. சிங்கத்தின் குகை தேடி வந்தது போல வந்து வெற்றிகரமாகத் திரும்பியும் போய் விட்டானே என்று பெருமிதமாக இருந்தது. சம்பத் கோமாளி போலத் தான் தோன்றினான்.

[redacted]

‘இந்தப் பைத்தியக்காரனிடமிருந்து எனக்கு எப்ப விடுதலையோ’ என்று மனதிற்குள் நொந்தபடியே போனான். உட்கார சம்பத் கைகாட்ட, பாஸ்கர் மனதில் திட்டிக் கொண்டே உட்கார்ந்தான்.

சம்பத் கேட்டான். “உன் நண்பன் எங்கேன்னு தெரிஞ்சுதா?”

“இல்லை சார்” பாஸ்கர் மெல்லச் சொன்னான்.

“அவன் இங்கே நேத்து வந்திருந்தான். அதாவது தெரியுமா?”

“கேள்விப்பட்டேன் சார்”

”உன் கிட்டே போன்லயாவது பேசினானா?”

“இல்லை சார்”

”அவன் உன் நண்பன்னு சொல்றே. அவனும் வெளிநாட்டுக்கு யாரைக் கூட்டிட்டுப் போறேன்னு கேட்டா, நீ தான்

அவனுக்கு நம்பிக்கையானவன்னு சொல்லிட்டு கூட்டிப் போறான். அப்படியிருக்கறப்ப அவன் உன் தொடர்பிலேயே இல்லைன்னு நீ சொல்றத நம்பக் கஷ்டமாய் இருக்குதே”

‘நம்பாட்டி போடா மடையா’ என்று மனதில் ஆக்ரோஷமாய் திட்டி விட்டு வெளியே பாஸ்கர் பவ்யமாய் சொன்னான். “எப்ப அவன் உங்களை ஏமாத்தினான்னு தெரிஞ்சுதோ அப்பவே நான் அவனை நண்பனா நினைக்கறத விட்டுட் டேன் சார்”

“அப்படி இருந்திருந்தா நீ அவனைக் கண்டுபிடிச்சுக் கொடுக்க எங்களுக்கு உதவியிருக்கணுமே. அவனைக் கண்டுபிடிச்சுக் குடுக்கவும், துப்பு எதாவது சொல்லவும் நான் உனக்கு மூணு நாள் கெடு குடுத்திருந்தேன். அது முடிஞ்சு டுச்சு. சொல்லு அவன் எங்கே இருக்கான்?”

’ஊம்... அவன என் ஜோபுக்குள்ள வச்சிருக்கேன். எடுத் துத் தரவா?’ என்று மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டா லும் வெளியே வாய் விட்டுச் சொல்ல முடியாமல் பாஸ்கர் மௌனமாக இருந்தான்.

“அவனைக் கண்டுபிடிச்சுக் குடுக்க நீ இன்னைலருந்து எங்க ஆள்க கூட போகப் போறே. அப்படின்னா தான் நீயும் அவன் கூட கூட்டு இல்லைன்னு நம்புவேன். நீ உன் வீட்டுக்குப் போன் செஞ்சு ஆபிஸ் வேலயா வெளியூர் போறேன். வர கொஞ்சம் நாளாகும்னு சொல்லு”

‘ஓ. இவனுக்குச் சுத்தமா கழண்டுகுச்சு போல இருக்கு. மெண்டல் மாதிரி என்னென்னவோ சொல்றான்.’ என்று மனதுக்குள் எண்ணிய பாஸ்கர் இதற்கெல்லாம் என்ன பதில் சொல்ல முடியும் என்று மௌனமாக இருந்தான்.

சம்பத் அவனை முறைத்தான். “இப்பவே போன் பண்ணி வீட்டுக்குச் சொல்லு”

மறுத்தால் அவன் மேலே பாய்ந்து கடித்து வைத்து விடலாம், பைத்தியம் நன்றாக முற்றி விட்டது என்று நினைத்தவனாக பாஸ்கர் அவன் சொன்னபடியே வீட்டுக்குப் போன் செய்து சொன்னான்.

# 25

நிலா அன்று காலை ஆபிசுக்குக் கிளம்பும் போது இன்னும் இரண்டு நாட்கள் எப்படியாவது தாக்குப் பிடித்து விட்டால் நிம்மதி என்று நினைத்தாள். இன்று ஆபிசுக்குப் போகும் கடைசி நாள். இன்றும் நாளையும் சம்பத் ஆட்களுக்கு அவளைப் பற்றிய விவரங்கள் கிடைக்காமல் இருந்தால் போதும். நாளை மறுநாள் அதிகாலையில் விமானம் ஏறி விட்டால் போதும். பின் அவள் தப்பித்துக் கொள்வாள்.

இந்த எண்ணத்துடன் ஆபிசுக்குள் நுழைந்தவள் மான்சி கவலையுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து ஏன் என்று யோசித்தவளாக, “என்ன மேடம் என்னவோ மாதிரி இருக் கீங்க” என்று கேட்டாள்.

மான்சி கவலையுடன் சொன்னாள். “இவர் என்னவோ மாதிரி நடந்துக்கறார் நிலா. கோபத்துல பொருள்களைப் போட்டு உடைக்கிறார், வீசறார்... தூங்கவே மாட்டேங்கி றார்.... என்ன பண்றதுன்னே தெரியலை”

“எதனால மேடம்?”

“வசந்த் முந்தாநாள் ராத்திரி அவ்வளவு துணிச்சலா வந்து அவனுக்கு வேணுங்கறத எடுத்திட்டும் போயிட்டத அவரால தாங்கவே முடியல. அவனைப் பத்தி நினைக்க றப்ப அப்படியே கொதிச்சுப் போயிடறார். நம்மலால ஒன் னும் பண்ண முடியலயேங்கறது அவரை நிறையவே பாதிச்சு டுச்சு... அவங்கப்பா கிட்ட போன் செஞ்சு விஷயத்த சொல்லி டாக்டர் யாரையாவது பாக்கலாம்னா அவரும் அதை பெருசா எடுத்துக்க மாட்டேங்கறார். இவ்வளவு கோடி கைய விட்டுப் போனா எல்லாருக்குமே அப்படித் தான் ஆகும், அவன் வந்துட்டுப் போனது வேற இவன பாதிச்சிருக்கு...

கொஞ்சம் கொஞ்சமா தான் மனசு சமாதானமாகும்.... ரெண்டு நாள்ல தானா சரியாயிடும்னு சொல்றார்... இதை எல்லாம் பாத்து என் பையனும் பயந்து போயிருக்கான்..... சில சமயம் என்ன வாழ்க்கைன்னு சலிப்பா இருக்கு..."

நிலாவுக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "எல் லாம் சரியாயிடும் மேடம்..." என்று வெற்று ஆறுதல் சொல்வ தைத் தவிர வேறெதையும் சொல்லத் தெரியவில்லை.

பின் பண்ணை வீட்டின் வெளி கேட் மற்றும் ஹால் சாவி களை எடுத்துக் கொண்டு ஓவியங்களையும், பொருள்க ளையும் துடைத்து விட்டு வர நிலா கிளம்பினாள். அவளு டைய ஸ்கூட்டி ஏனோ கிளம்ப மறுத்தது. அவள் பல முறை முயன்றும் பலன் அளிக்காததை ஜன்னல் வழியாகப் பார்த்த மான்சி "அதை விடு நிலா. மெக்கானிக்குக்குப் போன் பண்ணா வந்து சரி பார்த்துடுவான். நீ கால் டாக்சிலயே போய்ட்டு வந்துடு" என்றாள்.

நிலா உடனே பக்கத்துத் தெருவில் இருக்கும் மெக்கானிக் குக்குப் போன் செய்து ஸ்கூட்டியைச் சரிபார்க்கச் சொல்லி விட்டு கால் டாக்சிக்குப் போன் செய்தாள்.

பாஸ்கரைப் பண்ணை வீட்டில் நேற்றிரவே கொண்டு வந்து அடைத்து வைத்திருந்தார்கள். அவனைக் கண்காணிக்க சம்பத்தின் அடியாட்கள் மூன்று பேர் உடன் இருந்தார்கள்.

பாஸ்கர் இப்படியொரு பைத்தியக்காரனிடம் சிக்கிக் கொண்டு பாடுபடுவோம் என்று எதிர்பார்க்கவில்லை. வசந்த் சம்பத்தின் கள்ளச் சொத்தை மட்டுமல்லாமல் அவ னுடைய அறிவையும் சேர்த்து எடுத்துக் கொண்டு போய் விட்ட மாதிரி தான் தெரிந்தது.

“நீ அவன் எங்கே என்று சொன்னால் தான் வீட்டுக் குப் போக முடியும். உனக்கு எதுவுமே தெரிந்திருக்காமல் இருக்க வழியே இல்லை....” என்று நேற்று இரவு வரை கீறல் விழுந்த ரிகார்டு போலச் சொன்னதையே சொல் லிக் கொண்டு இருந்தான். பிறகு போகும் போது “நாளைக் காலை வருவேன். அப்போதும் சொல்லா விட்டால் என்ன நடக்கும் என்று எனக்கே தெரியாது” என்று சொல்லி விட்டுப் போனான்.

பாஸ்கருக்கு இந்தப் பைத்தியத்தின் சித்திரவதையிலிருந்து தப்பிக்க ஏதாவது ஒரு இடத்தைச் சும்மா சொல்லி வைப் போமா என்று கூடத் தோன்றியது. ஆனால் அந்த இடத் திற்குப் போய்ப் பார்த்து விட்டு வந்து கூடுதல் வெறி பிடித்த மாதிரி அவன் ஆகி விடுவான் என்றுணர்ந்து அந்த யோச னையைக் கைவிட்டான்.

சம்பத்தின் அடியாட்களில் ஒருவன் அவனிடம் சொன் னான். “தம்பி உனக்கு என்ன தெரியுமோ அதைச் சொல் லிடு. சார் இந்த ரெண்டு நாளா ஒரு நிதானத்துல இல்லை.... எதுக்குத் தேவையில்லாம பிரச்சனைய வளர்த்துகிட்டு”

பாஸ்கர் பரிதாபமாகச் சொன்னான். “தெரிஞ்சிருந்தா சொல்ல மாட்டேனா. அவனைக் கடைசியா நான் பாத்த தும், பேசினதும் நாங்க வெளிநாட்டுல இருந்து வந்த நாள் ஏர்ப்போர்ட்ல தான். அதுக்கப்பறம் அவனைப் பார்க்கவும் இல்லை பேசவும் இல்லை. சொன்னா நம்ப மாட்டேங்க றார்....”

அந்த அடியாள் அவனை நம்பினான். ஆனால் அவன் நம்பி எதுவும் ஆகப் போவதில்லை. பாஸ்கரை அவன் இரக் கத்தோடு பார்த்தான். அந்த அடியாள் சம்பத்திடம் ஏழு

[redacted]

வருடங்களாய் வேலை பார்க்கிறான். எத்தனை கோபம் வந்தாலும் கெட்ட வார்த்தைகளில் படுகேவலமாகத் திட்டுவானேயொழிய அதற்கு மேல் போக மாட்டான். முதல் முறையாக இரண்டு நாள் முன்பு ஆபிஸ் காவலாளியை ஓங்கி அறைந்திருக்கிறான். நேற்று ஒரு அடியாள் அவன் கேட்ட பொருளைக் கொண்டு வரக் கொஞ்சம் தாமதமாகி விட்டது என்பதற்காக அறைந்திருக்கிறான். இந்த இரண்டு நாளாகப் பொருள்களை வீசுவது, உடைப்பது எல்லாம் கூட நடக்கிறது. பாவம் இந்த ஆளும் இப்போது சிக்கிக் கொண்டு படாதபாடு படுகிறான்.

சிறிது நேரத்தில் சம்பத் வந்தான். காலையிலேயே நன்றாகக் குடித்திருந்தான். நடையிலும் சிறிது தள்ளாட்டம் இருந்தது. வந்தவுடன் பாஸ்கரைக் கேட்டான்." என்ன பாஸ்கர் இப்பவாவது தெரிஞ்ச உண்மையைச் சொல்லு. எங்கே வசந்த். வெளிநாட்டுல அவன் ஃப்ராடு பண்ணப்ப கூடவே இருந்த உனக்கு எதுவும் தெரிஞ்சிருக்காம இருக்க வழியே இல்லை...."

நிலா பண்ணை வீட்டுக் கேட்டை மெல்லத் திறந்த போது சம்பத்தின் கார் உள்ளே தெரிந்தது. இரண்டு பைக்குகளும் கூட அங்கே நிறுத்தப்பட்டிருந்தன. அவள் ஹால் கதவைத்

திறந்து உள்ளே போன போது மிகவும் சத்தமாக யாரையோ திட்டுவது கேட்டது. இதுநாள் வரை அங்கே அவன் இருக்கும் போது அங்கிருந்து சல்லாபச் சத்தங்கள் தான் கேட்கும். இன்று என்னவோ இப்படிக் கோபத்தில் கத்துகிறான். மான்சி சொன்னது போல அவனுக்குப் பைத்தியம் நிறையவே முற்றி விட்டது போல் இருக்கிறது. என்று நினைத்தவளாய் தன் வேலையை ஆரம்பிததாள். அவள் வேலை முடிய அரை நாளுக்கு மேல் ஆகி விடும்....

சம்பத் அங்கே வந்ததிலிருந்து இருபதாவது தடவையாக பாஸ்கரைக் கேட்டான். “பாஸ்கர் உனக்கு வீட்டுக்குப் போக வேண்டாமா..... உண்மையைச் சொல்லிட்டு போயிடு. என் பொறுமையைச் சோதிக்காதே...... வசந்த் பத்தி உனக்குக் கண்டிப்பா நிறைய தெரியும். அவன் திருடுன பணத்துல கொஞ்சம் உனக்குத் தர்றதா சொல்லியிருக்கானா? அதனால தான் அவனுக்கு நீ இவ்வளவு விசுவாசமா இருக்கியா?”

பாஸ்கர் இத்தனை நாள் கட்டிக்காத்த பொறுமையை இழந்து சொன்னான். “சார் மென்டலாட்டம் பேசாதீங்க.

அவன் பணம் தர்றதா சொல்லியிருந்தா நான் பேசாம அவன் கூடவே போயிருக்க மாட்டேனா.... என்ன பேசறீங்க?”

சம்பத் அவன் மென்டல் என்று கூப்பிட்டதில் மிருகமானான். நேற்றிரவு மான்சியும் அவன் தந்தைக்குப் போன் செய்து அவனை டாக்டரிடம் காட்ட வேண்டும் என்று சொன்னது அவனை மிகவும் பாதித்திருந்தது. அப்போதே ஓங்கி அவளை அறைய வேண்டும் என்று நினைத்திருந்தான். ஆனால் கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு கண்ணாடி டம்ளரை  சுவர் மீது விட்டெறிந்து கோபத்தைத் தீர்த்துக் கொண்டான். இப்போது இவன் அவனை மெண்டல் என்கிறான்....

உள்ளே கொதித்தபடி  அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். சற்று தள்ளி கோல்ஃப் ஸ்டிக் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அதை எடுத்துக் கொண்டு வெறி பிடித்த மிருகம் போல் அவனை நெருங்கி “என் கிட்ட கைநீட்டிச் சம்பளம் வாங்கி சாப்டற நாய் நீ என்னையே மென்டல்ங்கிறியா....” என்று ஆக்ரோஷமாய் கத்திக் கொண்டே தாறுமாறாக அவனை ஓங்கி ஓங்கி அடிக்க ஆரம்பித்தான்.

பாஸ்கர் அலறிய அலறல் மரண அலறலாக இருந்தது. அவன் தலையில் பட்ட அடிகள் மூக்கிலும் வாயிலும் இரத்தத்தை வரவழைத்து அவன் அப்படியே கீழே சரிந்தான். ஆனாலும் சம்பத் அடிப்பதை நிறுத்தவில்லை.

அடியாட்கள் ஸ்தம்பித்துப் போயிருந்தார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் மெல்ல சுதாரித்துக் கொண்டு “சார் சார் ... ஆளு செத்துப் போயிடப் போறான்” என்று வேகமாக வந்து அவன் கையைக் கெட்டியாகப் பிடித்து அந்த கோல்ஃப் ஸ்டிக்கை வாங்கித் தூர எறிந்தான். ஆனாலும் இன்னும் சம்பத் கோபம் தாளாமல் நடுங்கிக் கொண்டுதானிருந்தான். ஆனால் பாஸ்கரின் உடல் அசைவை நிறுத்தியிருந்தது. அவன் இறந்து போயிருந்தான்.

# 26

நிலாவுக்கு சம்பத்தின் கத்தலும் இன்னொரு அலறலும் காதைப் பிளந்தது போல் இருந்தது. மெல்ல ஜன்னல் அருகே வந்து எட்டிப் பார்த்தாள். பங்களாவுக்கு வெளியே யாருமில்லை. கதவு திறந்தே இருந்தது. சிறிது நேரம் அங்கே மயான அமைதி நிலவியது. பின் ஒரு ஆள் வெளியே வந்து சுற்றும் முற்றும் பார்ப்பது தெரிந்தது. நிலா சுவரை ஒட்டிப் பதுங்கி நின்று கொண்டாள்.

[redacted]

அவன் உள்ளே போய் விட்டான். சிறிது நேரத்தில் அவனோடு வேறிரண்டு ஆள்களும் சம்பத்தும் வெளியே வந்தார்கள். சம்பத் பேயடித்தவன் போல் இருந்தான். அவனுடைய ஆட்கள் கையில் கடப்பாரையும், மண்வெட்டியும் இருந்தன. சம்பத் பங்களா வாசலிலேயே தளர்ந்து போய் உட்கார்ந்து கொள்ள அவர்கள் தூரமாகப் போய் குழி தோண்ட ஆரம்பிப்பது தெரிந்தது.

நிலாவுக்கு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் பெரிய தவறு ஏதோ நடந்து விட்டது என்பது மட்டும் புரிந்தது. குழி தோண்டியவர்கள் வேகமாகத் திரும்பி வந்தார்கள். சம்பத் எழுந்து வழிவிட்டு நின்றான். அவர்கள் மட்டும் வீட்டுக்குள்ளே போனார்கள். போனவர்கள் ஏதோ ஒரு ஆளைத் தூக்கிக் கொண்டு வெளியே வருவது தெரிந்தது.

அதிர்ந்து போன நிலா திடீரென்று மூளையில் ஒரு பொறி தட்ட, மறைவாக நின்றபடி தன்னுடைய மொபைல் போனில் வெளியே நடப்பதை வீடியோ எடுக்க ஆரம்பித்தாள். அவள் இதயம் மிக வேகமாக அடித்துக் கொண்டாலும் அவள் வீடியோ எடுப்பதை நிறுத்தவில்லை.

[redacted]

அவர்கள் நால்வருக்கும் அவள் வந்திருப்பது தெரிந்திருக்கவில்லை. அவள் எப்போதுமே ஸ்கூட்டியில் வருபவள் என்பதால் அவள் வந்திருந்தால் ஸ்கூட்டி வெளியே நின்றிருக்கும். இன்று அவள் கால் டேக்சியில் வந்திருப்பதால் அவர்களுக்கு அவள் அங்கிருக்கலாம் என்ற சந்தேகம் கூட வரவில்லை.

வெளியே ஒரு ஆணின் பிணத்தைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். அந்த உடல் நன்றாகக் கனத்திருக்க வேண்டும். அவர்கள் அதைக் கீழே வைத்து விட்டு மறுபடி தூக்கினார்கள். அப்போது அந்த ஆணின் முகம் ரத்தக்கறையோடு நன்றாகவே தெரிந்தது.  ஆனால் நிலாவுக்கு பாஸ்கரைப் பரிச்சயம் இல்லாததால் அவளுக்கு அது யார் என்று தெரியவில்லை. மூவரும் பிணத்தோடு போக சம்பத் வெளியே கேட் சாத்தியிருக்கிறதா என்று பார்த்து விட்டு அவர்கள் பின்னால் போனான். அவர்கள் அந்த உடலைக் குழிக்குள் இறக்கி திரும்பவும் மூடி விட்டுத் திரும்பவும் வரும் வரை  வீடியோ எடுத்தவள் அவர்கள் சற்று அருகில் வர ஆரம்பித்ததும் இனி தொடர்வது ஆபத்து, அவர்கள் கண்ணில் பட்டுவிடக் கூடும் என்று நிறுத்தி மறைந்து நின்று கொண்டாள்.

சம்பத்தும் அவன் அடியாட்களும் மறுபடி உள்ளே போனார்கள். பத்து நிமிடம் கழித்து திரும்ப வந்தவர்கள் ரத்தக்

[redacted]

கறை படிந்த துணிகளை ஒரு ஓரமாகப் போட்டு அதில் மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்பு பற்ற வைத்தார்கள். அதையும் அவள் வீடியோ எடுத்திருப்பாள். ஆனால் சம்பத் பார்வை ஹால் பக்கம் திடீரென்று வந்து போனது. இனி சாகசம் எதாவது காட்டினால் அங்கே இன்னொரு பிணமாக புதைக்கப்பட்டு விடுவோம் என்ற பயம் அவளுக்கு வந்தது. அதனால் அமைதியாக அவர்கள் கண்படாமல் ஒதுங்கியே நின்றிருந்தாள்.

சம்பத்தின் கார் கிளம்பும் சத்தம் கேட்டது. அவன் போன பிறகு ஐந்து நிமிடங்கள் கழித்து அவன் அடியாட்கள் மூவரும் கூட பைக்குகளில் கிளம்பிப் போனார்கள். கேட் திறக்கப்பட்டு மீண்டும் சாத்தப்படும் சத்தம் கேட்டது. ஐந்து நிமிடம் கழித்து தான் அவள் எதிர்ப்புற ஜன்னல் வழியாக மெல்ல எட்டிப் பார்த்தாள். கேட்டில் பூட்டு தொங்கியது. இதயத்தின் படபடப்பு ஓரளவு குறைந்தது.

மீதமிருந்த வேலைகளை அவசர அவசரமாகச் செய்து அவள் கிளம்ப மேலும் ஒரு மணி நேரம் ஆனது. கிளம்புவதற்கு முன் ஜன்னல் வழியாகப் பார்த்தாள். யாரும் இல்லை. ஆனாலும் வெளியே வரும் போது மனம் திக் திக் என்றது. மெல்ல கேட்டை நோக்கி நடக்கையிலும் என்னேரமும்

யாரும் வந்து அவள் மீது பாயலாம் என்ற பயம் அவளுக்கி ருந்தது.

கேட் கம்பிகள் வழியாக வெளியே கையை விட்டுப் பூட்டைத் திறந்து கொண்டு வெளியே வந்து இருபக்கமும் பார்த்தாள். அந்தப் பகுதியில் வீடுகள் அதிகமுல்லை. நிறைய தோப்பு கள், பண்ணை வீடுகள் தான் இருந்தன. மறுபடி கேட்டைப் பூட்டி விட்டு நடந்து கொண்டே செல்கையில் ஒரு ஆட்டோ ரிக்ஷா காலியாக வந்து கொண்டிருந்தது. அதில் ஏறிக் கொண்டாள்.

ஆட்டோவில் போய்க் கொண்டிருக்கையில் இறந்து போன வன் முகம் மனதில் நிழலாடியது. அவன் யாரோ தெரிய வில்லை. யாராக இருந்தாலும் அவனுக்காக ஒரு குடும் பம் காத்திருக்கும். அவனை நேசிப்பவர்கள் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவன் இறந்து விட் டான் என்பது தெரியாமல் சிரித்துக் கொண்டும் சாப்பிட்டுக் கொண்டும் இருக்கலாம். நினைக்கும் போதே மனம் கனத் தது.

ஆனால் இந்த எண்ணங்கள் ஆபத்தாகலாம் என்று அவ ளுக்குத் தோன்றியது. எப்போதும் போல் இயல்பாக இருப்

பது தான் பாதுகாப்பு. அவள் மேல் அவர்களுக்குச் சந்தேகம் வந்து விடக்கூடாது. துபாய் போகும் வரை அவள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

நல்ல வேளையாக அவள் ஆபிஸ் போய்ச் சேர்ந்த போது மான்சி வீட்டுக்குப் போய்விட்டிருந்தாள்.  அவள் ஸ்கூட்டி சரிசெய்யப்பட்டிருந்தது. நிலா சற்று நிம்மதியடைந்தாள்.

சம்பத் பாஸ்கரின் மரணத்தைப் பற்றி மனைவியிடமோ, தந்தையிடமோ சொல்லவில்லை. பாஸ்கர் இன்னும் சில நாட்களுக்கு வெளியூர் போனவனாய் இருப்பான். அப்புறம் சில நாட்களுக்குத் தொலைந்து போனவனாக இருப்பான். அவனுடைய அடியாட்களுக்கு நல்லதொரு தொகையைக் கொடுத்திருக்கிறான். அவர்கள் பல வருடங்களாக அவனிடம் இருப்பவர்கள். அவர்கள் காட்டிக் கொடுக்கப் போவதில்லை. அதனால் நடந்ததைத் தேவை இல்லாமல் குடும்பத்தினருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று நினைத்தான். ஏற்கெனவே அவன் மனைவி அவனை நல்ல டாக்டரிடம் காட்டச் சொன்னவள். இதையும் சொன்னால் முடிவே செய்து விடுவாள்...

[redacted]

காலை வரை ஹிஸ்டீரியா வந்தவன் போல் நடந்து கொண்ட கணவன் வீட்டில் அமைதியாக இருப்பது மான்சியை ஆச்ச ரியப்படுத்தியது. மாமனார் சொன்னது சரி தான் போலிருக் கிறது. இவர் தானாக அமைதியடைந்து விட்டாரே. இப்ப டியே தொடர்ந்து இருந்தால் மிக நல்லது என்று நினைத் தாள்.

நிலா வீட்டுக்குக் கிளம்புவதற்குச் சிறிது நேரம் முன்பு தான் மான்சி ஆபிஸ் வந்தாள். இப்போது அவள் முகத்தில் நிம் மதி தெரிந்தது. நிலாவைப் பார்த்தவுடனேயே அவள் சொன் னாள். “நிலா ஒரு குட் ந்யூஸ். இன்னிக்குக் காலைல உன் கிட்ட புலம்பினதுக்கு ஒரு நல்ல காரியம் நடந்திருக்கு. நீ சொன்ன மாதிரியே எல்லாம் சரியாயிடுச்சு. இப்ப அவர் அமைதியாய் இருக்கார். இந்த அமைதியை நான் அவர் கிட்ட பாத்து ரொம்ப நாளாச்சு”

ஒரு மனிதனைக் கொன்று விட்டு வீட்டுக்கு அமைதியாய் போயிருக்கிறவனை எண்ணுகையில் நிலாவுக்கு வயிறெ ரிந்தது. யாரையாவது கொன்றால் தான் இவனுக்கு அமைதி வரும் போலிருக்கிறது. எப்படிப்பட்ட ஈனப்பிறவி அவன்... ஒன்றும் சொல்லாமல் நிலா கஷ்டப்பட்டுப் புன்னகைத்தாள்.

சிறிது நேரம் ஆபிஸ் வேலைகள் விஷயமாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு நிலா கிளம்பும் போது மான்சி வாழ்த் தியனுப்பினாள். “ஆல் த பெஸ்ட் நிலா. முடிஞ்ச அளவு சீக்கி ரம் வா.”

தலையசைத்து விட்டுக் கிளம்பிய நிலா வீட்டுக்குப் போன வுடன் முதல் வேலையாக அவள் வீடியோ எடுத்திருந்ததை வசந்துக்கு அனுப்பி வைத்தாள். அவன் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்ளட்டும் என்று நினைத் தாள்.

[redacted]

# 27

நிலா அனுப்பிய வீடியோவைப் பார்த்து முடித்த போது வசந்த் மனதில் பாறையை வைத்தது போல் உணர்ந்தான். இப்படி நடக்கும் என்று அவன் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனே அவன் நண்பனைக் கொன்று விட்டது போல குற்றவுணர்ச்சி அவனை வாட்டியது. தொண்டையை எதோ அடைத்தது. என்ன நடந்தது, எதனால் பாஸ்கரை சம்பத் கொன்றான் என்பது தெளிவில்லாத போதும் என்ன நடந்திருக்கும் என் பதை அவனால் ஓரளவு யூகிக்க முடிந்தது,

சிறிது நேரம் நண்பனுடனான பழைய நினைவுகளில் வசந்த் கண்கலங்கி அமர்ந்திருந்தான். பாஸ்கர் அவன் பள்ளி நாட்களில் இருந்து நண்பன். இருவரும் இணை பிரியாத நண்பர்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒருவர் மகிழ்ச்சியில் மற்றவர் மகிழ்ந்து, ஒருவர் துக்கத்தில் மற்றவர் உதவ முற்படும் அளவு நெருக்கமாய் இருந்தவர்கள்...

'யாரும் இறைவன் நிச்சயித்த காலத்தை விட இந்த உலகில் ஒரு வினாடி அதிகமும் வாழ்ந்து விட முடியாது, ஒரு வினாடி குறைவாகவும் வாழ்ந்து விட முடியாது' என்று எங்கோ படித்தது வசந்துக்கு நினைவுக்கு வந்தது. பாஸ்கரின் ஆயுளே அவ்வளவாகத் தான் இருந்திருக்க வேண்டும் என்று சமாதானப்படுத்திக் கொண்டாலும் அவன் இறந்த விதம் அவனை இரத்தம் கொதிக்க வைத்தது.

அவனுக்கு இந்தியாவில் இருந்து செய்ய வேண்டிய வேலைகள் இன்னும் சில இருந்தன. அவன் சில ஆட்களை நேரில் சந்தித்துப் பேசி சிலவற்றைத் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. சில சட்டரீதியான வேலைகள் ஆக வேண்டியிருக்கின்றன. சிலவற்றிற்கு நேரில் சென்று அவன் கையெழுத்துப் போட வேண்டியிருக்கிறது. அத்தனையும் அவன் எதிரிகள் பார்வையில் படாமல் செய்ய வேண்டியிருக்கிறது. அவை

[redacted]

எல்லாம் முடிய சுமார் ஒரு வாரம் ஆகும். அது முடிந்த பிறகு அவனும் இந்தியாவை விட்டுப் போய் விடுவான்.

முதலில் நிலாவும் அவள் தாயும் பாதுகாப்பாக துபாய் சென்று சேர வேண்டும். அதற்கும் முன் அவளுக்கு எதுவும் ஆகிவி டக்கூடாது. அவன் தனக்காகக் கூட இறைவனை அதிகம் பிரார்த்தித்தவன் அல்ல. அவளுக்காக அவன் பிரார்த்திக்க ஆரம்பித்தான்.

அவன் பிரார்த்தனையாலோ இல்லை இயற்கையில் விதிக் கப்பட்டிருந்ததே அது  என்பதாலோ நிலா விமானம் ஏறி விட்டதாகத் தகவல் அனுப்பி இருந்தாள். அந்த நேரத் திற்காகக் காத்திருந்த வசந்த் மூன்று பிரபல தொலைக் காட்சிகளுக்கு அந்த வீடியோவை அனுப்பி வைத்தான். வெறும் ஒன்றுக்கு மட்டும் அனுப்பி வைத்தால் பேரங்கள் நடக்க வாய்ப்பிருக்கிறது. மூன்றுக்கு அனுப்பி வைத்தால் அது நடக்க வாய்ப்பில்லை. įந்த வீடியோ ஒளிபரப்பானால் போதும் மீதியை ஆளுங்கட்சி பார்த்துக் கொள்ளும்.

சம்பத்தைத் தேடி முட்டைக்கண்ணர் வந்தார். ஒரு வெள்ளை உறையை எடுத்துக் கையில் வைத்துக்

கொண்டு சொன்னார். "வசந்தோட காதலியோட ஓவியத் தைக் கொண்டு வந்திருக்கேன். அவனும் இந்தப் பொண் ணும் ஒரு ரெஸ்டாரண்டுக்கு மூணு நாலு தடவை சாப்பிடப் போயிருக்காங்க. அந்த ரெஸ்டாரண்ட்ல எப்பவுமே லைட் வெளிச்சம் கம்மியா தான் இருக்கும். அதனாலயே வசந்த் விவரமா காதலியை அங்கே கூட்டிகிட்டு போயிருக்கான். அதே மாதிரி இன்னொரு பார்க்ல இருட்ட ஆரம்பிக்கற நேரத்துல வசந்த் அந்தப் பொண்ணை சில தடவை கூட்டி கிட்டு போயிருக்கான். அந்த ஓட்டல் சர்வர்களையும், பார்க் வாட்ச்மேனையும் பலவிதமா விசாரிச்சுக் கேட்டு இந்த ஓவியத்தை வரைஞ்சுருக்கிறான் எங்க எக்ஸ்பர்ட் ஆளு. கேட்கறதுக்குச் சுலபமான வேலை மாதிரி தெரியலாம். ஆனா ரொம்ப கஷ்டமான வேலை இது...."

சம்பத் பொறுமை இழந்து அவரிடமிருந்து அந்த வெள்ளை உறையைப் பிடுங்கி உள்ளே இருந்த ஓவியத்தை வெளியே எடுத்தான். ஓவியத்தில் அவனைப் பார்த்து நிலா புன்ன கைத்துக் கொண்டிருந்தாள்.

சம்பத் அலறினான். "மான்சீ....."

[redacted]

இரண்டு நாள் அமைதியாயிருந்தவர் பழையபடி ஏனிப்படி அலறுகிறார் என்று சலித்துக் கொண்டே வந்த மான்சியிடம் அந்த ஓவியத்தை சம்பத் நீட்டினான்.

“ஐ.... நிலா.... இது யாரு வரைஞ்சது. இதை இன்னும் கொஞ் சம் நல்லா வரைஞ்சிருக்கலாம்”

“இவ தாண்டி வசந்தோட காதலி....” என்று ஆக்ரோஷமாய் கத்தியவன் அவளைப் பிடித்துக் கொண்டு வர ஆட்களிடம் கட்டளையிட எண்ணி அலைபேசியை எடுத்தான்.

மான்சி பரிதாபமாய்ச் சொன்னாள். “அவ காலைலயே துபாய் போய்ட்டா”

சம்பத் ஜன்னி வந்தவன் போலக் கோபத்தில் நடுங்கினான். அந்த நேரமாகப் பார்த்து சுந்தரம் அவசர அவசரமாய் போன் செய்தார். “டிவி பாரு” என்று சுருக்கமாய்ச் சொன்னார்.

சம்பத் தொலைக்காட்சி பார்க்கும் மனநிலையில் இல்லை. என்றாலும் வசந்தைப் பற்றி எதோ செய்தி வந்திருக்கிறது

[redacted]

போல, அதனால் தான் சொல்கிறார் என்ற எண்ணமும் மன தில் ஓடியதால் ரிமோட்டை எடுத்து அழுத்தினான்.

தொலைக்காட்சியில் பாஸ்கரின் பிணத்தை எடுத்துக் கொண்டு அவன் அடியாட்கள் போக பின்னால் அவன் போகும் காட்சி ஒளிபரப்பாகிக் கொண்டு இருந்தது. ”நடந் தது என்ன?” என்று செய்தியாளர் பரபரப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார். சம்பத் சப்தநாடியும் ஒடுங்கிப் போய் பார்த் தான். இது எப்படி இந்தத் தொலைக்காட்சிக்குக் கிடைத் தது?....

அந்தக் காட்சியைப் பார்த்தவுடன் முட்டைக்கண்ணர் சத் தமில்லாமல் எழுந்து வெளியே போனார். போலீஸ் இங்கே வரும் போது அவர் அவனுடன் இருக்க விரும்பவில்லை.

சம்பத் ஆத்திரத்துடன் அலைபேசியில் தந்தையை அழைத்தான். “அந்த ஒளிபரப்பை நிறுத்துங்கப்பா. என்ன செலவானாலும் பரவால்ல. குடுத்துடுங்க”

சுந்தரம் கோபத்தோடு சொன்னார். ”வேற ரெண்டு சேனல் லயும் கூட இதே தான் ஓடிகிட்டிருக்கு. உன் முட்டாள்தனத் துக்கு அளவேயில்லையாடா?”

மான்சி மகனை அழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டு குமுறி அழும் சத்தம் சம்பத்துக்குக் கேட்டது. அதே நேரத்தில் திபுதிபுவென்று போலீசார் அவன் வீட்டுக்குள்ளே நுழைந்தார்கள்.

சம்பத் தன் உலகம் ஒரேயடியாய் அஸ்தமித்ததை உணர்ந்தான்.

அன்று எல்லாத் தொலைக்காட்சிச் செய்திகளிலும் சம்பத்தே இடம் பெற்றான். அவன் கைதாகி போலீஸ் வேனில் ஏற்றப்படும் காட்சி பலமுறை ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. அடுத்ததாய் அவனுடைய பண்ணை வீட்டிலிருந்து பிணம் தோண்டி எடுக்கும் காட்சி ஒலிபரப்பாகியது. கொலைக்கு தொலைக்காட்சிகளும், பத்திரிக்கைகளும் தங்களுடைய கற்பனைக்கெட்டிய யூகங்களை எல்லாம் செய்திகளாகத் தந்தன. அந்த வீடியோவில் தெரிந்த மூன்று அடியாட்களும் தலைமறைவாகியிருந்தார்கள்...

சுந்தரம் மிகுந்த வேதனையுடன் பேட்டி கொடுத்தார். “என் மகன் சில நாட்களாகவே மனநிலை பாதிக்கப்பட்டவனாய் இருந்தான். சொல்லப் போனால் என் மேல் உள்ள காழ்ப்பு

ணர்ச்சி காரணமாய் அபாண்டமாய் அவன் மீது பழி சுமத்தி இன்றைய ஆட்சியாளர்களின் கைப்பாவையாக இயங்கும் அரசு அமைப்புக்கள் என் மகன் ஆபிஸ் மற்றும் வீட்டை சோதனையிட்ட நாளிலிருந்தே அவன் பாதிக்கப்பட்டு விட்டான் என்று சொல்ல வேண்டும். அதற்கான சிகிச்சைக்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருந்த போது இப்படி ஒரு சம்பவம் நடந்து விட்டது.... அவன் என்ன செய்கிறான், எதனால் செய்கிறான் என்ற பிரக்ஞையே இல்லாதவனாக அவன் இருக்கிறான்...."

அவர் சொல்வது சரி என்கிற வகையில் சம்பத் வீட்டின் அருகே இருக்கும் சிலர் பேட்டியளித்தார்கள். அவர்கள் சில நாட்களாக நள்ளிரவு நேரத்தில் சம்பத்தின் கூக்குரல் கேட்பதாகச் சொன்னார்கள்.

இந்தச் செய்தி ஒளிபரப்பைப் பார்த்துக் கொண்டிருந்த வசந்த் புன்னகைத்தான். மகனைக் காப்பாற்ற சுந்தரம் அவன் மனநிலை சரியில்லாதவன் என்ற அஸ்திரத்தைக் கையில் எடுத்திருப்பது தெரிந்தது. அவருக்கு இதைத்த விர வேறு வழியில்லை. அரசியல் சூழ்ச்சி, எதிரிகளின் சதிவேலை என்று வழக்கம் போல் சொல்ல வழியில்லாதபடி தெளிவான வீடியோவும், சம்பத்தின் பண்ணை வீட்டில் பாஸ்கரின் பிணமும் கிடைத்திருந்ததால் இனி இப்படித்

[redacted]

தான் அவர் போயாக வேண்டும். ஆனால் அது அவருக்கு எந்த அளவு கைகொடுக்கும் என்று தெரியவில்லை.

ஒரு விதத்தில் இப்போதைய நிகழ்வுகள் அவனுக்கு அனு கூலமாக இருந்தன. சம்பத் அவனுக்கு எந்த ஆபத்தும் விளைவிக்க முடியாதபடி சிறையில் இருக்கிறான். சுந்தரம் மகனைக் காப்பாற்றவும், அது முடியாவிட்டால் மகனுக்கு கிடைக்கவிருக்கும் தண்டனையைக் குறைக்கும் வழியி லும் முழுமும்முரமாக இறங்கி இருக்கிறார். குழி தோண்டிப் பிணத்தைப் புதைக்க உதவிய மூன்று அடியாட்கள் தலைம றைவான பிறகு சம்பத்தின் மற்ற அடியாட்களும் கூட தலை மறைவாகியிருந்தார்கள். துப்பறியும் நிறுவனங்கள் கூட சம் பத் தந்திருந்த வேலையைத் தொடராமல் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தன.

அதனால் பயமில்லாமல் வசந்த் வெளியூர்கள் சென்று செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம் வேகமாகச் செய்ய ஆரம்பித்தான். ஆனாலும் இந்த நிலைமை சில நாட்கள் தான் இருக்கும் என்பதை அவன் அறிந்தே இருந்தான். பெரும் பிரச்னைகளை ஓரளவு சமாளித்த பின் சுந்தரம் தன் முழுக் கவனத்தையும் அவன் மீது தான் திருப்புவார் என்பது அவனுக்குத் தெரியும். அதற்கும் முன்னால் அவன் வேலை களை முடித்துத் தப்பித்துச் சென்று விட வேண்டும்...

# 28

பாஸ்கரின் குடும்பம் அவன் மரணத்தால் நிலைகுலைந்து போயிருந்தது. போலீசாரின் தொடர் விசாரணைகள், பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நிருபர்களின் ஓயாத தொந்தரவுகள் வேறு அவர்களை நிறையவே பாடுபடுத்தின. அவனைப் பார்த்த கடைசி நினைவுகளை வீட்டில் ஒவ்வொருவரும் நினைவுபடுத்திக் கொண்டு கண்ணீர் விட்டார்கள். எப்போதும் போல சாதாரணமாக ஆபிஸ் போய் வருவதாகச் சொல்லிக் கிளம்பியவன் திரும்பி வராமலேயே போவான் என்று தெரிந்திருந்தால் அனுப்பாமலேயே இருந்திருக்கலாம் என்று பெற்றவர்களுக்குத் தோன்றியது.

[redacted]

தங்கை கல்யாணத்திற்குப் பத்து லட்சம் ரூபாய் தருவ தாய் பாஸ்கர் சொல்லி இருந்ததை நினைவுபடுத்தி அவன் தந்தை மனம் கனத்தார். அவனுடைய சம்பாத்தியமும், நிதி நிலைமையும் அவர் நன்றாகவே அறிந்திருந்தார். அவள் கல்யாணம் நிச்சயமானால் சேர்த்து வைத்திருப்பதையும், கடன் வாங்கித் தர முடிந்ததையும் சேர்த்தே அவனால் இரண்டு அல்லது மூன்று லட்சத்திற்கு மேல் தர முடி யாது என்று கணித்திருந்தார். ஆனாலும் மகன் பொறுப்பு டன் வாக்களித்ததே அவருக்கு உள்ளுக்குள் திருப்தியளித் திருந்தது. அந்த மகனை அவர் என்றென்றுக்குமாய் இழந்து விட்டார்....

"சார் குரியர்" என்ற சத்தம் வாசலில் கேட்டது. அவர் போய்க் கையெழுத்துப் போட்டு அந்த உறையை வாங்கினார். அவர் பெயருக்குத் தான் அது வந்திருந்தது. அனுப்பியது யார் என்று பார்த்தார். பாஸ்கர் என்று எழுதி இருந்தது. திகைப் புடன் வாங்கி அவர் பிரித்து உள்ளே பார்த்தார். உள்ளே ஒரு பிளாஸ்டிக் பேப்பரில் 2000 ரூபாய் நோட்டுக்கட்டு ஐந்து வைக்கப்பட்டிருந்தது. பத்து லட்சம் ரூபாய்.

இப்போது தான் மகன் கொடுத்த வாக்கை நினைவுபடுத்தி வருத்தப்பட்டுக் கொண்டு இருந்தோமே, இந்த நேரமா கப் பார்த்து குரியரில் அவன் அனுப்பியதாக பத்து லட்சம்

வருகிறதே என்று நினைக்கையில் அவர் கண்களில் நீர் பெருகியது. ஆனால் அது அவன் அனுப்பியிருக்க முடியாது என்பதை அவர் அறிவார். கூர்ந்து அனுப்பிய தேதியைப் பார்த்தார். அவன் இறந்து இரண்டு நாள் கழித்து தான் அனுப்பப்பட்டிருக்கிறது. அவருக்கு ஒன்றும் புரியவில்லை. மாலையிட்டிருந்த மகன் புகைப்படத்தைப் பார்த்தார். அதில் அவன் புன்னகையுடன் அவரைப் பார்த்துக் கொண் டிருந்தான். எப்படியோ இறந்தும் அவர் மகன் கொடுத்த வாக்கைக் காப்பாற்றி விட்டான். அவர் கண்களில் பெருக ஆரம்பித்த நீர் குறையவில்லை...

விநாயகம் இரண்டு நாட்களாகப் பத்திரிக்கையில் அந்த முழுப்பக்க விளம்பரத்தைப் பார்க்கிறார். அதைப் பார்க் கையில் எல்லாம் அவர் மனம் பிரமித்தது. சாதாரணமாக பொருள் விற்பனைக்குத் தான் இதுபோன்ற முழுப்பக்க விளம்பரங்கள் இருக்கும். அல்லது அரசாங்கம் தங்கள் சாத னைகளைச் சொல்ல இப்படி முழுப்பக்க விளம்பரம் செய்வ துண்டு. ஆனால் முதல் முறையாக தர்ம காரியத்திற்கு முழு விளம்பரம் செய்திருப்பதை அவர் பார்ப்பது இதுவே முதல் முறை.

படிக்க வசதியில்லாத, தகுதி வாய்ந்த, ஏழை எளிய மாணவ மாணவியர்களின் கல்விக்காகும் செலவை முழுவதுமாக ஏற்றுக் கொள்வதாக ஒரு டிரஸ்ட் அறிவித்து அந்த விளம்பரத்தைச் செய்திருந்தது. விண்ணப்பிக்கும் முறையும் விளக்கமாகத் தரப்பட்டிருந்தது. டிரஸ்டின் பெயர் விநாயக் டிரஸ்ட் என்று எழுதியிருந்தது. கல்வி உதவித் தொகை பெறுபவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கல்வியை நாட்டுக்கு எதிராகவும், மானுட நன்மைக்கு எதிராகவும் பயன்படுத்த மாட்டோம் என்ற உறுதிமொழியை மட்டும் ஒவ்வொரு வருடமும் தங்கள் கைப்பட எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தர வேண்டும் என்பது மட்டுமே அந்த டிரஸ்டின் முக்கிய நிபந்தனையாக இருந்தது.

தொலைக்காட்சிகளில் கூட அந்த டிரஸ்டின் விளம்பரம் வந்து கொண்டிருந்தது. இரண்டு நாட்களாகத் தொலைக் காட்சிகளில் அந்த டிரஸ்டின் அறிவிப்பு குறித்துப் பலரும் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தார்கள். வெளிநாடுகளில் தொழில் செய்து வரும் சில இந்தியர்களின் கூட்டு முயற்சி தான் அந்த டிரஸ்ட் என்றும், அவர்கள் யாரும் தங்கள் பெயரை விளம்பரப்படுத்த விரும்பவில்லை என்றும் செய்தி வெளியாகியது. அந்தச் செய்தியும், அந்த டிரஸ்ட் நிபந்தனையாகச் சொன்ன உறுதிமொழியும் சேர்ந்து விநாயகம் மனதில் இந்தத் தேசத்திற்கு விடிவுகாலம் வந்து விட்டது

என்ற பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டது. இங்கிருந்து வெளிநாடுகள் சென்று தொழில் செய்தாலும் தாய் நாட்டை மறக்காமல், தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல், இப்படியொரு உன்னதமான காரியத்தைச் செய்திருப்பவர்களைக் கைகூப்பி வணங்கத் தோன்றியது.

நாளைக் காலையில் அவரும் வெளிநாடு போகப் போகிறார். அவருக்கு இந்த மண்ணை விட்டுப் போவதில் விருப்பமிருக்கவில்லை. ஆனால் வசந்த் அவரைக் கட்டாயப்படுத்திச் சம்மதிக்க வைத்து விட்டான். இனி இங்கிருப்பது ஆபத்து என்று அவன் சொன்னது ஏன் என்று அவருக்குப் புரியவில்லை. இத்தனை வருடம் இல்லாத ஆபத்து இனி மேல் எப்படி வரும்?

ஆனால் எஞ்சிய காலம் எத்தனை இருக்கிறது என்று தெரியாத நிலையில் இந்த வயதில் மகனுடன் போய் இருந்து கொள்வது தான் நல்லது என்று அவருக்கும் தோன்றியது. பல சமயங்களில் மகன் திரும்பியே வர மாட்டான் என்று கூட அவருக்குத் தோன்றியிருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் அவன் வருடக்கணக்கில் போனில் கூட அவரிடம் பேசாமல் இருந்திருக்கிறான். ஆனால் அவசியமான நேரங்களில் அவர் அழைக்காமலேயே எப்படியோ வந்து சேர்ந்திருக்கிறான். அவர் டைபாய்டு வந்து படுத்த போது அவன் வந்து

ஆஸ்பத்திரியில் சில நாட்களும், வீட்டில் சில நாட்களும் கூட இருந்து அவரைப் பார்த்துக் கொண்டது இப்போதும் அவர் மனதில் பசுமையாய் இருந்து மனதை நெகிழ்விக்கி றது. வெளியே அதிகம் காட்டிக் கொள்ளா விட்டாலும் பாச மானவன் தான். இப்போதும் கூடப் பாசம் இருப்பதால் தான் அவரை அழைத்துக் கொண்டு போக வருகிறான்...

அன்று இரவு தான் வசந்த் வந்தான். ”எல்லாம் பேக் பண் ணிட்டீங்களாப்பா?” என்று கேட்டான்.

அவர் தலையசைத்தார். அவன் அறைக்குச் சென்று பார்த்த போது ஒரு பழைய பையில் அவர் துணிமணிகளை மடித்து வைத்திருந்தார். அவனுக்குத் தெரியும் அவரிடம் இது தான் இருக்கிறதென்று. அவன் விலையுயர்ந்த நல்ல தோல் பைகள் இரண்டு கொண்டு வந்திருந்தான். ஒன்றும் சொல் லாமல் சம்மணமிட்டுத் தரையில் அமர்ந்து அவருடைய பழைய பையில் இருந்த துணிமணிகளை எல்லாம் புதுப் பையில் நேர்த்தியாக மடித்து வைத்தான். உள்ளே அம்மா வின் புகைப்படத்தையும் அவர் வைத்திருந்தார். அதையும், அவருக்கென்று அவனும் கொண்டு வந்திருந்த விலையு யர்ந்த புதிய துணிமணிகளையும் சேர்த்துப் புதிய பையில் மடித்து வைத்தான்.

“எனக்கு எதுக்கு இவ்வளவு டிரஸ்?” என்று கேட்டார்.

வசந்துக்கு சுந்தரமும், சம்பத்தும் நினைவுக்கு வந்து போனார்கள். இவரைப் படைத்த கடவுளால் அவர்களை எப்படிக் கூசாமல் படைக்க முடிந்தது....

“எல்லாம் என் கல்யாணத்துக்காக வாங்கினது...” என்று தலை திருப்பாமல் சொன்னான்.

விநாயகத்துக்கு நீண்ட நாள் மனக்குறை நீங்கியது. அவன் நிலாவின் புகைப்படத்தை அவரிடம் நீட்டினான். ”பேரு நிலா” என்றான். விநாயகம் வாங்கிப் பார்த்துத் திருப்தியுடன் திருப்பித் தந்தார். மகனுக்கு அந்தப் பெண் நல்ல பொருத்த மாக இருப்பதாகத் தோன்றியது.

ஒரு பையிலேயே அவரிடமிருப்பதும், அவன் வாங்கி கொண்டு வந்திருப்பதையும் சேர்த்து அடைத்து விட முடிந் தது. அவன் கொண்டு வந்திருந்த இன்னொரு புதிய பைக்கு அங்கே அவசியமே இருக்கவில்லை.

வசந்த் எழுந்து தந்தையருகில் உட்கார்ந்தான். அவர் முகத்தில் இங்கிருந்து போவதில் உள்ள வருத்தம் தெரிந்தது. அவரிடம் அன்பாகச் சொன்னான். “போய் சில வருஷங்கள்ல இங்கே திரும்பி வந்துடலாம். வருத்தப்படாதீங்க.”

அவன் வார்த்தைகள் அவருக்கு ஆறுதல் அளித்தன. கடைசி காலத்தை இந்த மண்ணில் தான் கழிக்க வேண்டும் என்ற ஒரு ஆசை அவருக்குள்ளே இருந்தது. அதற்கு வாய்ப்பிருக்கிறது என்ற நம்பிக்கை கிடைத்ததும் அவர் முகத்தில் நிம்மதி பரவியது.

அவர் முன்னால் இருந்த தினசரிப் பத்திரிக்கையில் அந்த டிரஸ்ட் விளம்பரம் முதல் பக்கம் முழுவதுமாக இருந்தது. “இதைப் பார்த்தீங்களா?”

விநாயகம் சந்தோஷமாகச் சொன்னார். “நல்ல காரியத்தைப் பண்றாங்க. பிள்ளையார் பக்தர்கள் போல இருக்கு. வெளிநாட்டு இந்தியர்கள் சேர்ந்து பல கோடி ரூபாய்ல இந்த டிரஸ்டை உருவாக்கியிருக்காங்கலாம் சரியா எவ்வளவுன்னு தெரியல...”

வசந்த் சொன்னான். “3401.64 கோடி”

# 29

விநாயகம் பிரமிப்போடு மகனைப் பார்த்தார். வசந்த் தொடர்ந்து சொன்னான். “அதுல இருக்கற விநாயக் பேரு, பிள்ளையாரை நினைச்சு வெச்ச பேரு இல்ல. இந்த டிரஸ்டை உருவாக்கினவன் அவங்கப்பா பேரை அதுக்கு வெச்சிருக்கான்”

அப்போதும் விநாயகத்துக்கு விளங்கவில்லை. யாரோ விநாயக் என்கிற புண்ணியவானின் மகன் தந்தை பெயரில் ஏற்படுத்திய டிரஸ்ட் என்றே நினைத்தார். வசந்த் சொன்

னான். "உங்க பேர்ல உங்க பிள்ளை ஏற்படுத்தியிருக்கற டிரஸ்ட் இது"

திகைப்போடு பார்த்த தந்தையிடம் முன்னால் மத்திய மந்திரி சுந்தரம் தன் லஞ்ச லாவண்யப் பணத்தை மகனிடம் கொடுத்துச் சேர்த்த கதையிலிருந்து ஆரம்பித்து அவன் அவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டது வரை எல்லாவற்றையும் வசந்த் சுருக்கமாய்ச் சொன்னான்.

"அப்பா அது இந்த நாட்டின் பாவப்பட்ட மக்களோட பணம். நான் "ஏமாத்தறவங்களை ஏமாத்தறது தப்பில்லை"ன்னு நினைச்சு தான் ஆரம்பத்துல அப்படிப் பண்ணினேன். அது சரின்னு தான் தோணுச்சு. ஆனா நிலா என் கிட்ட ஒரு நாள் "அது எப்படி சரியாகும்"னு கேட்டா. பாவப்பட்ட மக்களோட காசு மக்களுக்கே திரும்பிப் போனா தான் கணக்கு சரியாகும்னு சொன்னா. அது என்னை யோசிக்க வெச்சுது. "உயிரைப் பணயம் வெச்சு வேலை செஞ்சிருக்கேன்"னு அவ கிட்ட சொன்னேன். அதுக்கு அவ சொன்னா. "அதுக்குக் கூலி வேணும்னா வாங்கிக்கோங்க. முழுசுமே நீங்க வெச்சு கிட்டா மக்களைப் பொறுத்த வரைக்கும் உங்களுக்கும் சுந்தரத்துக்கும் என்ன வித்தியாசம்"னு அவ கேட்டா. "அவங்க பணம் சுந்தரம் சம்பத் கிட்ட இருக்கறதுக்குப் பதிலா உங்க கிட்ட இருக்குன்னா ரெண்டுமே அவங்களைப் பொருத்த

வரைக்கும் ஒன்னு தானே. அவங்க நஷ்டம் நஷ்டமாவே தான இருக்கும்”னு சொன்னா. உங்க மகன் சமுதாயத் துக்கு நல்லது பண்ணாதவனா கூட இருக்கலாம். அவங்க கிட்ட இருந்து திருடின பணத்தை வெச்சுட்டு சுகம் அனுப விக்க நினைக்கற அளவுக்கு கேவலமானவனா இருக்கறது சரியில்லைன்னு எனக்கும் தோணுச்சு.... இதுல கிடைச்ச மொத்தப் பணம் 3436 கோடி. அதை திருடுனவன் கிட்ட இருந்து மீட்டுக் குடுக்க உங்க மகன் எடுத்துகிட்ட நியாய மான கமிஷன் 1%. அதாவது 34.36 கோடி. .”

அவன் யாருக்கும் கணக்குக் காட்ட வேண்டியவன் அல்ல என்றாலும் இந்த உத்தமரிடம் கணக்குச் சொல்லி அவன் மனசாட்சியைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினான். நிலா நல்லவளாக இருந்து நியாயத்தை ஆணியடித்தாற் போல் சொன்ன போது, அவன் அவர் மகனாக இருந்ததா லேயே அதை மறுக்க முடியாமல் யோசித்து இந்த நல்ல காரியத்தை செய்திருக்கிறான். செய்த பின் அவர் என்ன நினைக்கிறார் என்பது அவனுக்கு அளிக்கப்படும் தீர்ப் பாய்த் தோன்றியது.

அவர் பல்வேறு உணர்ச்சிப் போராட்டங்களுடன் அவ னையே பார்த்துக் கொண்டிருந்தார். அவன் இடத்தில் அவர் இருந்திருந்தால் முழுப் பணத்தையுமே தான் டிரஸ்டுக்கு

மாற்றி இருப்பார். ஆனல் அவராக இருந்திருந்தால் இந்த வேலைக்கே போயிருக்கவும் மாட்டார். 3401.64 கோடியும் கூட மக்களுக்கு நல்லது செய்யத் திரும்பக் கிடைத்திருக் காது. எல்லாருமே கடமையைச் செய்கிறார்கள் என்றாலும் கூலியை யாருமே மறுத்து விடுவதில்லை. அவரே எத்த னையோ பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்திருந் தாலும் சம்பளம் வாங்கிக் கொண்டு தான் செய்திருக்கிறார். அந்த வகையில் அவன் கூலி எடுத்துக் கொண்டிருப்பதில் அவரால் குற்றம் காண முடியவில்லை.

சிலை போல் அமர்ந்திருந்த அவரிடம் அவன் தொடர்ந்து சொன்னான். ”மீதி 3401.64 கோடியை கவர்மெண்ட் கிட்ட ஒப்படைச்சா மறுபடியும் எத்தனையோ அரசியல்வாதிக திருடிட்டு போவானுகன்னு தோணுச்சு. அதனால கடை சியா எல்லாத்தையும் மாத்தின போலி கம்பெனிகள்ல இருந்த பணத்தை விநாயக் டிரஸ்ட்ன்னு ஒன்னை ஏற்ப டுத்தி அதுக்கு மாத்தினேன்....அதை நிர்வாகிக்க நாணய மான நல்ல ஆள்களைத் தேர்ந்தெடுத்து அவங்க கிட்ட டிரஸ்டை ஒப்படைச்சிருக்கேன்.... வட்டிப்பணம், இன் வெஸ்ட்மெண்ட்ல வர்ற டிவிடெண்ட் பணம் எல்லாம் சேர்ந்து வருஷத்தில் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் வரைக் கும் தந்து உதவ முடியும்.... ”

”ஆசிரியரான நீங்க எப்பவுமே படிப்புக்கு அதிக முக்கியத் துவம் தந்ததால உங்க பேர்ல ஆரம்பிக்கிற டிரஸ்ட் படிப் புக்கே பயன்பட்டடும்னு நினைச்சேன். ஆனா ஒன்னுப்பா. நீங்க கல்வி இந்தத் தேசத்தை காப்பாத்திடும்னு நம்புனீங்க. அது பொய்யான நம்பிக்கைப்பா. நான் பார்த்ததுல பெரிய அளவுல தப்பு பண்றவன் இந்தக் காலத்துல படிச்சவனா தான் இருக்கான். கல்வி தானா எவனையும் நல்லவனாக் கிடறதில்லை. சுந்தரமும், சம்பத்தும் பெரிய படிப்பு படிச்சவ னுக. அதனால நாட்டுக்கு என்ன நன்மை வந்துச்சு.? இந்த தேசத்தோட பிரச்சனை பணம் குறைவாயிருக்கறது இல் லைப்பா.... நல்லது செய்யணும்கிற உறுதியான மனசு இல் லாதது தான் குறையாய் இருக்கு...”

“இந்த பண உதவி வாங்கறவங்க கிட்ட வருஷா வருஷம் உறுதிமொழி வாங்கறது கூட நிஜமாவே எல்லாரும் அதைப் பின்பற்றுவாங்கங்கற நம்பிக்கைல இல்லை. நீங்க எப்ப வுமே சொல்வீங்கள்ள... நல்லதைச் சொல்லிட்டே இருக் கணும்... சில பேர் மனசுலயாவது ஓரமா அது தங்கும்.... அவங்க சந்தர்ப்பம் வர்றப்ப நல்லது செய்வாங்கன்னு... அதே மாதிரி இதுலயும் பத்துல நாலு பேராவது உதவி வாங்கியி ருக்கற நன்றியிலயும், உறுதிமொழி கொடுத்திருக்கோம்கிற மனசாட்சியிலயும் நடந்துக்குவாங்கங்கற நம்பிக்கைல தான் அதை ஒரு முக்கிய நிபந்தனையா வெச்சேன். அப்படி நாலு

நாலு பேரா நல்ல வழிக்கு வந்தாலும் நம்ம தேசம் எங்கேயோ போயிடும்னு நினைக்கிறேன். என்னப்பா சொல்றீங்க”

விநாயகம் கண்களில் நீர் கோர்த்தது. பல்லாயிரக்கணக்கானவர்கள் அவர் மகனால் பலனடையப் போகிறார்கள். அவர்களில் அவன் சொன்னது போல் சிலராவது கண்டிப்பாக நல்லது செய்பவர்களாக மாறுவார்கள். அவர் வாழ்க்கையில் செய்த நன்மைகளை விட அதிகமாக அவன் இப்போது செய்திருப்பதாய் அந்தத் தந்தைக்குத் தோன்றியது. அவனிடம் சொல்ல வார்த்தைகள் எதுவும் வராமல் பெருமிதத்துடனும் நன்றியுடனும் மகனைப் பார்த்து அவர் கைகூப்பினார்.

அவர் தீர்ப்பு கிடைத்து விட்டது. வசந்தின் கண்கள் குளமாயின. அவர் கூப்பிய கைகளை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

பேசியதில் நேரம் போனதே அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இப்போது விடிய ஆரம்பித்திருந்தது. இந்த விடியல் அவர்களுக்கும் நாட்டுக்குமாக நல்லதாக இருக்கும் என்ற நம்பிக்கையும் விநாயகத்துக்குப் பிறந்திருந்தது,